உ

சிவமயம்.

திருச்சிறுப்பள்ளி ஆண்டார்வீதியில் வசித்திருந்த
சோதிட தினபல கணிதவல்லவராகிய தியாகராஜ பிள்ளை
அவர்கள் அருளிச்செய்த

சுந்தர சேகரத்திற்கு மூன்ரும் பாகமாகிய

## தியாகராஜ சோதிட

# ஆனந்தக் களிப்பு.

மற்றும் சோதிட வித்வான்கள் நாடகத்தமிழ்பாவாகிய
ஆனந்தக்களிப்பு, நொண்டி, உடற்கூறு, திருப்புகழ், தூது,
கப்பல் வண்ணம், கண்ணி, ஏசல், சிந்து முதலிய
பலவர்ணமெட்டுகளாய் பாடியிருந்த சோதிட
சாஸ்திரங்களில் சிலபாகம் 308 பாட்டும்
சேர்த்து ஆக 608 பாட்டையும்
மலைக்கோட்டை ஜோஸ்யம்

மதுரைநாயகம்பிள்ளை குமாரர்

**ஜோசியம்-கோவிந்தசாமி பிள்ளை**

அவர்களால்

பிழையற பரிசோதிக்கப்பட்டு

திரிசிரபுரம் புஸ்தகவியாபாரம்

**தா. பொன்னுசாமி பிள்ளை**

அவர்களால்

---

ஸ்ரீ நிலையம் அச்சுயந்திரசாலையில்,
பதிப்பிக்கப்பெற்றது.

[ரிஜிஸ்டர் காப்பிரைட்.] **1937.** [விலை [illegible] 12.

உ

சிவமயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில் திருச்சினாப்பள்ளியில் நவாப்புசாயபு அவர்களிடம் ரூயிசம் உத்தியோகமாய் ஷை கோட்டை ஆண்டார்தெருவில் வசித்திருந்த முத்துலோகம் பிள்ளை குமாரர் வித்வசிரோன்மணியாகவும் சோதிட தினபலகணித பண்டிதராகவும் பிரசித்தபேர் விளங்கிய தியாகராஜ பிள்ளையவர்கள் தன்பெயர் புஸ்தக ரூபமாய் எப்போதும் விளங்கும் பொருட்டாய் ஜாதக கிரகநிலை பலாபலனை யாவருமெளிதில் உணரும் பொருட்டாய் தியாகராஜ சோதிட ஆனந்தக்களிப்பு என்றுபாடிய 300 பாட்டு முன் நான் அச்சிட்டு ரிஜிஸ்டர் செய்திருப்பதையும் மற்றும் சோதிட வித்வான்கள் நாடகத்தமிழ் பாவாகிய ஆனந்தக்களிப்பு, நொண்டி, உடற்கூறு, திருப்புகழ், தாது, கப்பல் வண்ணம் கண்ணி எசல் பலவர்ணமெட்டுகளாய் பாடியிருந்த சோதிடசாஸ்திரங்களில் 308 பாட்டுகள் சிலபாகத்தையும் சேர்த்து 608 பாட்டாக அடியில் கையொப்பமிட்ட என்னால் அச்சிற் பதிப்பிக்கப்பட்டு மகாகனம் பொருந்திய கவர்ன்மெண்டாரின் 1867-௵த்திய 25-வது ஆக்ட்டு 20-வது பிரிவு, 6-வது விதியின்படி ரிஜிஸ்டர் காப்பிரைட்டு என்னும் சுதந்திரம்பெற்று 3-வது தடவை ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இதனை எந்த அச்சுக்கூடத்தலைவர்களும் மற்றவர்களும் எனது அனுமதியன்றி முழுமையும் அல்லது இதில் சில பாகத்தையாவது அச்சிடக்கூடாது. அப்படி மீறி அச்சிடுவார்களானால் சட்டப்படி நடத்தி சகல நஷ்டத்தையும் வாங்குவதுடன் கிரிமினல் குற்றத்திற்கும் பாத்தியப்படும்படி செய்யப்படும்.

தா. பொன்னுசாமி பிள்ளை,

புஸ்தக வியாபாரம்,

தெப்பகுளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

---

## புத்தக விளம்பரம்.

| | | | |
|---|---|---|---|
| சுந்தரசேகரம் முதற்பாகம் | 0 | 12 | 0 |
| ஷை 2-ம் பாகம் தியாகராஜ சேகரம் | 0 | 12 | 0 |
| ஷை 3-ம் பாகம் தியாகராஜ சோதிட ஆனந்தக்களிப்பு | 0 | 12 | 0 |
| புலிப்பாணி சோதிடம் 300 | 0 | 12 | 0 |
| கந்தர் ஆரூடம் 300 | 0 | [illegible] | 0 |
| சோதிடமாலை எசல் | 0 | 4 | 0 |
| காக்கையர் நூல். | 0 | 4 | 0 |

## சோதிட ஆனந்தக்களிப்பில் அடங்கிய பொருள்

## அட்டவணை.

பக்கங்கள்.


| | |
|---|---|
| ஆட்சி—உச்சம்—நட்பு நீச்சம் பகை | 5 |
| நவக்கிரகங்களின் நிலைமை | 7—10 |
| கூட்டக்கிரகபலன் | 10—25 |
| லக்கனகோள் நிலைப்பலன் | 25—30 |
| ஆதிபத்தியம் | 30—33 |
| லக்கனத்தில் கிரகங்கள் கூடியும் தனித்தும் நிற்கும்பலன் | 33—34 |
| கரும்பாம்பு நிலைமை பலன் | 34—36 |
| செம்பாம்பின் நிலைமை | 36—43 |
| அரசன் கொடியை சீமான் கொடியை பழித்தல் | 43 |
| கோடீஸ்வரன் ஷெ அரசன் | 43 |
| நீசபங்கம் | 43—44 |
| கோசாரபலன் | 44—45 |
| அவயோக உடற்கூறு | 46—47 |
| புத்திரபாவம் ஆனந்தக்களிப்பு | 48 |
| ஆயுட்பாவம் உடல் உயிர்திசை மாரகவிதி | 49—56 |
| காலச்சக்கிரதிசை நொண்டி | 56—61 |
| குருவை சீஷன் சாஸ்திர கேள்வி உடற்கூறு | 62—64 |
| நாலவன் யெட்டவன் திசை நொண்டி | 64 |
| யோகத்திருப்புகழ் | 65—74 |
| அவயோக திருப்புகழ் | 74—77 |
| பாலாஷ்டதாது | 77—79 |
| மத்திமஆயுசு ஈரடிகப்பல் | 80—83 |
| களத்திரபாவம் கப்பல் | 83—85 |
| களத்திரபாவம் வண்ணம் | 85—86 |
| களத்திரபாவம் கண்ணிகள் | 86—87 |
| ஆயுட்பாவம் ஏசல் | 87—90 |
| மத்திமஆயுசு பாவம் நொண்டி | 90—92 |
| நவக்கிரகங்களின் நாமதேயங்கள் நவக்கிரக நாம சூட்சமம் சூசிகை. | 92—96 |


உ

சிவமயம்.

சுந்தரசேகரத்திற்கு மூன்றும் பாகமாகிய

## தியாகராஜ

# சோதிட ஆனந்தக்களிப்பு.

சங்கர சங்கர சப்பு—சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு.

### துதி-கவி.

தேவிபராசத்தி போற்றி-திவ்விய
தேசோ மயானந்த சிற்குண சத்தி
நாவில் விளையாடுஞ் சூலி-நாயேன்
கவிலுந் தமிட்கருள் செய்வாய் நீ தாயே சங்கர. (1)

### காப்பு.

சீர்பெருஞ் சோதிடவுண்மை-கோள்கள்
செம்மையாய் பதிதனில் துலங்கி நின்றாலும்
பூர்வ புண்ணியத்தின் படியாம்-சித்தர்
புகட்டினார் அம்சங்கள் உறுதியாய் நம்பு-சங்கர. (2)

இராசி பனிரெண்டுக் குள்ளே-மாதே
இரத்தினம்போலத் துலங்கும் நவக்கோள்கள்
வாச மலரயன் தானும்-வஞ்சி
வகுத்து வைத்தாரிந்த காலநிர்மாணம்-சங்கர. (3)

கோள்கள் விதிநிலைப் பாரு-அவர்
குக்கிருந்த ராசி குறியாகத் தேரு
தாழ்வதும் முயர்வதும் பாரு-பூவில்
திராசு முள்போலச் செப்ப சொன்னார்கள்சித்தர்-சங்கர. (4)

### ஆட்சி-உச்சம்-நட்பு-நீச்சம்-பகை.

கதிருக்கு மேடமு முச்சம்-மாதே
கணமுள்ள பௌமனுக் கவ்வீடு ஆட்சி
மதிமகன் வெள்ளிக்கி நட்பு-அன்றாள்
மாங்கோள்கள் நிலைபேத மறைகிறேன்கேளு-சங்கர. (5)

மதி குரு பாம்புமே பகையாம்-மாதே!
மகத்தான சனியனுக் கவ்வீடு நீசம்
விதிகள் நிலைபிசகாது-வஞ்சி
விளங்கு நீசத்துக்கு கால்பலன்செப்பு-சங்கர. (6)

எருதுமே சோமனுக் குச்சம்-மாதே
இதமுள்ள அசுர குருவுக்கு ஆட்சி
கருதும் குரு சனி சேயும்-அன்றுள்
கணமுள்ள புந்திக்கு மவ்வீடு நட்பாம்-சங்கர. (7)

பருதிக்கி பகையுமே ஆகும்-மாதே
பலமுள்ள பாம்புக்கு விடமில்லை நீசம்
உருதிமொழி பிசகாது-பூவில்
உத்தமர் வாக்கும் பிசகுவராது—சங்கர. (8)

புந்திக்கிமிதுனமு மாட்சி-மாதே
புகழ் குரு மதி வெள்ளி சேயு மல்லாமல்
மைந்தனும் பாம்புமே நட்பு-துலங்கும்
மகத்தான கதிருக்கு பகையாகுந்தோழி-சங்கர. (9)

அரசனுக் கடகமும் உச்சம்-மாதே
அம்புலிக்காட்சியும் புதனுக்கு நட்பு
பருதி வெள்ளி சனி பாம்பும்-நால்வர்
பகையாகும் பவுமனு நீசனும் தோழி-சங்கர. (10)

சிங்கத்தில் வெய்யோனுக் காட்சி-மாதே
சிறந்த குருவுக்கு நட்பாகும் பாரு
திங்கள் சேய் சனியனும் பாம்பு-அன்றும்
தேர்ப்பாகன் வெள்ளியும் பகையாகுந் தோழி-சங்கர. (11)

கன்னியில் புதனுச்ச மாட்சி-மாதே
அரசன் சேய் மதிமந்த னரவுமே-நட்பு
கன்னியில் சுடர்கதிர் பகையாம்—சொலிக்கும்
கணமுள்ள வெள்ளிக்கி பெலநில்லை நீசம்-சங்கர. (12)

கோலினின் முடவனு முச்சம்-மாதே
குலவிய சுடர் வெள்ளிக் காட்சியா மில்லு
மாலவன் குரு சுங்கன் பாம்பு-துலங்கும்
மகத்தான நால்வரும் நட்பாகச் செப்பு-சங்கர. (13)

சிலமாய் மதி வந்துநிற்க-மாதே
தெளிவில்லை பகையாகுஞ் சிவனருளாலே



சாலவே வெய்யோனும் நிற்க—சித்தர்
சாற்றினர் நீசம் தப்பாது தோழி—சங்கர. (14)

தேளினிற் கரவுமே யுச்சம்—மாதே
திடமாகச் செப்புவாய் செவ்வாய்க்குச் சொந்தம்
மாலவன் சுடர் வெள்ளி யிருவர்—நிற்கில்
மகத்தான வீடதும் நட்பாகுஞ்சூடு—சங்கர. (15)

தனுவில் குருபதி ஆட்சி—மாதே
தினகரன் மாமதி வெள்ளியும் பாம்பு
சனி புத னுறுபேர் நட்பு—பூவில்
சாற்றினேம் செவ்வாய்க்கி பகையாகுந் தோழி—சங்கர. (16)

மகரம் குசனுக்கு உச்சம்—மாதே
மகத்தான பதியுமே மந்தனுக் காட்சி
பகருவேன் வெள்ளியும் புந்தி—சொலிக்கும்
பாம்புடன் மூவரும் நட்பாகும்பாரு—சங்கர. (17)

செகங்கார்க்குங் கதிரவன் திங்கள்—மாதே
சென்றிட அம்மனே பகை கசப்பாகும்;
தவமுள்ள அரசனும் நீசம்—பூவில்
தயங்குவார் மயங்குவார் செப்புவாய்தோழி—சங்கர. (18)

சனியனு மாசியி லாட்சி—மாதே
செங்கதிரோன் வெள்ளி குருபுக்திநட்பு
குனிதம்விதி பிசகாது—குடம்
குசன் சோமன் பாம்புக்கு பகையாகுந்தோழி—சங்கர. (19)

பங்குனிலுச்சம் புகர்க்கு—மாதே
பகரும்பரம குருவுக்கு ஆட்சி
திங்கள் கதிர் சனி மூவர்—பூவில்
திடமாகசெப்புவேன் நட்பாகுஞ்சூடு—சங்கர. (20)

மங்களன் பகை கசப்பாகும்—மாதே
மகத்தான புந்திக்கி ஒழிவில்லை நீசம்
தங்கும் கோள்நிலை பேதம் ஆய்ந்து—பூவில்
தர்மவான் நிலையை அறிந்துசொல் தோழி—சங்கர. (21)

சூரியன் நிலமை.

பத்தும் பதினொன்று மூன்று—அன்றும்
பகருமோ ராரில் பகலவன் நிற்க

எத்திப்பணம்பரிப்பானும்—சென்மன்
இதமாக வாழுவன் விதிவிர்க்கம்தோழி—சங்கர. (22)

வாழ்வது மல்லாமல் பின்னும்—மாதே
வளமான புத்திரர் அரசனு லாபம்
தாழ்வுவாராது குடியில்—சென்மன்
தாயாதி சத்துரு பங்கஞ்சொல் தோழி—சங்கர. (23)

பங்கம் பனிரெண்டு ஒன்று—அன்றும்
பஞ்சமம் பாக்கியம் ரெண்டேழில் கதிரோன்
அங்கத்தில் காந்தலுமுண்டு—சென்மன்
அதிஷ்டவானும் நித்திரை கனவுமேகாண்பன்—சங்கர. (24)

கன்வும் கண்ணையும் சிரங்கு—மாதே
கடுந்துஷ்டன் குலையினர் பகையுமே யுண்டாம்
மனதில் நினைந்தது முடியும்—பூவில்
மகத்தான கதிர்நிலை யறிந்துசொல்தோழி—சங்கர. (25)

சந்திரன் நிலைமை.

மதிமூன்று ஐந் தேழு லாபம்—மாதே
மகத்தான வாதி மணி மந்திரமுள்ளோன்
எதிரிக்கி மார்பிணி லாணி—சென்மன்
இதமாக வாழுவன் யேகனாய் நிற்கில்—சங்கர. (26)

செவ்வாய் நிலைமை.

பார்மகன் பத்து மோராறில்—மாதே
பகரும் பதினொன்றில் உச்சனாய் நிற்கில்
சீர்பெருஞ் செல்வமுமுள்ளோன்—சென்மன்
செகமாளு மரசனால் சத்துரு பங்கன்—சங்கர. (27)

ஒன்று பனிரெண்டு எட்டும்—மாதே
ஒரேழு தனம் நாலில் உதித்தசேய் அதனால்
பண்டு பொருள் பணைநஷ்டம்—சென்மன்
பதியாளால் பல்துன்பம் பகருவாய் நஷ்டம்—சங்கர. (28)

நஷ்டம் பலவித கஷ்டம்—மாதே
நற் செவ்வாய் மூன்றில் அமர்ந்திருந்தாலும்
கஷ்டம் சகோதிர நஷ்டம்—பூவில்
கனமுள்ள பிதிருக்கு கண்டஞ்சொல் தோழி—சங்கர. (29)



வியாழ நிலைமை.

திரிகோணம் தனலாபம் கேந்திரம்—மாதே
திடமாக தேவகுருபதி நிற்க
பரிபணை காடியு முண்டு—சென்மன்
பதிபோல வாழுவன் பங்கமும்கேளு—சங்கர. (30)

பங்கம் பனிரெண்டில் தோஷம்—மாதே
பகரும் மனைவிக்கி கண்டமுஞ் செப்பு
தங்குமோ ராறுக்குத் துன்பம்—பூவில்
திடமாகச் செப்புவாய் எட்டிலும் வேதை—சங்கர. (31)

சனி நிலைமை.

மூன்றாறு பன்னொன்று நிதிலும்—மாதே
முடியுள்ள மந்தன் அமர்ந் திருந்தாலும்
தோன்றும் குழவிக்கி யோகம்—சென்மம்
தொல்பூவில் தனவானும் பிதிர்தோஷம் தோழி—சங்கர.(32)

பத்தில் மகத்தான நீலன்—மாதே
பகரும் அரசனால் செம்பொன்னும் லாபம்
குத்துமுலைமாதே கேளீர்—சென்மன்
குவலயத்தில் ரதம்பரி காடியுள்ளோன்—சங்கர. (33)

வியம் ரெண்டு எழெட்டும் அன்றுன்—மாதே
விளங்குமோர் நான்கினில் வீற்றிருந்தாலும்
குயவன் விதி பிசகாது—மாதே
கொலைவழி வாதநோய் நாயுங்கடிக்கும்—சங்கர. (34)

கடிக்கு மல்லாமலும் பின்னும்—மாதே
கனமுள்ள அன்னைக்கி கண்டமோர் நான்கில்
பிடிவாதன் சென்மனும் ஞானி—பூவில்
பெரியோரைத்தேடி யலைவானும் தோழி—சங்கர. (35)

அலையும் ரெண்டேழினில் நீலன்—மாதே
அன்புள்ள மனைவியும் மடிவாளாம் யில்லில்
குலையுமோ ரெட்டுக்கு மாதே—சென்மன்
குமரியுந்தாலி யறுப்பாளாந் தோழி—சங்கர. (36)

பனிரெண்டில் பொல்லாத நீலன்—மாதே
பலுகாது மாடாடு விளைவுகள் குன்றும்
குணிதம் விதி பிசகாது—சென்மன்
குமரிக்கி வினைதுன்பம் கூறுதற்றோழி—சங்கர. (37)

புதன் நிலமை.

கணக்கன் கொடுமையைக் கேளு—மாதே
கனமுள்ள பனிரெண்டு எட்டாறில் நிற்க
கணக்குவழக்காலுந் துன்பம்—சென்மன்
கடுப்பும் பலரோகம் காண்பிப்பான் தோழி—சங்கர. (38)

காண்பது கேந்திர கோணம்—மாதே
அரசரு லாபம் கவிதையுமுள்ளோன்
உண்பது சுகவானாய் வாழ்வன்—சென்மம்
உத்தமனாந் தம் மாமனும்விர்த்தி—சங்கர. (39)

சுக்கிர நிலமை.

வெள்ளி திரிகோணம் கேந்திரம்—மாதே
விளங்கும் தனலாபம் வீற்றிருந்தாலும்
வெள்ளிரச பாத்திரம் கொள்வன்—பூவில்
விளங்குந் தண்டிகைகாடி புரவியு முள்ளோன்—சங்கர. (40)

பனிரெண்டு யெட்டாறு மூன்றும்—மாதே
பலதுன்பம் வெதர்நோய் மகோதிரம் பாண்டு
குணிதம் விதிபிசகாத—சென்மன்
குமரிக்கி கண்டஞ்சொல் அசுரகுருவால்—சங்கர. (41)

சூரியன் சந்திரன்.

கதிர்மதி யிருவர்கள்சேர—சென்மன்
கனவானும் தனவானும் இயல்புடையோனும்
விதியும் நிதிபணையுண்டு—மாதே
விளங்கும் தேய்மதியினால் பலன்குன்றிப்போகும்—சங்கர. ()

சூரியன் வியாழன்.

தினகரன் குருவோடு சேர—சென்மன்
திரவியவான் வெகு மானியாம் சுத்தம்
பணமும் புதைப்பொருளுண்டு—மாதே
பரமகுரு நிலையறிந்து சொல்தோழி—சங்கர. (43)

சூரியன் சுக்கிரன்.

கதிரொடு வெள்ளியும் சேர்ந்து—மாதே
கட்டாக ஒரில்லில் கலந்திருந்தாலும்
பதியாவள் வசியமுஞ்செய்து—சென்மன்
பந்துஜனங்களை பகைகொள்வன்தோழி—சங்கர. (44)



செவ்வாய் சூரியன்.

சேயோடுவெய்யோனுசேர—பூவில்
சென்மன் கபடன் கொடியனும்—வஞ்சன்
ஆயன்விதிநிலை கூர்ந்து—மாதே
அஞ்சுக்கு அஞ்சோனை யறிந்துசொல் தோழி சங்கர. (45)

மதி சுக்கிரன்.

மதியோடு சுங்கனும் சேர—பூவில்
மன்னர்கள் யாரையுந் தூஷணஞ் செய்வன்
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
விஷமனும் தரித்திரன் விளம்புவாய் தோழி சங்கர. (46)

மதி புதன்.

மதிபுத னிருவர்கள் கூடில்—சென்மன்
மானிலத்தில்தூதன் புலவனும் பொய்யன்
பதியோ ரிருப்பிடம் கூர்ந்து—மாதே
பகருவாய் விதியை பண்பாகத் தோழி சங்கர. (47)

செவ்வாய் சனி.

சேயும் சனியு மிருவர்—மாதே
செழிக்குங் கிரியி லெதுவிருந்தாலும்
ஆயன் விதிநிலைகூர்ந்து—சென்மன்
அவனில் நல் வித்வான் பாடகன் தோழி சங்கர. (48)

சுக்கிரன்.சனி.

அசுரகுரு நீலன்சேர—சென்மன்
அவமான களத்திர முடையவன் துக்கி
குசவன் விதிக்கென்ன செய்வோம்—ஜொலிக்கும்
குடிநாதனிலைபேத மறிந்துசொல் தோழி சங்கர. (49)

வியாழன் சனி.

குருவோடு நீலனுஞ்சேர—மாதே
குழவிக்கி புத்திர தோஷமுஞ் செப்பு
தருமர்னால் மொழிபிசகாது—பூவில்
கிராசுமுள்போல செப்பச்சொன்னார்கள் சங்கர. (60)

அட்டமாதிபதி சந்திரன்சேர.

விதிமதி இருவர்கள்சேர—மாதே.
விளங்கு மோர்கிரியில் வீற்றிருந்தாலும்

பதியனுக் குள்ளாக மந்திரி—ஜென்மன்
படைவீரசேனை பதியென்றுரைத்தேன்—சங்கர. (51)

சந்திரன் சனி.

மதியன் சனிய திருவர்—கூறும்
மலைக்கி இருநாலி லமர்ந்திருந்தாலும்
நதியில்வீழ்ந் திறப்பாண்டி ஜென்மன்—மாதே
நல்லோர்கள் நோக்க நகருஞ்சொல் தோழி சங்கர. (52)

சூரியன் சனி.

வெய்யோன் சனிய னிருவர்—ஜொலிக்கும்
விளங்குமோ ராசியில் வீற்றிருந்தாலும்
அய்யமில்லாமலே பேசி—ஜென்மன்
அவனியில் கழைக்கூத் தாடுவான் தோழி—சங்கர. (53)

சந்திரன் செவ்வாய்.

நல்லமதி சேயுங்கூட—இருவர்
நல்லகிரியி லமர்ந்திருந்தாலும்
நல்லகுல மனைதிடமும்—ஜென்மன்
நன்னாட்டில் பாக்கிய வானென்றுகூறு—சங்கர. (54)

சனி புதன்.

சனியோடு புந்தியுமேவ—மாதே
சத்துரு யில்லையாந் தனவானுக்கவியோன்
குணிதங்கள் செய்குவனிவனால்—ஜென்மன்
கூக்குரல் தொனியொடு கூவுவான் தோழி—சங்கர. (55)

வியாழன் புதன்.

குருபதி புந்தியைக்கூட—செப்பும்
குமரனழகனும் பாக்கியவானும்
அறிவும் நிதானங்களுள்ளான்—பூவில்
ஆலயந்தொழுகுவன் அரைத்தாண்டி தோழி—சங்கர. (56)

சுக்கிரன் புதன்.

வெள்ளியும் புந்தியைச்சேர—ஜென்மன்
வினோத வசனனும் பாடகன்நேசன்
வெள்ளிரச பாத்திரங்கொள்வன்—மாதே
வினோதங்கள் செய்ய யூகஞ்செய்வாண்டி—சங்கர. (57)



வி—சு.

குருபதி வெள்ளியைக்கூடில்—ஜென்மன்
குணவானும் அழகன் தனவானுஞ் செயலான்
பருவத்தில் வேட்டலுமுண்டு—மாதே
பக்தர்கள் தொண்டனும் பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (58)

அஷ்டமாதிபதி செவ்வாய்.

விதியோனு சேயு மிருவர்—விதிக்கும்
விளங்கும் வியமாறு எட்டினிலேற
எதிரிகை அம்பாலே மாய்வன்—ஜென்மன்
இரந்துபரகெதி அடைவாண்டிதோழி—சங்கர. (59)

கு—சந்திரன்.

குருமதி யிருவர்கள்கூடில்—ஜென்மன்
குலவானும் சாது பெரியோர்க ளன்பன்
சிறுவனுக்குப்புத்திரபாக்கியம்—மாதே
திடமாகச்சொல்லச் சொன்னாண்டிதோழி—சங்கர. (60)

செ—குரு.

சேயொடு வேந்தனுஞ்சேர—இருவர்
சேர்ந்து மோர்கிரியில் அமர்ந்திருந்தாலும்
சேயன் வெகுகுணவானும்—புகழும்
செய்யுளுடையவன் சோதிடனவன்—சங்கர. (61)

செ—புதன்.

சேயொடு மதிமகன்சேர—இருவர்
செழிக்கு மோர்க்கிரியில் சேர்ந்துநின்றாலும்
சேயன் தனவானும் நாட்டில்—நல்ல
தேசத்து மன்னர்க்கு பண்டிதனவன்—சங்கர. (62)

சூரியன—புதன்.

கதிரொடு மதிமகன் சேர்ந்து—நல்ல
கனமுள்ளநாலினு மிருநாலிலொன்றில்
பதிநிதிபணியுமேயுண்டு—ஜென்மன்
பாக்கியவானென்று பகர்ந்தாண்டிதோழி சங்கர. (63)

செ-சுக்கிரன்-சனி.

சேயோடு வெள்ளியுஞ்சேர—மாதே
ஜென்மன் அசடனும் தாதுருவாதி

சேயோடு நீலனுஞ்சேர—பூவில்
செப்புவாய்பாடகன் சஞ்சலன்தோழி—சங்கர. (64)

சூ-செ-பு மூன்றுபேர் சேர்ந்தபலன்.

வெய்யோனுஞ்சேயும் புதனும்—மூவர்
விளங்குமோர்கிரியில் வீற்றிருந்தாலும்
அய்யமில்லாமலே வாழ்வன்—சென்மன்
அதிர்ஷ்டவானும்புத்திர யோகவான் தோழி—சங்கர. (65)

செ-பு-வெள்ளி.

சேயும்புதன் வெள்ளிமூவர்—இவர்கள்
செழிக்குங்கிரியி லெதுவிருந்தாலும்
ஆயன்விதி பிசகாது—சென்மன்
அங்கமும்யீனஞ் சொன்னண்டிதோழி—சங்கர. (66)

சூ-ச-சனி.

வெய்யோனிலவும் சனியும்—மூவர்
விளங்குமோர்கிரியி லமர்ந்திருந்தாலும்
அய்யமில்லாமலே வாழ்வன்—சென்மன்
அரசனுக்குசேனு பதிமந்திரிதோழி—சங்கர. (67)

சூ-ச-சனி.

வெய்யோனிலவும் சனியும்—மூவர்
விளங்குமோர்கிரியில் வீற்றிருந்தாலும்
அய்யம்மொருக்கா லெடுப்பன்—சென்மன்
அவனியில்தேசாந்திரி குணயீனன்தோழி—சங்கர. (68)

செ-சு-கு.

சேயன்வெள்ளி ரவிமூவர்—சொல்லும்
செழிக்கு மோர் அகத்தினில் சேர்ந்திருந்தாலும்
வேகமுடையவன் யோகன்—சென்மன்
விளங்கும்குலவானும் ரோகவான்தோழி—சங்கர. (69)

செ-சனி-ரவி.

சேயுஞ்சனி ரவிமூவர்—செப்பும்
சிகரத்திலொருமித்து சேர்ந்துநின்றாலும்
சேயுந்தனவானும் ரோகன்—மாதே
சேர்ந்தபந்துஜன ,ஆசைகொள்வாண்டி—சங்கர. (70)

வி-பு-சூ.

குருவும்கணக்கனும் வெய்யோன்—மூவர்
குணமாக ஓர்குன்றில் கூடிநின்றாலும்



பெருகுந் தனம்நிதிபணியும்—சென்மன்
பிரபலமாகவே வாழ்வாண்டிதோழி—சங்கர. (71)

குரு-சு-புதன்.

குருவொடு சுங்கனும் புந்தி—மூவர்
குணமாக ஓர்குன்றில் குடியிருந்தாலும்
பருவத்தில் வேட்டலுமுண்டு—மூவர்
பாக்கியவான் சௌபாக்கியவானும்—சங்கர. (72)

செ-சனி-சுக்கிரன்.

சேயொடு சனி சுங்கன் சேர—நல்ல
சென்மனும் பெற்ற பிள்ளையோ துஷ்டன்
ஆயன் விதிபிசகாது—எனக்
கறைந்தாண்டியானந்தங் கொண்டாண்டிதோழி—சங்கர.(73)

வி-சனி-புதன்.

குருவோடு நீலனும் புந்தி—மூவர்
குணமாக ஓர்குன்றில் குடியிருந்தாலும்
பெருமையுண்டு சத்தியவாக்கன்—சென்மன்
பிரட்டுகள் செய்யாண்டி ஷன்மாற்கன்தோழி—சங்கர. (74)

சு-புந்தி-சனி.

அசுரகுரு புந்தி நீலன்—மூவர்
அன்பாகவோரகம் அமர்ந்திருந்தாலும்
பசுபொன்னும் மெத்தவுமுண்டு—சென்மன்
பதியோனைப் பார்த்துப் பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (75)

வி-சு-சனி.

குருவோடு நீலனும் வெள்ளி—மூவர்
குணமாக வோர்குன்றில் குக்கிநின்றாலும்
பருவப்பிராயத்தில் சென்மன் —மாதே
பாக்கியவானென்று பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (76)

செ-சந்திரன்-சூரியன்.

சேயன் நிலவும் ரவியும் மூவர்
சிறுமலை சிகரத்தில் சேர்ந்திருந்தாலும்
சேயன் சொல்வார்த்தைகள்வீணன்—சென்மன்
சிறியகிராமத்தில் கீர்த்திமான்தோழி—சங்கர. (77)

சூ-சந்திரன்-புதன்.

வெய்யோ னிலவும் கணக்கன்—மூவர்
விளங்குமோர் கிரியில் வீற்றிருந்தாலும்

அய்யமில்லாம லரசன்—சென்மன்
அரசர் சமானனாய் வாழ்வாண்டிதோழி—சங்கர. (78)

குரு-சந்திரன்-சூரியன்.

குருவும் நிலவும் ரவியும்—மூவர்
குணமாக ஒர்குன்றில் குக்கிருந்தாலும்
பெருகும் இராஜவெகுமானன்—சென்மன்
பிரபுசேர்வை நல்ல யோக்கியன்தோழி—சங்கர. (79)

அஷ்டமாதி-சுக்கிரன்-சூரியன்.

விதியும் வெள்ளி ரவிமூவர்—ஜொலிக்கும்
விளங்கு மோர்கிரியில் வீற்றிருந்தாலும்
சொல்லுந் துற்சனனாவன் காமி—சென்மன்
சுந்தனாய்நின்றாலும் சுகவானைப்பாரு—சங்கர. (80)

சு-சந்திரன்-புதன்.

வெள்ளி மதி புதன்மூவர்—ஜொலிக்கும்
விளங்கு மோர்கிரியில் வீற்றிருந்தாலும்
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
விளங்கு மோர்பூமிக் கரசனாந்தோழி—சங்கர. (81)

செ-சு-சனி.

சேயுங் கணக்கனுநீலன்—மூவர்
செழிக்குங் கிரியி லெதிலிருந்தாலும்
சேயன் பூவில் விலைபடுவான்—மாதே
சேர்ந்தபந்துயீனம் சொல்லுவார்தோழி—சங்கர. (82)

செ-சந்திரன்-சனி.

சேய் மதி நீலனு மூவர்—மாதே
செழிக்கும் மோரகத்தினிற் சேர்ந்திருந்தாலும்
ஆயன்விதிக்கென்னசெய்வோம்—சென்மன்
அவமான மடைகுவ னறைந்தாண்டிதோழி—சங்கர. (83)

செ-சந்திரன்-சுக்கிரன்.

சேய் மதி வெள்ளியு மூவர்—மாதே
செழிக்குங் கிரியி லெதிலிருந்தாலும்
சேயன் சஞ்சலனாங் காமி—பூவில்
சென்மன் கணவி மீனமாந்தோழி—சங்கர. (84)



செ-வி-சந்திரன்.

சேய் குரு இந்துடன் மேவ—மாதே
சென்மன் சொல்வாக்கு விஷமொழிறோகி
சேயன் வெகுபொல்லா துஷ்டன்—பூவில்
செழிக்குஞ் சந்திரனையும் அறிந்துசொல்தோழி—சங்கர (85)

செ-சந்திரன்-பு.

சேய் மதி புந்தியு மேவ—பூவில்
சென்மன் துற்காமியாம் தரித்திரன்பாவி
ஆயன்விதிபிசகாது—மாதே
அரைந்தாண்டியானந்தங் கொண்டாண்டிதோழி—சங்கர. (86)

சந்திரன்-சு-சூரியன்.

அம்புலி வெள்ளியும் வெய்யோன்—மூவர்
அன்பாக ஒர் அகம் அமர்ந்திருந்தாலும்
வம்புவழக்காலேகாசு—விரயம்
வாதாடுவான்பாலி தனவானாந்தோழி—சங்கர. (87)

சந்திரன்-வி-சூ.

நிலவும் வியாழனும் வெய்யோன்—மூவர்
நிட்சம் ஒர்கிரியில் யிணங்கியிருந்தாலும்
உலகாளும் அரசனாலாபம்—மாதே
உத்தமர் நேசனும் உரைத்தாண்டிதோழி—சங்கர. (88)

சந்திரன்-சூ-புதன்.

வெண்மதி சூரியன் புந்தி—மூவர்
விளங்கு மோர் கிரிதனில் வீற்றிருந்தாலும்
உண்மையைச்செப்புவேன் கேளா—சென்மன்
உலகாளும்ராஜ சமானனாந்தோழி—சங்கர. (89)

வி-சந்திரன்-புதன்.

குரு மதி புந்தியு மேவ—மாதே
குமரன் தன் நேத்திரம் அழகாயிருக்கும்
சிறுவன்சொல்வார்த்தையும் அமிர்தம்—பூவில்
சிறப்பாக வாழ்வாண்டி தனமுடன்தோழி—சங்கர. (90)

புதன்-சந்திரன்-சனி.

புந்தியும் மதி சனி மேவ—மாதே
புலவனும் வெகுமானி சுகவானாந் தனவான்
குந்தகமில்லாமல் வாழ்வன்—பூவில்
குழவிக்கி கறுமனை கூர்ந்து சொல்தோழி—சங்கர. (91)

வி-சுக்கிரன்-சந்திரன்.

குரு மதி வெள்ளியுஞ் சேர—மாதே
குலவானும் யோக்கியன் குணவானும் குயனுல்
பருவப்பிராயத்தில்சென்மன்—பூவில்
பாக்கியமுண்டென்று பகர்ந்தாண்டி தோழி—சங்கர. (92)

வி-சந்திரன்-சனி.

குரு மதிநீலனுஞ் சேர—மாதே
குவலயத்தில் சென்மன் வாய்சாலன்எத்தன்
பருவப்பிராயத்தில் சென்மன்—பூவில்
பாலனும்விர்த்தனும் கிழத்தன்மைதோழி—சங்கர. (93)

செ-வி-பு.

சேய் குரு புந்தியுஞ் சேர—மாதே
சென்மன் சங்கீதன் நடனஉல்லாசன்
சேயனுக்கு சயபாக்கியம்—பூவில்
செப்புவாய் சுகவானெக்கூர்ந்து சொல்தோழி—சங்கர. (94)

செ-வி-சு-சனி.

சேய் குரு வெள்ளியுஞ்சேர—மாதே
சென்மனுக்கு வேந்தன் சினேகமாய் வாழ்வன்
சேயன் தனவானுந் துஷ்டன்—பூவில்
சேய் சனி குருசேர அவைபோற்சொல்தோழி—சங்கர (95)

சுக்கிரன்-சந்திரன்-சனி.

வெள்ளியும் வெண்மதி நீலன்—மூவர்
விளங்குமோர் கிரிதனில் வீற்றிருந்தாலும்
கள்ளங்கபடுகளில்லை—சென்மன்
கனவானும் புரோகித னென்றுரைத்தாண்டி—சங்கர. (96)

சூ-புத-சு.

கதிரோடு மதிமகன் வெள்ளி—மூவர்
கனமானஓர்கிரியில் வீற்றிருந்தாலும்
பதியுண்டு தேகமும் காந்தி—மாதே
பாக்கியன் சஞ்சாரன் கல்விமான்தோழி—சங்கர. (97)

சூ-சனி-சு.

கதிரொடுநீலனும் வெள்ளி—மூவர்
கட்டாகவோரிடம் அமர்ந்திருந்தாலும்
நிதிகொஞ்சம் செப்புவாய் சேய்க்கி—மாதே
நிலத்தில்துஷ்டன் கர்மியாந்தோழி—சங்கர. (98)



நாலுபேர் சேர்ந்த பலன்.

சந்திரன்-வி-சு-பு.

மதி குரு சுங்கனும் புந்தி—நால்வர்
மலையினில் செல்வர்கள் அமர்ந்திருந்தாலும்
நிதியுந் தனங்களுமுண்டு—சென்மன்
நெருங்கின பந்துக்கள் பூச்சியந் தோழி - சங்கர. (99)

செ-வி-சு-சனி.

சேய் குரு சுங்கனும் நீலன்—நால்வர்
செழிக்குங் கிரியி லெதிலிருந்தாலும்
ஆயன் விதிபிசகாது—சென்மன்
அதிசூரவானென்று அரைந்தாண்டி தோழி - சங்கர. (100)

வி-சு-சூ-பு.

குருவும் வெள்ளி ரவி புந்தி—நால்வர்
குணமாக ஓர் குன்றில் குக்கிருந்தாலும்
மருவுமன்மத சுகிமோகன்—மாதே
மானிலத்தில் வெகு நிதியுடையாண்டி - சங்கர. (101)

சந்திரன்-செ-புத-சனி.

மதி சேய் குரு புதன் கூடில்—சென்மன்
மானிலத்தில் சதா நித்திரை கொள்வன்
விதியை மறைப்பாரு முண்டோ—பூவில்
விஷமன் துருசை யுடையவன் தோழி - சங்கர. (102)

சந்திரன்-செ-வி-பு.

மதி சேய் புதன் சனி மேவ—சென்மன்
மன்னர் வசியனும் பிரபலன் யூகி
விதிகள் நிலைபிசகாது—பூவில்
வித்தகனும் வசியன் சொன்னாண்டிதோழி - சங்கர. (103)

சந்திரன்-செ-வி-சனி.

மதி சேய் குரு சனி கூடில்—சென்மன்
மனைவிபொல்லா துஷ்டசெய்கையை யுடையாள்
விதியை மறைப்பாரு முண்டோ—பூவில்
வினையுந் துன்பங்களும் தடுப்பாரு முண்டோ - சங்கர. (104)

சந்திரன்-செ-சனி-சுக்கிரன்.

மதி சேய் சனி சுங்கன் சேர—சென்மன்
மானிலத்தில் தனங்கீர்த்திமான் யோகன்

விதியுநிதிகளுமுண்டு—பூவில்
விளங்குமான் மதிபோல் விளம்பச்சொன்னண்டி - சங்கர. (105)

வி-சூ-சந்திரன்-ராகு-சு.

குருவும் ரவி மதி பாம்பும்—மாதே
குணமாக ஓர்குன்றில் குக்கிருந்தாலும்
குருபதி ஆட்சியாய் நிற்க—பூவில்
குழவிக்குக் கொடிமாலை கிட்டாததோழி - சங்கர. (106)

செ-பு-சு-சந்திரன்.

சேய் புதன் வெள்ளியு மிந்து—மாதே
செழிக்குமலைதனில் சேர்ந்திருந்தாலும்
சேயன் மனைவியும் ரூபி—பூவில்
சென்மனு மழகில்லான் பாக்கியசாலி - சங்கர. (107)

வி-சனி-சு-பு.

குருவும் சனி வெள்ளி புந்தி—நால்வர்
கூட்டமாம் ஒரிடம் கூடிநின்றாலும்
பருவப் பிராயத்தில் சென்மன்—பூவில்
படைக்கஞ்சான் கொடிய வீரனுந்தோழி - சங்கர. (108)

செ-வி-பு-சனி.

சேயுங் குரு புந்திநீலன் —நால்வர்
செழிக்குமோ ரகந்தனில் சேர்ந்திருந்தாலும்
சேயனுக்கு தனமில்லை—பூவில்
செழிக்கும் பத்தாமிட மறிந்துசொல்தோழி - சங்கர. (109)

சந்திரன்-செவ்வாய்-சூ-சனி.

இந்து சேய் வெய்யோனும் நீலன்—நால்வர்
இதமாக வோரில்லில் இணங்கிருந்தாலும்
பந்துஜனங்களும் விரோதி—பூவில்
பாலன் தரித்திரன் யென்றுரைத்தாண்டி - சங்கர. (110)

சந்திரன்-சூ-வி-சு.

இந்து ரவி குரு வெள்ளி—நால்வர்
இதமாக ஓர் அக மிணங்கி நின்றாலும்
சுந்தன் களத்திரபாக்கியம்—பூவில்
சுகமாக குளவியை பெற்றுமேவாழ்வன் - சங்கர. (111)

சந்திரன்-சூ-வி-சனி.

இந்து ரவி குரு நீலன் —நால்வர்
இதமாக வோர்கிரி இணங்கிருந்தாலும்



சுந்தன் தரித்திரயீனன்—மாதே
சுகங்களுங் கிட்டாது எட்டாது தோழி - சங்கர. (112)

செ-வி-பு-சூ.

சேய் குரு புந்தியும் வெய்யோன்—நால்வர்
செய்லாக வோர் குன்றில் சேர்ந்திருந்தாலும்
சேயன் அழகனும் தீரன்—பூவில்
தேசத்தோ டொத்து வாழ்வாண்டி தோழி—சங்கர. (113)

வி-சந்திரன்-பு-சூ.

குரு மதி புந்தியும் வெய்யோன்—நால்வர்
குணமாக வோரிடம் கூடிநின்றாலும்
சிறுவனும் ராஜசமானன்—பூவில்
திரவியசம் பன்னன் புத்திமான் தோழி—சங்கர. (114)

சந்திரன்-சூ-பு-சு.

இந்து ரவி புந்தி வெள்ளி—நால்வர்
இதமாக வோர்வீட்டில் ஒத்திருந்தாலும்
சுந்தன் களத்திரமோகி—பூவில்
சுகமாகபாடவும் வல்லவன் தோழி—சங்கர. (115)

சூ-செ-சந்திரன்-வி.

சூரியன் சே யிந்து வியாழன்—நால்வர்
சுகமாகவோரிடம் சுகித்திருந்தாலும்
பாரினில் சேனதிபதியாம்—மாதே
பாக்கியம் புத்திர யோகவான் தோழி—சங்கர. (116)

சூ-செ-சந்திரன்-புதன்.

சூரியன் சே யிந்து புந்தி—நால்வர்
சுகமாகவோரிடம் சுகித்திருந்தாலும்
பாரினில் பொய்யன் சமர்த்தன்—மாதே
பரபரப்பாக யெழுதவும் வல்லன் —சங்கர. (117)

சந்திரன்-செ-சு-சூ.

இந்து சேய் வெள்ளியும் வெய்யோன்—நால்வர்
இதமாக வோர்மனை இணங்கிருந்தாலும்
பந்துஜன யீனன்விடமன்—மாதே
பாலனும் ரோகியாம் பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (118)

சந்திரன்-வி-பு-சனி-சு.

மதி குரு புந்தியும் நீலன்—மாதே
மதி வெள்ளி குரு சனி சேர்ந்திருந்தாலும்
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
விளங்குகலகனும் விடமார்க்கன்தோழி—சங்கர. (119)

செ-சூ-பு-சனி.

சேய் ரவி புந்தியும் நீலன்—மாதே
செய்யுந் துற்செய்கையால் சோரமுஞ் செய்வன்
ஆயன் விதிபிசகாது—நால்வர்
அகத்தினில் குக்க வரைந்தாண்டிதோழி—சங்கர. (120)

செ-சூ-வி-சனி-சு.

சேய் ரவி குருசனி மேவ—மாதே
சென்மன் செய்யுந் தாரம் யீனமாஞ் செயலால்
சேய் ரவி குரு வெள்ளி சேர—மாதே
செய்யும் புத்திரவானுந் தனவானும் தோழி—சங்கர. (121)

வி-பு-சனி-சூ.

குரு புந்தி சனி ரவி சேர—மாதே
குமரன் தரித்திரன் வித்தையு மில்லோன்
கருமன் தருமனைக்கூர்ந்து—பூவில்
காளைக்கி யோகத்தைக் கூர்ந்துசொல் தோழி—சங்கர. (122)

சு-சூ-சனி-வி.

வெள்ளி சனி ரவி சேர—மாதே
குமரன் தரித்திரன் கணவியுந் துஷ்டி
தருமர் நூல் பிசகாதுமாதே—பூவில்
தருமனை நோக்கித் தயவாகக்கூறு—சங்கர. (123)

பு-சூ-சு-சனி.

புந்தி ரவி வெள்ளி நீலன்—மாதே
புதல்வனும் அன்னை பிதாவை நிந்திப்பான்
சிந்தை வெறுப்புற்றுபேசி—பூவில்
சென்மன் இளைஞனைத் தூத்துவன் தோழி—சங்கர. (124)

சூ-சந்திரன்-பு-சனி.

பகலவன் மதி புந்தி நீலன்—மாதே
பகரு மோரில்லில் பதுங்கிருந்தாலும்



அகந்தனில் பெரியோனுஞ் சென்மன்—யோகம்
அஞ்சுக்கு அஞ்சோனை யறிந்துசொல்.தோழி—சங்கர. (125)

ஐந்துகிரகஞ் சேர்ந்தபலன்.

செ-பு-வி-சு-சனி.

சேய் புதன் குரு வெள்ளி நீலன்—ஐவர்
செழிக்கு மோர்கிரியில் சேர்ந்திருந்தாலும்
சேயன் வெகு பொல்லா சோரன்—பூவில்
சேனாதிபதியாலுங் காணவொண்ணாது—சங்கர. (126)

செ-சு-சூ-பு-சனி.

சேய் வெள்ளி ரவி புத னீலன்—இவர்கள்
செழிக்கு மோர்கிரியில் சேர்ந்திருந்தாலும்
சேயன் கொலைபாதன் பாவி—பூவில்
செத்தசவமாவன் பெரியவன்தோழி—சங்கர. (127)

சந்திரன்-செ-பு-சு-சனி.

மதி புந்தி சேய் வெள்ளி நீலன்—இவர்கள்
மலைக்கேழில்குக்க மனையாளுமில்லை
விதியும் நிதிதனமுண்டு—மாதே
விளங்குங்கோள் நினைபேத மறிந்துசொல்தோழி—சங்கர.(128)

சூ-சந்திரன்-சனி-பு-சு.

கதிர் மதி சனி புதன் வெள்ளி—ஐவர்
கட்டாக ஓரில்லி லமர்ந்திருந்தாலும்
பதியாளு மக்களைவிட்டு—சென்மன்
பரதேசம் போவானும் நோயுடன்தோழி—சங்கர. (129)

வி-சந்-செ-பு-சு.

குரு மதி சேய் புந்தி வெள்ளி—இவர்கள்
குணமாக வோர்குன்றில் குக்கிருந்தாலும்
பெருகுங்குலவானும் நிதியோன்—பூவில்
பிரபலமாகவே வாழ்வாண்டி தோழி—சங்கர. (130)

சந்திரன்-பு-வி-சு-சனி.

மதி புந்தி குரு சுங்கன் மந்தன்—இவர்கள்
மனைதனில் குக்க மகிமையைக்கேளு
விதியின் நிலைபிசகாது—சென்மன்
விளங்குமோர் அங்கத்தில் பங்கஞ்சொல்தோழி—சங்கர (131)

வி-சூ-செ-பு-சு.

குரு ரவி சேய் புந்தி வெள்ளி—இவர்கள்
கூட்டமா யோர்கிரியில் கூடியிருந்தாலும்
பருவப்பிராயத்தில் சென்மன்—பூவில்
படைவீரன் சேனை பதியுமே யாவன்—சங்கர. (132)

வி-சு-சூ-பு-சனி.

குரு வெள்ளி ரவி புந்தி நீலன்—மாதே
குணமாக வோர்குன்றில் கூடிநின்றாலும்
சிறுவப்பிராயத்தில் சென்மன்—ஜொலிக்கும்
சிவபக்தி விசுவாசன் அபிமானி தோழி—சங்கர. (133)

சூ-சந்திரன்-வி-சு-சனி.

கதிர் மதி குரு சுங்கன் நீலன்—ஐவர்
கனமாக வோரிடம் அமர்ந்திருந்தாலும்
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
விளங்குஞ் சுரோயினி துற்கர்மி என்றேன்—சங்கர. (134)

செ-சந்திரன்-சூ-சனி-சு.

சேய் மதி ரவி சுங்கன் னீலன்—இவர்கள்
செழிக்குங் கிரிதனில் சேர்ந்திருந்தாலும்
சேயன் துரோசையுங் கொள்வான்—மாதே
ஜெகத்தினி லையம் எடுப்பாண்டி—சங்கர. (135)

சந்திரன் வி-சூ-பு-சு.

மதி குரு ரவி புந்தி வெள்ளி—இவர்கள்
மலையினி லொன்றாக அமர்ந்திருந்தாலும்
விதிகள்நிலை பிசகாது—பூவில்
விளங்குஞ் சேனைபதி—தனவானுந்தோழி—சங்கர. (136)

செ-சந்திரன்-சூ-பு-வி.

சேய் மதி ரவி புந்தி வேந்தன்—இவர்கள்
செழிக்கு மோரகந்தனில் சேர்ந்திநின்றாலும்
சேயனும் போரினில் வல்லன்—மாதே
தேவ நிந்தைகோளு கூறுவன்தோழி—சங்கர. (137)

செ-மதி-சூ-பு-சு.

சேய் மதி ரவி புந்தி வெள்ளி—மாதே
சென்மன் தயாளன் ,அபாக்கியவானும்



ஆயன் விதிபிசகாது—சென்மன்
அவனில் உதாரனும் அரைந்தாண்டி தோழி - சங்கர. (138)

செ-மதி-சூ-பு-சனி.

சேய் மதி ரவி புந்தி னீலன்—மாதே
செனிக்கு மோரகந்தனில் சேர்ந்திருந்தாலும்
சேயன் புத்திரயீனன்பாவி—பூவில்
சென்மனுக்கு விதி அற்பமாங் தோழி—சங்கர. (139)

செ-மதி-சூ-வி-சு.

சேய் மதி ரவி குரு சுங்கன்—இவர்கள்
செனிக்கு மோர்கிரியில் சேர்ந்திருந்தாலும்
சேயனும் பந்துவிரோதி—பூவில்
செய்யுந் தொழில் எத்தன் செப்புவாய் தோழி - சங்கர. (140)

செ-மதி-சூ-வி-சனி.

சேய் மதி ரவி குரு நீலன்—இவர்கள்
சேர்ந்தாலும் தோஷமாம் சேரவொண்ணாது
சேயனுக்குத் தாரயீனம்—மாதே
செப்புவாய் கண்ணோவாம் ஜலரோகம் தோழி—சங்கர. (141)

ஆறுகிரகம் நின்றபலன்.

சந்திரன்-செ-சு-சூ-பு-சனி.

அண்டிமதி சேயும் வெள்ளி—அன்றும்
ஆண்டளப்பான் புந்தி நீலனுஞ்சேர
அண்டம் அளவுகுணிப்போன்—சென்மன்
அறிவுடையோ னவன் அழுக்குடையாண்டி—சங்கர. (142)

எழுபேர் நின்றபலன்.

மலைதனில் சப்தகோள்யேற—சென்மன்
மானிலத்தில் பொல்லா தரித்திரனவன்
இளையாளுக்கு மூத்தாள்வாசம்—இல்லில்
யெண்ணாளுங் குடிகொண்டிருப்பாளாங்தோழி—சங்கர. (143)

லக்கினகோள் நிலை.

பதியன் சுபருமே யாகி—மாதே
பதியினில் உச்சத்தில் ஆட்சியாய் நிற்கில்
விதியும் வளவுமேயுண்டு—சென்மன்
வினையன் புலவனும் புனிதனுந் தோழி—சங்கர. (144)

பதியன் சுபருமே யாகில்—மாதே
பதியனு முச்சத்தில் ஆட்சியாய்நிற்கில்
மதியனு முச்சத்திலேற—ஜென்மன்
மானிலத்தில் தனங் கீர்த்திமான்தோழி—சங்கர. (145)

பதியன் சுபருமே யாகில்—மாதே
பகருந் திருகோண மமர்ந்திருந்தாலும்
விதியுந் தனமில்லுமுண்டு—சென்மன்
விளங்கு நூராண்டினில் விதிமாறுந்தோழி—சங்கர. (146)

பதியன் சுபருமே யாகில்—மாதே
பகருந் திருகோணம் பதியையும் நோக்க
விதியனாட்சி யுச்சமேற—சென்மன்
விளங்குவன்வெகுகாலம் வினையனுந்தோழி—சங்கர. (147)

பதியன் சுபருமே யாகில்—மாதே
பகருங் கேந்திரங்களில் பதியனும் நிற்கில்
விதியும் வளவுமேயுண்டு—சென்மன்
விளங்குந் தோஷங்களால் விதியற்பந்தோழி—சங்கர. (148)

பதியன் சுபனுமே யாகில்—மாதே
பகரும் பனிரெண்டு யெட்டாறு ஜென்மம்
விதிஅற்பம் நிதிதன மில்லை—சென்மன்
விளங்கும் பத்தாமிட மறிந்துரை தோழி—சங்கர. (149)

பதியனும் பாவியாய் நிற்கில்—மாதே
பகரும் பனிரெண்டு யெட்டாறு கேந்திரம்
விதியும் நிதிதனமுண்டு சென்மன்
வினையுந் தந்திரங்களையரிவாண்டி தோழி—சங்கர. (150)

ஒண்ணவன் பத்தினி லுச்சம்—மாதே
ஒருபத்துக் குடையோனு முச்சத்திலேற
திண்ணமாய் யிவனுக்குப் பண்டு—பூவில்
திடமாகச் சொல்லச் சொன்னாண்டி தோழி—சங்கர. (151)

ஒண்ணவன் ரெண்டோனைக் கூட—மாதே
ஒத்தைக் கண்ணன் திரிகோணமுமேற
திண்ணமா யிவனுக்கு விதியும்—பூவில்
திடமாகச் சொல்லடி நேத்திரயீனம்—சங்கர. (152)



விதிய னிருப்பிடம்பாரு—ஜொலிக்கும்
விளங்குஞ் சாமினாதன் திரிகோணமேற
விதியனாட்சி யுச்சம் நட்பு—சென்மன்
விளங்குந் தனமுடன் நூராண்டிருப்பன்—சங்கர. (153)

### இரண்டுக்குடையவன் நிலை.

இரண்டுக் குடையோனைப்பாரு—அவர்
இரண்டுக் கிருநாலில் அமர்ந்திருந்தாலும்
இரண்டில் நிதியோனுமேற—சென்மன்
இதமாகவாழுவன் நிதியுடன் தோழி—சங்கர. (154)

கிரிரெண்டுக் குடையோனைப்பாரு—அவர்
கிரிக்கு இருமூன்றி லமர்ந்திருந்தாலும்
சிறியவன் தேடுந்தனமும்—மாதே
சிதறியேபோகுமே சத்துருகையில்—சங்கர. (155)

ரெண்டுக் குடையோனைப்பாரு—அவர்
இரண்டினில் ஆட்சியாய் சுபனுமாய் நிற்க
பண்டு பொருள் மனையுண்டு—சென்மன்
பாரினில் செட்டிபோல் வாழ்வாண்டி தோழி—சங்கர. (156)

தனபதி நிலைகுரி பாரு—அவர்
தனத்துக்குத் தனத்தினில் அமர்ந்து நின்றாலும்
தனமுண்டு தரையினில் வைப்பன்—மாதே
தரையில் வைத்ததனம் பந்தஞ்சொல் தோழி—சங்கர. (157)

குருமதி சுங்கனும் புந்தி—இவர்
குடும்பாதி பதியாயுங் குடும்பத்திலேற
பொருள் நிதிவளவுமேயுண்டு—சென்மன்
பூவையுடன்கூடி வாழ்வாண்டி தோழி—சங்கர. (158)

### மூன்றுக்குடையவன் நிலை.

இல்லுக்கு மூன்றோனைப்பாரு—அவர்
இல்மூன்று இல்லைந்து யிலாபமே யேற
வெள்ளிநற் கலையுடன் மேவ—மாதே
வெகுபோகன் வெகுஸ்திரீயை புணருவான் தோழி—சங்கர. ()

மூன்றுக் குடையோனைப்பாரு—அவர்
மூன்றுக்கு ஐந்தினில் சப்தமுமேற

தோன்று மம்புலிஜந்தில் நிற்க—மாதே
தோல்புவி யில்பல ஸ்திரீகளைச் சேருவன்—சங்கர. (160)

அரைமூன்றில் சேயுமமர—சென்மன்
அடுத்தாற்கு யீயான் பிதிர் நஷ்டநிதியோன்
துரைமுகஞ் சென்றாலும் சென்மன்—புவியில்
துரிதன் வீரசாலி துணைவனுக்கேடாம்—சங்கர. (161)

நாலுக்குடையவன் நிலை.

கிரிநாலுக் குடையோனைப்பாரு—அவர்
கிரிநாலில் திரிகோணம் கிரியினிலேற
பெருகுங் கல்வி சன்று காலி—சென்மன்
பிரபலமாகவே வாழ்வாண்டி தோழி—சங்கர. (162)

அய்ந்துக்குடையவன் நிலை.

அய்ந்துக் குடையோனைப்பாரு—அவர்
அய்ந்தேழு லாபம் நிதியினிலேற
சொந்த புத்திரர்களு முண்டு—சென்மன்
சுயதேச பரதேச வாசஞ்சொல் தோழி—சங்கர. (163)

ஆறுக்குடையவன் நிலை.

பதியாருக் குடையோனைப் பாரு—அவர்
பகருந் தனத்தினில் பெலமாக நிற்க
எதிரியால் நிதிகளும் லாபம்—சென்மன்
எதிரியை வஞ்சித்து மோசஞ்செய்வாண்டி—சங்கர. (164)

பதியறுக் குடையோனைப் பாரு—அவர்
பாவியாய் வியமாறு யெட்டினிலேற
விதியும் நிதிகளுமுண்டு—சென்மன்
வேந்தன் கிருபையை அடைவாண்டி தோழி—சங்கர. (165)

ஏழுக்குடையவன் நிலை.

இல்லேழுக்குடையோனைப்பாரு—அவர்
இல்லேழிபில்நாலு யில்லாபமேற
செல்வன் மணஞ்செய்த கன்னி—பூவில்
சிற்றிடையாள் வெகு அழகியாந்தோழி—சங்கர. (166)

இல்லேழு கிரியையும் பாரு—அந்த
இல்லேழில் இரவிசுதன் மாரல்யிருந்தாலும்
செல்வன் மணஞ்செய்தகன்னி—பூவில்
சினேகஞ்செய்வாள் சோரப்புருடனைக்கூடி—சங்கர. (167)



எட்டுக்குடையவன் நிலை.

எட்டுக் குடையோனைப் பாரு—அவர்
எட்டிலு முச்சத்தில் எட்டையு நோக்க
துஷ்டனென்று பெயர்கொள்வன்—சென்மன்
தொல்பூவில் வாழ்வாண்டி நிதியுடன் தோழி—சங்கர. (168)

ஒன்பதுக்குடையவன் நிலை.

பதிக்கி நிதியோனைப் பாரு—அவர்
பகருந் தனத்தினில் பெலமாகநிற்க
பதிக்கி தநன் நிதியேற—சென்மன்
பாக்கியவானென்று பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (169)

பத்துக்குடையவன் நிலை.

பதிக்கி கருமனைப் பாரு—அவர்
பதிக்கி திரிகோணம் பத்தினிலேர
பதிக்கி யிறுநாலோன் நோக்க—மாதே
பலன்கள் வெகுநஷ்டம் பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (170)

பதினொன்றுக்குடையவன் நிலை.

இலாபன் நிலை குரிபாரு—அவர்
இலாபம் நிதிதனம் ஆட்சியாய் நிற்க
இலாபன் நிதியுடன் மேவ—மாதே
இலாபம் நிதிவிர்த்தி சொன்னாண்டிதோழி—சங்கர. (171)

பனிரெண்டுக்குடையவன் நிலை.

ஈராறுக் குடையோனைப் பாரு—அவர்
ஈராறு இருமூன்று யிருநாலிலேற
சீரான பணையில்லு செம்பொன்—மாதே
சிறப்பாகச்சொல்லடி தீயனாய் நிற்கில்—சங்கர. (172)

விரையோ னிருப்பிடம்பாரு—அவர்
விரையவர் எவரானல் தனநிதி யேற
குறையுங் குறையுந்தனங்கள்—மாதே
கூனில் வைத்ததனங் கரியுமியாகும்—சங்கர. (173)

பனிரெண்டா மிடத்தையும்பாரு—அந்த
பனிரெண்டோன் பலவானாய் பனிரெண்டில் நிற்க
அணியணியாகவளவு—மாதே
ஆளுவான் கட்டி வாழுவான் தோழி—சங்கர. (174)

பனிரெண்டா மிடத்தையும் பாரு—அந்த
பனிரெண்டில் பாவர்கள் அமர்ந்திருந்தாலும்
குணிதம் விதிபிசகாது—சென்மன்
கோட்டுவாய் வடியநித்திரை கொள்வன்தோழி—சங்கர. (175)

பனிரெண்டா மிடத்தையும்பாரு—அந்த
பனிரெண்டில் பாம்போடு தீயர்கள்கூட
குணிதம் விதிபிசகாது —மாதே
குறட்டோடு தூங்குவன் குமரனுந்தோழி—சங்கர. (176)

### ஆதிபத்தியம்.

ஒன் றெட்டுக்குடை யோனைப்பாரு—அவர்
உச்ச திரிகோணம் ஆட்சியாய் நிற்க
பண்டு பொருள் விதியுண்டு—சென்மன்
பார்மன்னர் தோஷம் பகர்ந்தாண்டிதோழி—சங்கர. (177)

பதிக்கெட்டுக் குடையோனைப் பாரு—அவர்
பதிக்கிருமூன்று பனிரெண்டிலேற
பதியன் திசாபுத்தி சென்மன்—மாதே
பாரினில் ராசயோகஞ் சொல்தோழி —சங்கர. (178)

பதிபத்துக் குடையோனைப் பாரு—அவர்
பண்பாக திரிகோணம் பதியுச்சமேவ
பதியும் நிதிவிதியுண்டு—சென்மன்
பாரினில் புனிதனுஞ் செப்பச்சொன்னாண்டி—சங்கர. (179)

தனசப்த மதிபனைபாரு—அவர்
தனசப்தம் திரிகோணம் சுபனாகி நிற்கில்
பணமும் புதைப்பொருளுண்டு—சென்மன்
பாவையுடன்கூடி வாழ்வாண்டிதோழி—சங்கர. (180)

அணியேழுக் குடையோனைப்பாரு—அவர்
அங்காரகனாக வாட்சியாய் நிற்க
குணிதம் விதிபிசகாது—சென்மன்
குமரிக்கி விதியுண்டு சுமங்கிலி தோழி—சங்கர. (181)

மூன்றுக் குடையோனைப்பாரு—அவர்
முன்னான்கில் யிருநாலி லமர்ந்துநின்றாலும்
தோன்றுஞ் சகோதிர தோஷம்—சென்மன்
துரையென்றேன் ராச யோகஞ்சொல்தோழி—சங்கர. (182)



தனம் நிதியோனையும்பாரு—அவர்
தனலாபம் திரிகோணம் தசமுச்சமேற
தனநிதி மெத்தவுமுண்டு—சென்மன்
தந்தைக்குத் தோஷஞ் சொன்னாண்டி தோழி—சங்கர. (183)

மூன்றுக்கும் பத்துக்குடையோன்—அவர்
மும் மூன்று பதிபத்தில் அமர்ந்திருந்தாலும்
தோன்றுஞ் சுபர்களும் நோக்க—சென்மன்
தொல்பூவில் சீமானும் விதி தீர்க்கம் தோழி—சங்கர. (184)

நாலுபன் னொன்றுக் குடையோன்—அவர்
நலமாக கேந்திரம் தனலாப மேற
பண்டு பொருள் மெத்தவுண்டு—சென்மன்
பாரினில் வைத்த தனமெடுப்பாண்டி—சங்கர. (185)

ஒன்றுக்கும் நாலுக்குடையோன்—அவர்
உச்ச திரிகோணம் தனலாபமேற
பாலும் நெய்தன விர்த்திமெத்த—முன்னோர்
பாரில் நற்பேர் கொள்வன் பாடச்சொன்னாண்டி—சங்கர. (186)

சுகநிதி யோனையும் பாரு—அவர்
ஜொலிக்கும் திரிகோணம் கேந்திர மேற
அகம்பனை நிதிமிகவுண்டு—சென்மன்
அவனியில் நற்பேர் கொள்வன் ஆடச்சொன்னாண்டி—சங்கர. ()

அஞ்சு பனிரெண்டுக் குடையோன் அவர்
அஞ்சு பனிரெண்டு கேந்திர மேற
கொஞ்சும் குழவிக்கித்தோஷம்—சென்மன்
குறியாக நிதியோனைக் கூர்ந்து சொல்தோழி—சங்கர. (188)

அஞ்சுக்கும் பத்துக்கு முடையோன்—அவர்
அன்பாக வைந்தேழு தனலாபம் பத்தில்
கொஞ்சம் குழவிக்கி யோகம்—சித்தர்
கூறினார் விதிதீர்க்கம் அறிந்துரை தோழி—சங்கர. (189)

ஆருக்கும் பன்னொன்றுக் குடையோன்—அவர்
அன்பாக கேந்திரம் அமர்ந்திருந்தாலும்
பாரினில் தாயாதிபண்டு—சென்மன்
பாங்காகக்கொள்வாண்டி பகர்ந்தாண்டி தோழி—சங்கர. (190)

ஏழுக்கும் பத்துக் குடையோன்—அவர்
இதமாக திரிகோணம் பதியையு நோக்க
சேல்விழி கன்னியர்லாபம்—பூவில்
சிறப்பாக வடைவானும் தொழிலுடையாண்டி.—சங்கர. (191)

ஆறுக்கும் ஒன்பதுக் குடையோன்—அவர்
அன்பாக திரிகோணம் உச்சத்தி லேற
ஆரினில் தீயர்கள் நிற்க—ஜென்மன்
அதிஷ்டவானும் சத்துருபங்கனும் தோழி—சங்கர. (192)

ஒன்றூறுக் குடையோனைப்பாரு—அவர்
உத்தம்னுயும் திரிகோண மேற
பண்டு பொருள் விதி யுண்டு—சேய்க்கி
பகைவர்கள் மேலிட்டிருப்பார்கள் தோழி—சங்கர. (193)

நாலேழுக் குடையோனைப்பாரு—அவர்
நலமாக திரிகோணம் தனலாப மேற
நாலில் சுபர்களும் நிற்க—சேய்க்கி
நாரியுடன்கூடி சுகித்திருப்பாண்டி—சங்கர. (194)

மூன் றெட்டுக் குடையோனைப்பாரு—அவர்
முன் னுன்கி லிருமூன்றி லமர்ந்திருந்தாலும்
தோன்றுந் திசாபுத்தி யந்திரம்—சென்மன்
தொல்புவியி லவமான மடைவாண்டி தோழி—சங்கர. (195)

அஞ்சுக்கு மெட்டோனைப்பாரு—அவர்
அன்பாக அஷ்டமம் தன முச்ச மேற
கொஞ்சுங் குழவிக்கி பாக்கியம்—சித்தர்
கூறினர் தோஷஞ் சொன்னர்கள்தோழி—சங்கர. (196)

ரெண்டு பன்னொன்றுக் குடையோன்—அவர்
ரெண்டு ஐந்து நவம் தசமூச்சம் நட்பு
பண்டுபொருள் விதியுள்ளோன்—சென்மன்
பகருந்தொழிலாபம் பதியுடையாண்டி—சங்கர. (197)

திரிதிகைக் கருமனைப்பாரு—அவர்
திடமாக யீரெண்டு தசம் நட்பு கோணம்
கருமம் பிதிர்வர்க்க முண்டாம்—சென்மன்
கனவானுந் தொழிலுள்ளோன் நேசனுந்தோழி—சங்கர. (198)



ஏழுக்கும் பத்துக்கு முடையோன்—மாதே
எந்தமலேயி லமர்ந்திருந்தாலும்
காலன் வருவானுந்தேடி—பெற்ற
கனமுள்ள பிதுரையும் கட்டியேயிழுப்பான்—சங்கர. (198)

ப்தி யாறுக் குடையோனைப்பாரு—அவர்
பகரும் பனிரெண்டில் பாவனுய்நிற்க
விதியுந் தனமிருந்தாலும்—சென்மன்
விளங்குஞ் சேய்திசை தனில் வெகுதுன்பம்தோழி—சங்கர. ()

தன பஞ்சன் நிலைபதி கூறு—அவர்
தன மேழு கர்மத்தில் தனிமையாய் நிற்க
அனைவோர்க்கும் பிரியனுங்குழவி—மாதே
அகமுண்டு டம்பனும் தனமுண்டுதோழி—சங்கர. (200)

தன பஞ்ச நிலைகுரி பாரு—மாதே
தனபதி லாபனைச் சேர்ந்தாலும் நோக்க
பணமும் புதைப் பொருளுண்டு—மாதே
பாரில்நற்பேர் கொள்வன் பதியுண்டுதோழி—சங்கர. (201)

ஒன்றுக்கும் பத்துக்கு முடையோன்—அவர்
உத்தமரும் கோணம் பத்துமோர் லாபம்
குன்றுபோல் வளருமாஞ் செல்வம்—கோதை
குமரன் பிதுர்தோஷம் கூறுவாய்தோழி—சங்கர (202)

ஒன்றுக்கும் நாலுக்கு முடையோன்—அவர்
உச்சமும் ஆட்சியும் கோணமு மேற
கன்று காலி கல்வியுமுண்டு—மாதே
காடியுமாடியும் மேல்மாடியுண்டு—சங்கர. (203)

### லெக்கனத்தில் சூரியன் நிலமை.

பதியில் செங்கதிரோனுமேவ—சென்மன்
பகைவன் அபிமானி முகரோகன் அழகன்
அதிசூர னுகவும்வாழ்வன்—எனக்
கரைந்தாண்டி அயன்விதி சொன்னுண்டிதோழி—சங்கர. (204)

### லெக்கனத்தில் சந்திரன் நிலமை.

பதியினில் பால்மதி யிருக்க—சென்மன்
பந்துமுலையாளை போகமுஞ் செய்வன்
பதியில் பிரதானி செல்வன்—பூவில்
பணிநிதி பொருள்மெத்த பாடினன்தோழி—சங்கர. (205)

### லெக்கனத்தில் செவ்வாய் நிலைமை.

பதியில் பவுமனும் நிற்க—சென்மன்
பகருஞ்சிலம்ப வித்தையு முடையான்
பதியும் பணிகளு முண்டு—புவியில்
பலவானும் கலகனும் அபிமானிதோழி—சங்கர. (206)

சேய னிருப்பிடம்பாரு—அவர்
சென்மத்தில் செயலாக ஆட்சியாய் நிற்க
சேயனுக்கு மூத்தோனில்லை—பூவில்
சீவனோடிருந்தாலு முதவியுமில்லை—சங்கர. (207)

### லெக்கனத்தில் புதன் வியாழம் நிலைமை.

பதியிலு முச்சனாய் புந்தி—சென்மன்
பரமஞானி சுய கவிதையுமுள்ளோன்
பதியில் வியாழனு மேவ—மிக்க
பாக்கியம் பணையுண்டு தலைவனுந்தோழி—சங்கர. (208)

### லெக்கனத்தில் சுக்கிரன் நிலைமை.

பதியில் பளிங்கனு மேவ—சென்மன்
பாக்கிய வழகன் கலை கல்வி யுள்ளோன்
பதியி லுச்சனாக நிற்க—புவியில்
பந்துறவும்புத்திர வானடிதோழி—சங்கர. (209)

### லெக்கனத்தில் சனி நிலைமை.

பதியில் முடவனு மேற—சென்மன்
பாக்கியன் நேசன் தைரியமு முள்ளோன்
விதியும் வளவுகளுண்டு—பூவில்
விளங்குவான் சஞ்சலன் புலவனுந்தோழி—சங்கர. (210)

### கரும்பாம்பு நிலைமை.

பதியில் கரும்பாம்பு மேற—மாதே
பாலன் புத்திரயீனன் பங்கமுமுள்ளோன்
பதியில் செம்பாம்பு மிருக்க—மாதே
பாலன் விஷரோகன் மெலிவாண்டி தோழி—சங்கர. (211)

கரும்பாம்பு ரெண்டினிலேற—சென்மன்
கண்ணோயன் தரித்திரன் கருமந்திர முடையோன்
கருமி மகா மூடன் வஞ்சன்—பூவில்
கண்டித்து சொல்லடி சொன்னாண்டிதோழி—சங்கர. (212)



கரும்பாம்பு மூன்றினிலேற—சென்மன்
கனவானுந் தனவானுந் தீர்க்காயுள் புகழ்வோன்
சிறுவன் சகோதிர நஷ்டம்—பூவில்
சித்தர்கள் கூறினார் சொல்லடி தோழி—சங்கர. (213)

கருநாகம் நாலிலுமேற—சென்மன்
கனத்தமாதர் தோஷம் குறியாகப்பாரு
சிறுவன் படபடப் புள்ளோன்—பூவில்
சிலதேச சஞ்சாரன் தரித்திரன் தோழி—சங்கர. (214)

கருநாகம் அய்ந்தினி லேற—சென்மன்
கனவானுந் தனவானா மணிமந்திரமுடையோன்
பெருவன் தலைப்பிள்ளை பெண்ணாம்—பூவில்
புத்திரர் அற்பமாம் சொன்னாண்டிதோழி—சங்கர. (215)

கரும்பாம்பு ஆறிலுமேற—சென்மன்
கனவானுந் தனவானும் யெவருக்குமஞ்சான்
கரும்பித்தரோகங்களுண்டு—மாதே
கரும்பாம்பு நின்ற பதியோனைப்பாரு—சங்கரா. (216)

இல்லேழில் கருநாகமேற—சென்மன்
இடும்பனும் பரதார மோகனுங்கள்ளன்
இல்லாளுந் தைரியசாலி—பூவில்
இதமாக வசியனும் எடுத்துரைத்தாண்டி—சங்கர. (217)

அஷ்டமங் கருநாகமேற—சொல்லும்
அம்மையால் சோரனால் அரவத்தால்துன்பம்
துஷ்ட தனநாசன் சென்மன்—மாதே
தூலத்தில் ரணரோகஞ் சொல்லடி தோழி—சங்கர. (218)

மலைக்கி நிதிகருநாகம்—சென்மன்
மணிமந்திரவாதியாம் பிதுர்வர்க்கநாசம்
மலையிலும் விகடத்தால் லாபம்—பூவில்
கண்டித்துச் சொல்லச் சொன்னாண்டி தோழி—சங்கர. (219)

பதிபத்தி லைந்தலைநாகம்—செப்பும்
பாரியாள் மெத்த புனிதனா மில்லோன்
பதிமன்னரால் வெகு லாபம்—மாதே
பதிக்கி புத்திரர் அற்பம் பகர்ந்தாண்டி தோழி—சங்கர. (220)

பதினொன்றில் கருநாகமேற—செப்பும்
பாலன் செவிமந்தன் நோயன் பண்டிதனும்
பதிபத்தி விசுவாசநேசன்—பூவில்
பாலனுக்குமூத்தோன் தோஷஞ்சொல்தோழி—சங்கர. (221)

பனிரெண்டில் கருநாகமேற—ஜென்மன்
பாக்கியன் சஞ்சாரன் பாதனேயுள்ளோன்
செனித்தபின் பூர்வதனமும்—பூவில்
சிதறியேபோச்சுது சொன்னண்டிதோழி—சங்கர. (222)

செம்பாம்பின் நிலமை (கேது)

மலைக்கி தனத்தில் செம்பாம்பு—ஜென்மன்
மணிமந்திரவாதி விஷமொழி வஞ்சன்
கலையாலுந் தொழிலாலும் லாபம்—கூறும்
கடுந்துஷ்டன் பந்து விரோதியாம் தோழி—சங்கர. (223)

மலைக்கி மூன்றில் கேதுநிற்க—ஜென்மன்
மாவீரசாலி கபாலநோயுள்ளோன்
கலைகேள்வி காரியத்தாழ்ச்சி—மாதே
கண்டித்துச்சொல்லடி சொன்னண்டிதோழி—சங்கர. (224)

உதித்த நாளில் பொல்லாக்கேது—சென்மன்
உதித்த மணைபாழா மாதுருக்கு பீடை
உதித்த நாளில் நல்ல குளிகன்—மேவ
உறக்கவும் குச்சில்லை உரைத்தாண்டி தோழி—சங்கர. (225)

பதிக்கஞ்சில் செம்பாம்புமேற—சென்மன்
பலமுள்ள குளிகனும் பாம்புடன்மேவ
பதியாளும்பெற்று மிளப்பள்—சென்மன்
பாழுஞ் சாவடிதனில் பொசித்திருப்பாண்டி—சங்கர. (226)

மலைக்காரில் பொல்லாத கேது—மாதே
மானிலத்தில் தனக்கீர்த்தி பெலவான்
கலைகேழ்வி ஞானிபோல் வாழ்ந்து—பூவில்
கண்டோருங் கேட்டோருங்கொண்டாடுவார்கள்—சங்கர. (227)

மலைக்கேழில் பொல்லாதகேது—மாதே
மானிலத்தில் தார ஸ்திரீயையுஞ் சேர்வன்
இளைப்பும் களைப்பும் சஞ்சாரம்—பூவில்
இதமாக வாழுவன் சிலகாலந் தோழி-சங்கர. (228)



துஷ்டகேது பொல்லா எட்டில்—சென்மன்
துஷ்டன் அவமானன் அரவமே தீண்டும்
துஷ்ட பேய்பிடிக்கும் பயனல்—மாதே
தோஷங்க ளுண்டாகும் குழவிக்கி தோழி—சங்கர. (229)

அட்டமம் செம்பாம்புமேற—சென்மன்
அயலார்கள் பூஷணம் மோசமும் செய்வன்
இஷ்டமாய் கூறுவன் மொழிகள்—பூவில்
இதமாக நம்பாதே வஞ்சகன்தோழி—சங்கர. (230)

நிதியில் செம்பாம்பு மிருக்க—சென்மன்
நிதியோனும் ஜாலன் பிதிர்பகை கொள்வன்
பதியில் பலவித லாபம்—பூவில்
பகருந் தனங்களால் பெயர்கொள்வன் தோழி—சங்கர. (231)

பதிபத்தில் பொல்லாத கேது—சென்மன்
பாக்கியவான் சூரன் பலஜன விரோதி
எதிரிக்கிச் சண்டனய் வாழ்வன்—சென்மன்
இதமாகச்சொல்லச் சொன்னண்டி தோழி—சங்கர. (232)

பதினொன்றில் செம்பாம்பு மேற—சென்மன்
பாக்கியவான் நல்ல அரசனல் லாபம்
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
விளங்கும் புத்திரனலும் லாபம் கொள்வாண்டி—சங்கர. (233)

பணையும் பலவித நஷ்டம்—சென்மன்
பாதனேய் மூடகன் நேத்திர ரோகன்
மலைக்கி யீராரில் செம்பாம்பு—நிற்க
மைந்தனுக்கு விதி கூறுவாய் தோழி—சங்கர. (234)

பதியன் தனத்திலுமேற—அந்த
பதியன் பதியில் கேந்திரமேற
விதியும் நிதிபதியுண்டு—சென்மன்
விளங்கும் பேரங்களுந் தல்லாளிலாபம்—சங்கர. (235)

கணக்க நீராரிலுமேற—சென்மன்
கணக்காலும் வழக்காலும் கொடுமைகளுண்டு
பிணக்குங் கழிச்சலும் போகமும்—மாதே
புத்தியறிந்து புகட்டச் சொன்னண்டி—சங்கர. (236)

கணக்கனு மீராரிலேற—சென்மன்
கடனில் பிரபத்தியம் செய்குவன் வினையால்
பிணக்கும் வழக்காலும் பேச்சு—மாதே
புந்தியில் கிராணியாம் குய்யத்தில் ரோகம்—சங்கர. (237)

பஞ்ச மலையுமே ரேக்கு—அதில்
பண்பாக புந்தி அமர்ந்திருந்தாலுங்
மைந்தனை தத்துமெடுப்போர்—இல்லில்
கொடுஞ்சனி நின்றாலு மவைபோல செப்பு—சங்கர. (238)

பதியையும் மூன்றுகோள் நோக்கச்—சென்மன்
பார்மன்னர் நேசன் போகவான் வினையால்
விதியும் விதிகளுமுண்டு—பூவில்
விளங்கும் புனிதனும் விளம்பினேம் தோழி—சங்கர. (239)

சாமி பதியையும்பாரு—அதில்
சனியோடு சிகியுமே சேர்ந்திருந்தாலும்
நாவி பெருகுமாஞ் செயலால்—மாதே
நல்லோர்கள்கான நகருஞ்சொல் தோழி—சங்கர. (240)

சாமி பதியையும் பாரு—அதில்
சனியோடு மாலுஞ் சேர்ந்திருந்தாலும்
ஆணி அரைந்ததுபோல—சென்மன்
அங்கங் கூனுகும் அரைந்தாண்டி தோழி—சங்கர. (241)

இருநாலோன் னொருமூன்றோன் சேர—மாதே
இதமாக ஒறில்லி லிணங்கி நின்றாலும்
பெரு அண்டரோகமுமுண்டு—சென்மன்
பெரியோர்கள் காணப் பெருக்காது தோழி—சங்கர. (242)

பதிக்கி மூன்றுடையோனும் பாவி—அவர்
படவரவுடன்கூடி எங்கிருந்தாலும்
பதியாள் குடும்பனைசிறி—பூவில்
பலருடன்கூடுவாள் பாக்கியசாலி—சங்கர. (243)

பதி ஐந்துக் குடையோனும் பாவி—அவர்
படவரவுடன்கூடி மூன்றினி லேற
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
வேழ்விழியாள் சோரம் செய்குவாள் தோழி—சங்கர. (244)



கதிர்மதி யிருவர்கள் தானும்—மாதே
கனமுள்ள பதியையும் கண்ணாலே நோக்க
விதிகள் நிலைபிசகாது—சென்மன்
விளங்குஞ் சக்கிலிப்பெண்ணை விரும்பியே அணைவான் சங்கர.

மதியன் பனிரெண்டி லேற—மாதே
மதியனுக் கெட்டினில் மங்கள நிற்க
விதிகள் நிலைபிசகாது—கூறும்
விளங்கு மங்களனுக்கு எட்டினில் தீபர்—சங்கர. (246)

தீயர்கள் நிலைபேத மாய்ந்து—மாதே
திடமாகச் செப்புவாய் அன்னியபீஜம்
ஆயன் விதியையறிந்து—வஞ்சி
அன்பாகப் பாடினேம் ஆனந்தமாக—சங்கர. (247)

பௌம னிருப்பிடம் பாரு—அந்த
பவுமனுக் கொன்பதில் நீலனுமேவ
தருமர்நூல் விதிபிசகாது—சென்மன்
தரையில் விழுமுன்னே பிதுர்போவன் தோழி—சங்கர. (248)

வெள்ளி யிருநாலி லேற—மாதே
வினையும் பணையில்லு தரவையு மீவன்
வெள்ளியால் பின்னாலே கேடு—சென்மன்
வினையுந் துன்பங்களுக் கென்னசெய்வாண்டி—சங்கர. (249)

பதிஅஞ்சுக் குடையோனைப்பாரு—அவர்
பால்மதியுடன் பனிரெண்டோனைக் கூட
பதிக்கோபுரந் தன்னில் கம்பம்—கட்டி
பாலன் கழைக்கூத்து ஆடுவன் தோழி—சங்கர. (250)

பனிரெண்டுக் குடையவனோடு—மாதே
பவுமனு மெட்டோனுஞ் சேர்ந்துநின்றாலும்
குணிதம் விதிபிசகாது—சென்மன்
கோபித்து வெகுதூரஞ் செல்லுவன்தோழி—சங்கர. (251)

அட்டம னெவருனு லென்ன—பொல்லா
அட்டமன் செய்யும் அயன்விதி கேளு
சுற்றத்தா ரூரார்பகையும்—சேய்க்கி
சுகமிருந்தாலுஞ் சுருதியைக்கேளு—சங்கர. (252)

பண்டுபொருள் பணைநஷ்டம்—மாதே
பார்மன்னர் பகையுண்டு ஜலபயமுண்டு
குண்டு மருந்தாலும் கேடு—இல்லில்
குமரியால்விளையும் பலதுன்பம் தோழி—சங்கர. (253)

மேடம் சுறு நண்டு கன்னி—அன்றும்
மேலான எருதைந்தில் கருநாகம் நிற்க
நாடெங்கும் பேரு விளங்கும்—பூவில்
நலமென்று புகழாதே நவிலுவன்கேளு—சங்கர. (254)

கேளு கிரகங்கள் நான்கு கோடியில்
கெதியுள்ள மைந்தனுக் கமர்ந்திருந்தாலும்
ஆளுவான் இராஜாங்கயோகம்—அல்லால்
அஸ்தகிரியோக மடைவாண்டி தோழி—சங்கர. (255)

கருநாக மாறினி லேற—மாதே
கனமுள்ள செம்பாம்பு ஈராரி லேற
குருபதி கேந்திரம்யேற—பூவில்
குமரனுக் கஷ்டலட்சுமியோகம் தோழி—சங்கர. (256)

பருவப் பிராயத்தில் சென்மன்—மாதே
பார்தனில் பாக்கியம் மெத்தவெடுப்பன்
குருமுனி மொழிபிசகாது—சென்மன்
கொடுவாளால் நரபெலி வெட்டுவன் தோழி—சங்கர. (257)

பத்துக் குடையவனோடு—ஜொலிக்கும்
பாக்கியன் சேர்ந்தாலு மாரினின்றாலும்
வத்தாத செல்வமளிப்பன்—பூவில்
வளருங் குழவிக்கி பார்த்தாலும் செப்பு—சங்கர. (258)

செப்புமுலைமாது கேளு—பூவில்
செந்நெல் வயல்களுந் தோப்புகளுண்டு
குப்பல் குப்பலாகச்சேரும்—தனங்
குழவிக்கிக் கிட்டுமாங் கூறுவாய்தோழி—சங்கர. (259)

விரையாதி ரெண்டோனைக் கூட—மாதே
விளங்கும் சப்தமம் லாபம் வீற்றிருந்தாலும்
சுரத சங்கீதத்தா லாபம்—சென்மன்
சுயதேச பரதேச ராஜனுஞ்செப்பு—சங்கர. (260)



செப்பும் பந்துவிளையாட்டும்—மாதே
செம்பாம்பை ஆட்டுவன் சபையோர்கள் காண
தப்பாது சித்தர்கள் வாக்கு—சென்மன்
தரணியில் நல்வேடமும் தரிப்பானும் தோழி—சங்கர. (261)

சேயோடு வெள்ளியுஞ் சேர்ந்து—மாதே
சென்மனுக்கு போக தானத்திலேற
ஆயன்விதி பிசகாது—சென்மன்
அமங்கலியைக்கூடி அணைவாண்டிதோழி—சங்கர. (262)

பத்தோநிதி தனலாபன்—நால்வர்
பகருந்திரிகோண கேந்திரமேற
மற்றவ ரெங்கிருந்தாலும்—சென்மன்
மானிலத்தில் கீர்த்தி நிதியுடையாண்டி—சங்கர. (263)

பத்தோநிதி தனலாபன்—நால்வர்
பலமற்று வியமாறு எட்டினிலேற
செத்தசவமாவன் சென்மன்—பூவில்
சிதறுவான் அய்யம் எடுத்துண்பான் தோழி—சங்கர. (264)

மதி குரு சுங்கனும் புந்தி—நால்வர்
மலைக் காறு வியமெட்டி லமர்ந்திருந்தாலும்
பதியன் கேந்திர முச்சமோ—சென்மன்
பாரினில் செயலாக வாழ்வாண்டிதோழி—சங்கர. (265)

மலைதன மிரண்டையும் பாரு—அந்த
மலைகளில் எழுபேர் கூடிநின்றாலும்
கலைமகள் வாணியும் வாசம்—சென்மன்
கனவானுந்தனவானுஞ் சிமானுந்தோழி—சங்கர. (266)

பால்மதிக் கிருமூன்று யெட்டில்—மாதே
பதிகளில் சுபர்க ளமர்ந்திருந்தாலும்
சேல் விழியாள்பெற்ற செல்வன்—பூவில்
செம்பொன் னுடையாண்டி சொன்னுண்டி தோழி—சங்கர. ()

பத்தாமிட மீனமாகில்—அதில்
பவுமனும் பால்மதி சேர்ந்திருந்தாலும்
சித்தர்கள் நூல்பொய் போகாது—சென்மன்
சிறப்பாக கெங்காஸ் தானமுஞ்செய்வாண்டிதோழி—சங்கர. ()

சுங்கனுக்கு நான்கில் யிந்து—மாதே
சுகமுள்ள யிந்துக்கு நான்கிலும் வெள்ளி
பங்கமில்லாமலே வாழ்வன்—சென்மன்
பாரினில் ரதம்காடி சிவிகையு முள்ளோன்—சங்கர. (269)

உண்டு பதிக்கொரு நான்கில்—நல்ல
உத்தமர் அம்புலி உச்சத்தி லேற
பண்டு பொருள்களு முண்டு—மாதே
பாரினில் சிவிகை ரதமுண்டுதோழி—சங்கர. (270)

நிலவுக்கு கதிரவன் கோணம்—மாதே
நீநிலத்தில் தனஞ் சுகவானு மில்லோன்
அலகை கெணதுற்கை வசியன்—சென்மன்
அந்தகன் அழைப்பானும் அறுபத்தெட்டாண்டில்—சங்கர. ()

தீயர்கள் யேழினில் நிற்க—மாதே
திடமாகச் செப்புவன் தெருவையர் நட்டம்
ஆயன்விதி பிசகாது—தீயர்
அட்டமமேர அமங்கலியாவாள்—சங்கர. (272)

இராமன் நிலைபேதம் பாரு—அந்த
இராமனு மாரெட்டு லெக்கினமேற
இராமனைத் தீயர்கள் நோக்க—மாதே
இராமனால் குழவிக்கித் தோஷஞ்சொல் தோழி—சங்கர. (273)

செப்புநாள் தொண்ணூறுக் குள்ளே—மாதே
சென்மனைத்தேடி வருவானும் சண்டன்
ஒப்புவாய் உத்தமர்காண—தோஷம்
ஒதுங்கும் கதிர்கண்ட பனிபோலபோகும்—சங்கர. (274)

மதிபத்தில் குருபதியேற—மாதே
மன்னர்கள் வசியனும் பெரியோர்களன்பன்
விதியும் நிதி தனமுண்டு—பூவில்
விளங்குஞ் சேனாதிபதி மந்திரிதோழி—சங்கர. (275)

நாலஞ்சு பேர்களுங்கூட—மாதே
நலமில்லை முன்பின்னும் கோள்களுஞ்சூழ
ஊழ்வினைக் கென்செய்வன் சென்மன்—மாதே
உலகில் பலதுன்பம் மடைவாண்டி தோழி—சங்கர. (276)



அடையுமோர் சூட்சமுங் கேளு—மாதே
அத்தலத்தோன் சேர அமடில்லை சேய்க்கிக்
குடையாளும் மன்னராலாபம்—கோதே
குற்றங்கள் வாராது குழவிக்கிதோழி—சங்கர. (277)

அரசன்கொடியை சீமான்கொடி பழித்தல்.

மகர மேழுக்குள்ளே மந்தன்—கூறும்
மதியனுங் கேந்திரம் அரசனே சென்மம்
ஜெகமாளு மரசன்கொடியை பூவில்
சீமான் கொடியும் பழிக்குதுபாரு—சங்கர. (278)

கோடீஸ்வரன்.

பதியோனும் லாபனு முச்சம்—ஜொலிக்கும்
பத்தோன் தனத்தி லமர்ந்திடவேணும்
புதிக்கி நிதிதனன் சுகவான்—சென்மன்
பகரும் கோடீஸ்வர ரென்றுரைத்தாண்டி—சங்கர. (279)

அரசன்.

மதியன் சனியனு முச்சம்—மாதே
மதிமகன் மார்த்தாண்டன் கன்னியிலேற
பதி பூமிக்கரசனாய் வாழ்வன்—கூறும்
படைவீரர்வெற்ற அணியுடையாண்டி—சங்கர. (280)

மதியனும் ரிஷபம் பதியாம்—சொலிக்கும்
மார்த்தாண்டன் சிங்கம் முடவனும்கும்பம்
பதிஎங்கு மாளுமரசன்—மாதே
பரம குருவேழி லமர்ந்திடவேணும்—சங்கர. (281)

பவுமனு மேடத்திலேற—சொலிக்கும்
பளிங்கன் துலாத்தி லமர்ந்திடவேணும்
அவுணர்கள் புகழுமரசன்—மாதே
அரசனும் கடக மமர்ந்திடவேணும்—சங்கர. (282)

பதியில் சனியனுமேற—சொலிக்கும்
பரம குருநாலில் பத்திலும் வெய்யோன்
பதிக்கி மன்னென்றிலு மற்றோர்—பர்லன்
பகரு மண்டலமெங்கு மாளுவன்தோழி—சங்கர. (283)

வெய்யோனும் தனுசிலுமேறச் சொலிக்கும்
வெண்மதிசேயு மீனந்தினிலேற

துய்யவெள்ளி வியம்பலாம்—சென்மன்
தலைபூமிக்கரசனாய் வாழ்வாண்டி தோழி—சங்கர. (284)

இல்மேடமதில் வெய்யோன் சேயும்—சொலிக்கும்
இதமாக கடகம் வியாழனுமேற
இல்ரெண்டில் மதிபுந்தி வெள்ளி—சென்மனு
இதமாக ஆளுவன் பூமிமுழுதும்—சங்கர. (285)

இருநான்கு யீரைந்து நிதிலும்—மாதே
இதமுள்ள யில்லினும் ரவிசுங்கனேற
பெருகும் வளர்பூமிக் கரசன்—சென்மன்
பிரபலமாகவே அரசு செய்வாண்டி—சங்கர. (286)

கருமங் திரிகோணம் லாபம்—சொலிக்கும்
கனத்த ரெண்டில் கதிர்செய் வெள்ளியேற
பெருகுஞ் சமுத்திரத்தீவில்—சென்மன்
பிரபலமாகவே ஆளுவன்தோழி—சங்கர. (287)

நீசம் பங்கம்.

மகத்தான கோளையும்பாரு—மாதே
மயங்குவார் தயங்குவார் ஒழிவில்லை நீசம்
பத்துக் குடையோனு முச்சம்—சென்மன்
பார்வேந்த யோகமடைவாண்டி தோழி—சங்கர. (288)

அடையும் விபரமும் கேளு—மாதே
அம்புலிக் கேந்திரம் கோணமுமேற
குடையாளு மன்னனுக்குள்ளே—சென்மன்
குணமாக சேவுகஞ் செய்வாண்டி தோழி—சங்கர. (289)

கோசரபலன்.

சென்மங் குருபதி யேற—மாதே
ஜெயவீர ராமன் வனஞ்சென்றான் வினையால்
உண்மை பலவிதேதோடம்—சென்மன்
உலகாளு மன்னரால் தோடஞ்சொல்தோழி—சங்கர. (290)

மூன்றில் குருபதியேற—மாதே
முடிமன்னன் மாண்டானே துரியோதனனும்
தோன்றும் குழவிக்குத் தோடம்—பூவில்
துரைமக்க ளானாலும் தோடஞ் சொல்தோழி—சங்கர. (291)



தோடத்தில் பலவித தோடம்—மாதே
தோட்டமும் சென்னல் விளைமாடாடு நட்டம்
நாடெங்குஞ் சென்றாலும் சென்மன்—வினை
நீகருமே கூடத்தொடருமாம்தோழி—சங்கர. (292)

பதியில் பலவித துன்பம்—மாதே
பகருமோர் எதிரிக்கி உச்சாகம் நான்கில்
விதியாலே சூதுகளாடி—பூவில்
விளங்கும் யாவற்றையும் தோற்றாரமைவர்—சங்கர. (293)

பதியில் பலவித நட்டம்—மாதே
பார்மன்னர் தோடம் பகருமோ ரூரில்
விதியைத் தடுப்பாரு முண்டோ—பூவில்
விளங்குமா பெலிசிறைக்கூடமுஞ் சென்றான்—சங்கர. (294)

பொன்ராமன் அம்பாலே மாண்டான்—மாதே
பொல்லாத வாலிக்கி எட்டிலும் வந்தார்
நன்மைசற்றுமில்லை சேய்க்கி—உலகில்
நகரி லுள்ளோர்களால் பலதுன்பம்தோழி—சங்கர. (295)

மூவர்க்கு முதல்வராய் நின்ற—மாதே
முக்கண்ணன் திருவினை யாடலும் பாரீர்
அபரஞ்சிப் பொன்னாலும் பாத்திரம்—ஐயம்
அவுணர்கள் காண எடுத்தாரும் பத்தில்—சங்கர. (296)

பொன்னவன் பனிரெண்டிலேற—மாதே
பொன் ராமன் கைஅம்பால் இராவணன் மாண்டான்
சொன்னேனே யிவனுக்குத்தெண்டம்—இவர்
சுகந் தந்தகணவிக்கி கண்டஞ்சொல் தோழி—சங்கர. (297)

கண்டமும் தெண்டமும் கூறு—மாதே
காளைக்கும் கோதைக்கும் அயன்விதிபாரு
சண்டன் வருங்காலம் நோக்கு—சித்தர்
சாற்றுமானந்தக் களிப்பையும் செப்பு—சங்கர. (298)

அஞ்சேழு தனலாப நிதியில்—மாதே
ஆண்டளப்பான் வாகன நிதிதனம்கிட்டும்
நெஞ்சில் நினையாதயின்பம்—பூவில்
நிமிசத்தி லடைவானும் நிலமையை நோக்கு—சங்கர. (299)

---

## நூதனமாய்ச் சேர்ந்த யோக அவயோக உடற்கூறு.

---

ஒண்ணவ னுச்சமு மாகி—மாதே
ஒரைந்தில் முடவனும் வெள்ளியை நோக்க
திண்ணமா யிவனுக்குப் புத்திரன்—தீர்க்கம்
திடமாக வியஞ்சொல்லு சொன்னுண்டிதோழி—சங்கர. (300)

ஒண்ணவன் சுபனுமேயாகி--மாதே
ஒரெட்டோன் கேந்திரகோணங்களேற
சொன்னேனே இவனுக்குயோகம்—சுகம்
போகமும் ரோகமும் சுமந்துசொல் தோழி—சங்கர. (301)

ஒண்ணவன் விரயத்திலேற—மாதே
ஒன்பதோ னாரெட்டி வீராறிலேறப்
பண்ணவே யிவனுக்குப் பாக்கியம் மெத்த
பண்டு பொருளெல்லாம் விரையஞ் சொல்தோழி—சங்கர.(302)

ஒண்ணவன் விறையமு மாகி—மாதே
ஒன்பதில் வெள்ளியு மாட்சியுமேற
சொன்னேனே யிவனுக்கு விதவை—சொத்து
கிஞ்சிற்று உண்டென்று சொல்லடி தோழி—சங்கர. (303)

இரண்டவன் திசையைநீ கேளு—அவன்
ரெண்டேழி லீறைந்தி லாபமுமேற
பெண்டு பிள்ளைகளுடன் வாழ்வன்—மாதே
சுகமுடன் ஆண்மையும் நிதியும்சொல்தோழி—சங்கர. (304)

மூன்றவன் திசையைநீ கேளு—மாதே
மூணேழில் மும்மூன்றி லக்கினமேற
நாணய வீரியமுண்டு —நல்ல
போகமும் சேவகமுங் கலந்துசொல் தோழி—சங்கர. (305)

நாலவன் திசையைநீ கேளு—மாதே
நாலேழி லாபத்தில் கேந்திரமேற
சீலமாயிவனுக்குக் கூறு —நல்ல
சென்னல் வயல்களும் நிதியும் சொல் தோழி—சங்கர. (306)

அஞ்சவன் திசையைநீ கேளு—மாதே
அஞ்சேழி லீறைந்தி லாபத்திலே
தொந்தமா யிவனுக்குச் செப்பு—சுகம்
தென்கீழ்த் திசைதனில் யோகஞ்சொல் தோழி—சங்கர. (307)



ஆறவன் திசையை நீ பாரு—மாதே
ஆறவ னஞ்சேழி லாபத்திலேறி
சீராகக் கேந்திரம் புக்க—சிறை
காவலும் யோகமும் சிறந்துசொல் தோழி—சங்கர. (308)

ஏழவன் திசையை நீ கேளு—மாதே
யேழஞ்சில் கேந்திர கோணங்களேற
மார்க்கமா யிவனுக்கு மங்கை—வயதில்
சேர்க்கையும் பூமியும் சேவகம் கூறு—சங்கர. (309)

எட்டவன் திசையை நீ பாரு—மாதே
யெட்டைந்தில் கேந்திர கோணங்களேற
சட்டமா யிவனுக்குச் செப்பு—சிறை
காவலும் துன்பமும் யோகம் சொல்தோழி— சங்கர. (310)

பாக்கியன் திசையைநீ கேளு—மாதே
பாக்கியன் லாபத்தில் கேந்திரமேற
யோக்கியம் பாக்கிய முண்டு—நல்ல
போக்கியம் ஆண்மையும் கூடவேசொல்லு—சங்கர. (311)

பத்தோன் திசையைநீ பாரு—மாதே
பாக்கியன் லாபத்தில் கேந்திரமேற
யோக்கியம் பாக்கியமுண்டு—நல்ல
போக்கிய ஆண்மையும் கூடவேசொல்லு—சங்கர. (312)

பத்தோன் திசையைநீ பாரு—மாதே
பத்தேழில் ஒரைந்தில் கேந்திரமேற
வருத்தாத செல்வம்கொடுப்பன்—சுகம்
கருமமும் வேட்டலும் சொல்லுவாய் தோழி—சங்கர. (313)

லாபத்தில் குருவு மிருக்க—மாதே
லாபனு முச்ச கேந்திரமேற
பாபமோ கிஞ்சிற்றுச் செய்யான்—மெத்த
பாக்கியம் போக்கியம் சொல்லடிதோழி—சங்கர. (314)

வெய்யோ னிருபக்கம்பாரு—மாதே
வேந்தனுக்கொவ்வான கோள்களுமேறப்
பையவே யிவனுக்குப் பண்டு—பொருள்
யோகமும் போகமும் பகர்ந்துசொல்தோழி—சங்கர. (315)

## புத்திரபாகம்.

அஞ்சவன் ரெண்டவ னீன—மாகி
அன்புடன் கூடவே பஞ்சமன் றன்னை.
விஞ்சுந்திய கோள்கள் நோக்க—மைந்தன்
வெளிப்படும் அந்தியகாலத்தில் புத்திரன்—சங்கர. (316)

அம்புமே யாட்சியுமாகச்—சுபர்
தன்னையே நோக்கப் பொன்பெலனுக
தென்புடனே சுபர் நோக்க—வெகு
திண்ணம தாகவே புத்திருண்டு—சங்கர. (317)

பாக்கிய னம்புமே யேற—அதை
பார்த்திடவே குரு சத்துருவாக
யோக்கிய யீனமாய் மங்கைக்—குண்டென
கர்மத்துக்கோர் புத்திரன்றனே—சங்கர. (318)

அஞ்சுவ னாட்சி நட்பாக—குரு
அன்புடனே பெலனுக யதைத்தியர்
விஞ்சிடும் நோக் கரத்தானே—வெகு
புத்திர ருண்டென போதிப்பாய் நீயே—சங்கர. (319)

குருவது மூன்றினில் வாழ—அந்தக்
கொற்றவன் றன்னையும் பத்தினிற் றுழக்
கரியவர் தானதை நோக்க—வெகு
காரிழை தன்னோடு காளையென்றுமே—சங்கர. (320)

அஞ்சவன் கோணமீ தேற—அந்த
ஆரியன் கேந்தர மீதினிற்றுழ
பஞ்சமா பாவிகள்—நோக்க
பாலனுண்டாமெனப் பூாடினர்தானே—சங்கர. (321)

சரத்தினிற் பொன்னவரம்பும்—ஏக
தானந்தனுதந் திரத்தினில் மேவ
உறத்துமே புண்ணியர்—நோக்க
மைந்தருண்டென முன்னோ ருரைத்தனர் தானே—சங்கர. ()

---



## ஆயுட்பாகம் உடல் உயிர் திசை மாரகவிதி.

---

சீரணஞ் சரணமென் குருவே—யுந்தன்
தாளடி பூசித்தேன் தற்காருந்திருவே
அரனே யோகந்தணை யன்னை—புத்திரர்
அடியாள் பலத்தை அடியேற் குறைத்தீர்—சங்கர. (323)

சந்தேகமெல்லா நான் றேர்ந்தேன்—ஒரு
சந்தேக முண்டதை தற்பாரதிரும்
வந்திடும் பால ரெல்லாரும்—மாளும்
மாரகந்தன்னை மகிழ்ந்துரை யையா—சங்கர. (324)

மாரகங் கேட்டிடும் பாலா—அது
மகத்தான வார்த்தை மாணுக்கனே சிலா
ஆறுமறியா ரிவ்வுலகில்—அந்த
ஆதி பிரமனதை அறிவானே யல்லால்—சங்கர. (325)

பூலோக மானிடராலே—அறியப்
போகுமோ வெந்தன் புகழ்பெற்ற சிலா
சாலோக சாமீப சாரூப சாயுட்ச்ய
தவசிகளும்யிதைத் தானறிவாரோ—சங்கர. (326)

அறிய வொண்ணு தென்றகுருவே—இந்த
அம்புவி தன்னிலே சோதிடம் பொய்யோ
இருமூன்று சாஸ்திரந்தன்னில் நீரும்
இதுவுமொரு சாஸ்திரமென்று சொன்னீரே—சங்கர. (327)

சாஸ்திரம் பொய்யல்ல சீடா—இந்த
சங்கை யறிவது வெகுவல்ல போஜா
ஆத்திரப் பட்டாலாகாது—இதில்
ஐந்தாறு தொல்லை யறியவேவேணும்—சங்கர. (328)

தொல்லை யென்று சொன்ன அய்யா அதைச்
சொல்லுஞ் சொல்லு மெங்கன் துரையேமால் மெய்யா
அல்லலா மாரகம்போகில்—இந்த
அம்புவிக்கே சொன்ன சோதிடம் பொய்யோ—சங்கர. (329)

பொய்யென்று சொல்லாதே சீடா அந்தப்
புதையலுனக்குப் போதிப்பேன் மெய்வாசா
மெய்யாக திசைமூன்று வேணும்—இந்த
மேதினிதன்னில் ஸ்புடங்களும் வேணும்—சங்கர. (330)

அட்டவர்க்கமும் வேணும்—வெகு
அன்பான தசவர்க்க மூதவுமே வேணும்
தொட்டுமே நவக்கிரக மீய்ந்த—நல்ல
சுத்தவாயுள்களுந் துணையாக வேணும்—சங்கர. (331)

புத்தியு முக்தியு வேணும்—வெகு
பொல்லாப் பதட்டத்தை தள்ளவே வேணும்
சத்தியம் நினைக்கவே வேணும்—இது
தப்பாமல் நின்றோர்க்குத்தான் வரும் சாஸ்திரம். (332)

சொன்னதை யெல்லா நானேர்ந்தேன்—முன்
சொல்லிய திசைமூன்றில் விவரபேதையா
அந்நிலை யரியவே யானும்—நீர்
அன்பாகச்சொல்லுமென் னுண்டவா ஸ்வாமி—சங்கர. (333)

சொல்லுகிறேன் கேளு மாணுக்கா—வெகு
துல்லிய மாமுயிர் திசையது மைந்தா
விள்ளுகிறேனந்த திசையை—நீயும்
வெளியில் மனந்தா னோடாமல் நிறுத்து—சங்கர. (334)

சூரியற்கு வருடம் நாலாம்—நீயும்
சொல்லு மதியவர்க்கு திசையாது வைந்தாம்
உரிய குஜர்க்குமே மூன்றும்—பாரில்
ஒங்கு மரவுக்கு உண்மையா வேழாம்—சங்கர. (335)

பொன்னவர்க்கே திசையாறு—வருஷம்
பொங்குங் கரிக்கு நீ ஒன்பதாய் கூறே
அண்ணல் புதனுக்கோ ரெட்டு—அதில்
அடங்குங் கேதுவுக்கு ஒன்பதாய் கூறு—சங்கர. (336)

சுங்கரர்க்கே திசை பத்தாம்—நீயுஞ்
சொல்லுவாய் இவ்வித மூயிர்திசை யப்பா
மங்களமா விந்த்திசையை—ஒட்டும்
மாரகஞ் சொல்வேன் மகிழ்ந்து நீ கேளாய்—சங்கர. (337)

மேரி லிருந்தோன் திசையை—முன்னால்
மேவும் பின்னுக இரண்டி லிருந்தேன்
மாரும் பனிரெண்டு ராசி—தன்னில்
மருவுக்கோட்கட் டிசைவரிசை யாய்வருகும்—சங்கர. (338)



அய்யனே யெந்தன் குருவே—சொன்ன
தறிந்தென் மேருதன்னி லேந்து கோள்நிற்கில்
மெய்யனே எத்திசை முன்பாய்—வரும்
விளங்கச்சொல்வா யெந்தன் மெய்யானகுருவே—சங்கர. (339)

ஒருராசி தனிலேந்து கோள்கள்—நிற்க
வோடும் வரிசையாய் தான்பிரகாரம்
மருராசி தனில்நின்ற கோளும்—இந்த
மாரக மாகவே யவர் மகிழ்ந்துநடப்பர்—சங்கர. (340)

கேட்டசந்தேகந் தெளிந்தேன்—திசை
கெற்பத்தில் செல்லுயெடுப்ப தெப்படியோ
தாஷ்டீகமான யென்குருவே—இந்தச்
சந்தேகந்தீர அருள்புரி குருவே—சங்கர. (341)

எந்தக்கோளின் திசைதானோ—அதை
யெடுத்து நூற்று முப்பத்தஞ்சுக்கு யீந்து
வந்தயீவை வைத்துக்கொண்டு பின்னால்
மன்னுந் திசைகோளின் ஸ்புடங்களைச்செய்து—சங்கர. (342)

சென்றிடும் நாழிகை தள்ளி—இனிச்
செல்லுங் கடிகையை யுன்னியே பெருக்கி
நின்றிடும் ரெண்டுடன் மாசம்—தேதி
நிற்கும் கடிகையும் நினைவதால் பாரே—சங்கர. (343)

செல்லுந் திசையு மறிந்தேன்—புத்தி
செப்பமுடனே யானெப்பிப் பிரிக்க
சொல்லு மெந்தனுட குருவே—யுந்தன்
துய்யமலரடி மெய்யாய்ப் பணிந்தேன்—சங்கர. (344)

புத்திபிரிக்கவே கேளாய்—திசை
பொங்கும் வருடத்தை காலிற்பெருக்கு
சத்தியமாக ஒன்றுக்கே—நாளும்
தப்பாமல் பனிரெண்டாய்த் தானுமேவைத்து—சங்கர. (345)

நவக்கிரக உடற்றிசை லெக்கம்—றன்னால்
நாடிப்பெருக்கி நீ நாளாகக்கொள்வாய்
கவனமாக விதைப் பாராய்—வெகு
கடினம் கடின்ம் யிதைக் காண்பாய் நீ மெய்யாய்—சங்கர. (346)

துய்யனே யெந்தன் குருவே—நீர்
சொன்ன உடற்றிசை யானதைச்சொல்வீர்
மெய்யனே உன்பதம் போற்றி—நன்றாய்
விளங்கவே எந்தனுக் கருள்புரி குருவே—சங்கர. (347)

சுந்திரமாய்க்கேள் மாணாக்கா—பாரில்
சொல்லு மகாதிசை தானுடற்றிசையை
அந்த லெக்கங்கொண்டு தானே—நீயும்
அன்பாய்ப் பெருக்கிட இன்பமாய்வருகும்—சங்கர. (348)

இதிலே மாரகம் சொல்வேன் கேளாய்—பாரில்
ஏற்கு மாடுதன்னில் ஜனித்தோர்க் கெல்லாம்
பதியும்பொன் கரிமாலு முடவன்—றிசை
பகரச் சேய்புக ருயிற்றிசை யதைச்சேரில்—சங்கர. (349)

வெருவியே மாரகம் செய்வர்—இதில்
மேவுந் திரிரெண்டி ஆறில் நின்றோனும்
வருக உடல்தாய்த் தானே—எட்டில்
மன்னுமேழி லாயம்நின்றவ ருடலாய்—சங்கர. (350)

சேறவரிசை தன்னிற்றானே—இவன்
செல்லுவனே யெமபுரம் தன்னையே—நாடி
ஏர்தனிற் ஜெனித்த தோர்க்கே—குருவும்
இளிவு மதிசேயு முடற்றிசையாக—சங்கர. (351)

காரிபுகர் மாலுமுயிராய்—அதில்
கலந்து திசையுமே நடக்குமே யாகில்
மாரிய மதுதாள் வந்து—கொண்டு
மாபதிக் கேகுவ ரின்னமுங் கேளே—சங்கர. (352)

எட்டில் பத்தி ரிருமூன்றில்—நின்றோ
னிவர்க ளுடற்றிசை யாகதருக
முட்ட விரண்டில் முன்னான்கில்—ஏழில்
மோதுவ ருயிராகிற் கூடினர்கொல்வர்—சங்கர. (353)

தண்டில்ஜெனித்த தோர்க்குத் தானே—குரு
சான்றோன் சேயுடலாகத் தானுமேவருக
தொண்டப் புகர்மதி மாலும்—திசை
கூறுமுயிராகக் கூடிடில் கொல்வர்—சங்கர. (354)



எட்டில் பத்திருறில் —நின்றோ
றிவர்க ளுடல் திசையாக வருக
சட்டமாய்த் திரிரெண்டி லாறில்—நின்றோன்
தானு முயிர்திசை யாகவே கொல்வன்—சங்கர. (355)

நண்டில் ஜனித்தோர்க்குத் தானே—பொன்னும்
நண்ணுங் கரிமாலும் நாடவே யுடலாய்
கொண்ட புகரு மிரவிசேயும்—திசை
குன்னி உயிராகிக் கூடிடில் கொல்வர்—சங்கர. (356)

இரண்டா ரெட்டினில்—நின்றோன்—உடல்
நேரும் திசையாக உயிர்திசை கேளு
விண்டு திரியாய் மேறில் நின்றோன்
மேவ விருதிசை யொக்கவே கொல்வன்—சங்கர. (357)

அரியிற் ஜெனித்தோர்க்குத் தானே—கரி
யானபுகர் குரு உடலதாய் வருக
அருணன் மதி யுயிராகி—கூட
அப்பவே கொல்லுவ ரந்தபொசிப்பில்—சங்கர. (358)

நாலிலாறிற் பத்தில் நின்றோன்—உடல்
நண்ண விரண்டிலு மேனிலு மூன்றில்
சாலவே நின்றவ ருயிராய்—கூட
தப்பாமற் கொல்லுவர் தனையறிவாயே—சங்கர. (359)

கன்னிமீதிற் ஜெனித்தோர்க்கே—குரு
கனலோன் மதியு முடற்றிசையாக
மன்னிக் கரிபுகர் மாலும்—ரவி
மறுகி யுயிர்திசை யாகிடிற் கொல்வர்—சங்கர. (360)

நாலிரண்டி லாறில் நின்றோன்—அவர்
நாட வுடற்றிசை யாகவருக
கோலில் மூன்றில் நாலில் பத்தில்—நின்றோன்
குன்னு முயிர்திசை யாகிடிற் கொல்வர்—சங்கர. (361)

சாதிக்கோலில் ஜெனித்தோர்க்கு—குரு
கனலோனிரவி மதிதா னுடலாக
பாதிப்பிறை புகர்மாலும்—உயிர்
பண்புதிசை யாகி லன்புடன் கொல்லும்—சங்கர. (362)

ஆறில் மூன்றில் யெட்டில் நின்றோன்—உட
லாகித்திசை வருக வதினுடனே கேள்
மாறியேழி லிரண்டில் பத்தில்—நின்றோன்
மருவி யுயிர்திசை யாகிடிற் கொல்வர்—சங்கர. (363)

தேளிற் பிறந்திடுவோர்க்கு—புகர்
செப்புங் கரிமாலு முடலதாய் வருக
வாழுங் குருவிரவி சேயு—மிவர்
வருக வுயிர்திசை மாரகஞ்செய்வர்—சங்கர. (364)

இரண்டேழி லேமேரி லெட்டில்—நின்றோ
னிவர்க ளுடற்றிசையாக வருக
கொண்ட திரியாறில் பத்தில்—நின்றோன்
குன்னி யுயிர்திசை யாகிடிற்கொல்வர்—சங்கர. (365)

வில்லி லுதித்தோர்க்கு தானே—கரி
மேதைபுகர் உடற்றிசை யதாய் வருக
சொல்லுங் குருவிரவி சேயு—இவர்
தோன்ற உயிர்திசை யாகில் மரணம்—சங்கர. (366)

குடும்பஞ் சப்தம் துணேரோகம்—தன்னிற்
கூடினவர் உடற்றிசையதாய் வருக
வடுப்படுந்திரி விதிபத்தில்—நிற்போர்
மருகி யுயிர்திசை யாகிடிற் கொல்வர்—சங்கர. (367)

சிலையில் ஜெனித்தோர்க்குத் தானே—பொன்னுஞ்
செப்பு மதிமாலு முடலதாய் வருக
மலையொற்ற புகரிரவி சேயும் இவர்
வருக வுடற்றிசை மாரகஞ் செய்வர்—சங்கர. (368)

இரண்டு மூன்றிலெட்டி லேழில்—நின்றோன்
நேத்தியாய் உடற்றிசையாக வருக
கொண்டுவியம் மாயம்ரோகம்—மேதிற்
குன்னுவோ ருயிர்திசை யாகிடிற் கொல்வர்—சங்கர. (369)

சாலிற் ஜெனித்தோர்க்குத் தானே—ரவி
சந்திரன்சேய் சனியுடற் றிசைவருக
மாலுங் குருவுமே யுயிரின்—றிசை
வருகவே யக்காலம் மாரகங்கூரே—சங்கர. (370)



மீனிற் ஜெனித்தோர்க்குத் தானே—புகர்
மேதை யிரவி கரியுடற்றிசை யாக
கோனு மாலுஞ் சனிசேயு—மிவர்
கூடிட வுயிராகக் கொல்வர் தப்பாமல்—சங்கர. (371)

இரண்டெட்டி லாறி லீராறில்—நின்றோ
ரிவர்க ளுடற்றிசை யாக வருக
விண்டவேழிற் பத்தி லாபம—மீதில்
யேகுவோ ருயிராகி லிறப்பன் தப்பாமல்—சங்கர. (372)

இந்த விதமாகத் தானே—நீயும்
யெடுப்பா யுடனுயிர்த்திசையை திரண்டும்
வந்திடும் மாரகம் பாலா—விதை
மண்ணினில் விளங்கவே வழுத்துவாய் சிலா—சங்கர. (373)

அய்யனே எந்தன் குருவே—நீர்
அன்புடனே சொன்ன மாரகந்தன்னை
துய்யனே யானதைத் தானே—யிந்தத்
தொல்லுலகில் கூறில் எல்லோரும் நகைப்பார்—சங்கர. (374)

நகைப்பது என்னத்தினாலே—யதை
நாடியுரைப்பாய் மாணக்கனே சிலா
வகையுடன் மொழிவாயே யாகில்—உந்தன்
மனம்போ லுரைப்பேன் மங்களமாக—சங்கர. (375)

குருவே யஞ்சாறு வருடந் தன்னிற்
கொல்லுவ றென்றேயான் கூறுவேனாகில்
தரணியோர் நகையாரோ என்னை—இந்த
சஞ்சலந் தீர்ப்பா யென்தர்ம குருவே—சங்கர. (376)

சஞ்சலம் வந்திடும் பாலா—உன்னை
தப்பாமல் புத்தி யெடுக்கச்சொன்னேன் முன்
வஞ்சக மற்றிடும் பாலா—வதை
வழுத்துகிறேன் நினைவாக நீகேளாய்—சங்கர. (377)

உடற்றிசை யோனின்ற தானம்—அதற்
குடையோனு ரெட்டேழி ரண்டுக் குடையோர்
அடலவே யிவர்புத்தி வருக—தானே
அப்பவே கொல்லுவா ரதையுமல்லாமல்—சங்கர. (378)

பத்தில் வியமிலாப மைந்தில்—மூன்றில்
பதியுந்திசை நாதனுக்கே பார்ப்போர்
சத்தியமாகவே சொல்வர்—இதைத்
தப்பாமற் புத்தியாய்ப் பார்த்திடுஞ் சிலா—சங்கர. (379)

உயிர் திசைக்கே சொல்வேன் கேளாய்—அவர்
உதித்த விராசிக்கு ஒன்பதற் குடையோன்
வயிரம் நாலைந்துடை யோரும்—இவர்
மாரகம் செய்வர் மன்னியதல்லால்—சங்கர. (380)

எட்டிலாறில் நாலில் பத்தில்—நின்றோர்
இவருங் கொல்வரிதை யின்பமாய்க்கண்டு
சட்டமாம் இருதிசை புத்தி—கண்டு
தப்பாமற் கூறென் றருள்பெற்ற சிலா—சங்கர. (381)

சந்தேகம் ஒழிந்தது ஸ்வாமி—முன்னாற்
சாற்றுங் காலச் சக்ரதிசை யேதுக்கையா
அந்தமுடனே யெனக்கு—அதை
அருள்புரியு மெந்தனுண்டவா ஸ்வாமி—சங்கர. (382)

சொல்லுகிறேன் கேள் மாணாக்கா—முன்
சொன்ன வுயிர்திசை தன்னோடுதானே
வெல்லுங் காலத்திசை பார்க்கில்—அது
மெய்யாகும் நீக்கிடிற்—பொய்க்குமோர்காலம்—சங்கர. (383)

ஆனாலடியோர்க்குத் தானே—யதை
அன்புடனே நீரும் அருள்புரிஸ்வாமி
மாணாக்கனே ஒருமனதாய்—நில்லு
மகிழ்ந்துரைப்பேன் மனம்வைத்துதானே—சங்கர. (384)

---

உ

கடவுள் துணை.

## காலச்சக்கிர திசை (நொண்டி.)

---

குசனுக் கேழாண்டாகும்—புகருக்குக்
கூறுவா யிரெட் டாண்டாக
தசமெனப் பொன்னவர்க்கு—கூறுஞ்
சந்திரன்றனக்கு மூவே ழாண்டாகும். (385)



புதனுக்கு நவமாகும் இரவிக்கும்
பொங்குவருடமது வைந்தாகும்
விதமுடன் கரியவர்க்கே திசையும்
வேதமாகவே முன்னோரும் தானுரைத்தார். (386)

*வலவோட்டு மிடவோட்டு மிதனில்
மருகிவருகுமது விபரங் கேளாய்
வலமது வாசிசோறும் வாணன்பிண்டி
வண்டு பாம்புகளிற் தச்சன் றீபம். (387)

சிலை பூராட மாடி நாழி
செப்பூ முரசு முச்சூல மூவஞ்சும்
வலவோட்டு நாளதுவே—பின்னால்
மருகியிட மாயோடு நாள்கேளாய். (388)

*பாலை சகடு செங்கை வேள்வி
பங்குனி யெலியொடு சுளரு தேளும்
மாயோ நாளுடனே—வல்லாரை
மண்ணிற்பரவை செக்கு பனிரெண்டும். (389)

இடவோட்டு நாளுடனே—முன்னோர்கள்
இயம்பினர் சுக்கிர னடிதன்னில்
திடம்பிரவே புசிப்பு வோட்டும்
சோதியைச் சொல்லுகிறேன் நீதியதாய். (390)

| வலவோட்டு நட்சத்திரம். 15. | | இடவோட்டு நட்சத்திரம். 12. | |
|---|---|---|---|
| *வாசி | அசுவதி | | |
| சோறும் | பரணி | *சகடு | ரோகணி |
| வாணன் | கார்த்திகை | பாலை | மிருகசிரிடம் |
| பிண்டி | புனர்பூசம் | செங்கை | திருவாதிரை |
| வண்டு | பூசநாள் | வேள்வி | மகம் |
| பாம்பு | ஆயிலியம் | பங்குனி | உத்திரம் |
| களிற் | அஸ்தம் | எலியொடு | பூரம் |
| தச்சன் | சித்திரை | சுளரு | விசாகம் |
| தீபம் | சுவாதி | தேளு | அனுஷம் |
| சிலை | மூலம் | மாயோ | } திருவோணம் |
| பூராடம் | பூராடம் | நாளுடனே | } |
| மாடி | உத்திராடம் | வல்லாரை | கேட்டை |
| நாழி | பூரட்டாதி | மண்ணீர்ப்பறவை | அவிட்டம் |
| முரசு | உத்திரட்டாதி | செக்கு | சதயம் |
| முச்சூலம் | ரேவதி | | |

*பரியெரி பிண்டி பாம்பு—அத்தம்
பகரும்விளக்குச் சிலை விளை பாடியுடன்
பூரட்டை யிரேவதியும்—வலவோட்டு
பொங்கு நட்சேத்திரம் பத்துக்கும் (391)

முதற்கால்—மரிமுதலாய்ச் சரியாய்
முயன்றுசிலை வறையி னு ராய்க்—கொள்வாய்க்
இதம்பெற இரண்டின்நாளே என்னு
மீன்றிறள் கோலரிவை நண்டு. (392)

அரியாமென விதற்கு முன்னோர்கள்
அன்புட னென்பத் தஞ்சாண்டெனவே
திரிகாலேற் மறிமீன்—சாபகலை
சிலை கொறியோ யா மெண்பத்திமூன்றும். (393)

வேதமே நண்டுமுதல் மீனவரை
மிக்கவே கொள்வா யெண்பத்தாறய்
மீதியடுப்பு வண்டு ஆடை
விளங்கு பூராட முரசு வைந்தில். (394)

ஆதிபதந் தேள் கோள்கன்னி
யலவன்றி யாழ்பெரு மரிமீன்
சோதனை யாகமுன்னோர்—ஆண்டுஞ்
சொல்லினர் நூறுக விளப்பினரே. (395)

வினையின் பதங்கும்பம்—கலைசிலை
மேஷமோர் யாழ்நண்டு வரிகன்னி
தனக்குமே யெண்பத்தஞ்சு ஆண்டென
சாற்றினர் முன்னோர்கள் சற்றினரே. (396)

குணங்கோல் தேள்சிலை மான் சால்மீன்
கொட்டு விரிச்சிகம் செட்டிகன்னி
மணமுட னென்பதற்கு—வருஷம்
மகிழ்ந்து யெண்பத்தி மூன்றுகுஞ் சொன்னேன். (397)

---

| | | | |
|---|---|---|---|
| *பரி | அசுவனி | பகரும்விளக்கு | சுவாதி |
| எரி | கார்த்திகை | அத்தம் | அஸ்தம் |

மற்றபத்துக்கும் அர்த்தம் மேலே சொன்னது.



யுகம் நண்டயாமேழும்—மறிமீன்
மொக்குங் குடங் கலைசிலை யொன்பதும்
தகைமையா வெண்பத்தாறு ஆண்டெனச்
சாற்றினர் கேரள சாஸ்திரத்தில். (398)

திடம்பெற வலவோட்டு திசைக்கிச்
செப்பினேன் புத்தியது போகுமார்க்கம்
இடவோட்டு நாளதற்கு—புத்தி
யியம்புகிறேன் மனதொன்றாய்க் கேளு. (399)

வெட்டுவன் சுளகு வுருள்வோணம்
மேனிடு நாலுக்கு முதற்காலில்
வோட்டிடு மார்க்கமது சொல்ல
வொருமித்து மனதொன்றாகக் கேளு. (400)

சிலைகலை சால் கயலு மரியோர்
செப்புமிதின மரிநண் டொண்பதும்
கலையுட னெண்பத்தாறும் ஆண்டுக்கும்
தப்பாமல் நடக்குமே புத்தியதாய். (401)

இறண்டில் மடந்தை துலாம் தேள்மீன்
மினிய குசவன் கலைசிலை தேள்கோல்
விரைவுடனே ஒன்பதற்கும் ஆண்டு
விளம்பின ரெண்பத்து மூன்றுக. (402)

திரிகன்னி அரிநண்டு யாழ்—யேறுடு
செப்புஞ் சிலைகலைசா லொன்பதும்
வருகுமே யெண்பத் தஞ்சாண்டென
வகுத்துமே புத்தியது வோட்டுவார்கள். (403)

வேத மீன்மறி யேறுயாழ் அரிநண்டு
மிக்கவே கன்னிகோள் தேளொன்பதும்
சோதனையாகவே நூறு ஆண்டுக்குச்
சொல்லுவார் புத்தியது விள்ளுவாரே. (404)

மார்கழி செங்கை யெலிபங்குனி
மன்னுந்தேள் சேட்டை பரவைசெக்கு
தீர்க்கமா யிருநான்கு தாரைக்கும்
செப்புவேன் புத்தியது வொப்புவேனே. (405)

யேகமீன முதலாய் நண்டுவரை
யெடுப்பனவ தாரைக்கு மென்பத்தாறாய்
தாகமுடனே இதனைக்கண்டு
தாஷ்டகமாவே நீயுரைப்பாய். (406)

இரண்டின் பதமியாமேழ் மருவில்
யேற்குங் கலைசால் மீனமரியேர்
திரமுட னென்பதற்கும் புத்தி
செப்புவாய் யெண்பத்தி மூவாண்டாம். (407)

திரிபத மிதுனஞ் சிங்கம் நண்டு கன்னி
செட்டி விருச்சிக மீன்சால்கலையும்
வருமிந்த வொன்பதற்கும் புத்தி
மாட்டுவா யெண்பத்தஞ் சாண்டாக. (408)

நாலில் வில்தேள் கோல்கன்னி யறி
நண்டு மிதுனமோர் மறியொன்பதும்
பாலிதமாய் நூறு ஆண்டெனப்பாடினர்
முன்னோர்கள் பாடினரே. (409)

புத்திபிரிக்க வகையும் மொழியவே
பொருந்தி யொருமனதா யிருந்துகேளே
நத்திபுரியவே கோள்கள்
நண்ணுந்திசை வருடந் தனக்குமேதான். (410)

திசைக்கோள் வருடந்தன்னை அதற்குத்
திங்காகக் கொடுத்தந்த யீவைவைத்து
புசிப்பென திசைவருடம் அதனிற்
பெருக்கிடப் புத்தியது வருகுஞ்சொன்னேன். (411)

மீனிலிருந்துமே தான் தேளில்
மிக்கவே தாண்டுங் காலமதில்
ஆனியா யுடற்றிசையும் இருந்திடி
லதுக்குப்பலனதுவும் விரித்துரைப்பேன். (412)

இராசன் வினமித்துறு விரோதம்
நண்ணுஞ் சிறை காவறக்கிகிபயம்
நீசனு லவமானம் சோரபயம்
நிலைக்குந் திரேகபீடை தானுமே. (413)



சுபன்றிசை யுடலாகில் அதற்கு
சொல்லுவாய் புத்தியினல் வெல்லுவாயே
தபமுடன் மறியில் நின்று வில்லில்
ரூண்டிடிற் பலனது தான்கேளாய் (414)

தூரலோகாபனமாம் இதற்குச்
சொல்லும் பிதுர்புத்திர களத்திரங்கள்
திரமுடன் ரணபயமும் இதற்குச்
செப்பு மகாதிசை யொட்டியே தான். (415)

கன்னியில் நின்றுபின்னல் நண்டில்
கதிக்கத் தாண்டிலது மண்கேகெதி
...ன்னினிற் களத்திரங்கள் தனக்கும்
மாரகஞ்சொல் லுடற்றிசையை யொட்டி. (416)

சிங்க மிருந்து பின்னல் தண்டில்
செழிக்கவே தாண்டுவது சர்ப்பகெதியாம்
மங்கும் பிதுர்மாதுர் அதனில்
மகிழ்ந்து மகாதிசை யறிந்துசொல்லே. (417)

தண்டிலிருந்து வரியில் தாண்டில்
தாணுமற் கடமென்ச் சாற்றினர்கள்
விண்டிடு மரைக்குமேலே விரணம்
விளம்பு மகாதிசை யதனையொட்டி. (418)

பாவிதிசை யுடலாய்ச் சக்கரதிசை
பலுக்குந் தீயோர்திசை தானுக
ஞவியமான புசிப்பு இறண்டையும்
ஒத்து வினயமதிற் மிகச்சேர்த்து. (419)

கூறுவாய் புவியோர்க்கே யதனில்
குற்றம் வாராது ஒருநாளுமெய்யே
தீருவாய் சந்தேகம் மின்னஞ்
செழிக்குஞ்சந் தேகமது—கூறுவாயே. (420)

**காலச்சக்ரதிசை முற்றிற்று.**

---

## குருவைச் சீஷன் சாஸ்திரக்கேழ்வி.

வெண்பா.

வார்சடையோன் தன்னருளால் மறைக்குமுதலானவரே
பார்புகழும் ஞானப்பரிக்கொழுந்தே—சீர்பெருக
வந்துமுந்த னற்பதத்தென் மாமுடியின் மேற்றறிக்க
சந்ததமும் நீகருணை தா.

உடற்கூறு.

வாசிப் பறிகில கண்ட—வெந்தன்
மாமுனியே வுந்தன் றளடிபோற்றி
தாசனுய் வந்திட யானும்—வென்னைத்
தற்கார்க்கவேணுந் தயாபரமூர்த்தி—சங்கர. (421)

யோகந்துணைவர்கள் அன்னை—புத்திரர்
ஒங்குங் களத்திர ஆயுள்கள் தங்கை
தாகமாய் ஒன்றுக் கிரண்டு—பாகந்
தமியேனறிய யுரைத்தீர் நீர் முன்பாய்—சங்கர. (422)

அதனையோஜிக்கு மளவில்—இந்த
அடியேன் மனதில் சஞ்சலமுண்டு ஐயா
சுதனே சஞ்சலம் வந்ததென்ன—அதைச்
சொல்குவாய் வேராச் செய்வேன் கண்ணு—சங்கர. (423)

மண்டலமாண்டிடு மிராஜன்—மனையில்
மைந்தனொருவ னுதிக்க வக்காலம்
கொண்ட பரச்சேரி தன்னில்—மைந்தன்
கூடிப்பிறக்க வரைநாழிகைக்குள்—சங்கர. (424)

இராஜ னரசு புரிய—நீசன்
நன்மையா யேவற் றொழில்கள் புரிய
வாசியில் ராஜனுமேறப்—புலையன்
மருவிய தன்பின்ன லோடிட இன்னம்—சங்கர. (425)

மங்களமாக களத்திரம்—நூறு
மகராஜன் செய்திடப் புலையனோர் தாரம்
பொங்க மதிகமே செய்து—புத்திரர்
பூரணமாகப் பலிக்குதென்கோவே—சங்கர. (426)



அதனையு மல்லாம லின்னம்—ஒரு
அன்பாகக்கன்னிக் கிரண்டு புதல்வன்
மதிபோ லரைநாழிகைக்குள்—அதில்
மங்கையு மாணு முதித்திட வையா—சங்கர. (427)

ஒருவி யறிட்டங்களாக—மற்ற
வொருவனும் பூரணவாயிசு மாக
இருவரு மன்னுய்த் தோன்றில்—ஆயுள்
இருந்திடில்யோகம் வேறுகுதென்கோவே—சங்கர. (428)

சகலவிதியு மறிந்த—வெந்தன்
சற்குருவேயிது தானு மல்லாமல்
இகத்திலுதித்திடுஞ் சீவன்—அது
எழுவகைத் தோற்றத்தி லெண்பத்தி நான்கு—சங்கர. (429)

லெட்சஞ் சீவன்களுந் தானே—வொரு
லக்கினந்தன்னி லுதிக்குதென் கோவே
[illegible]ட்சமதாக வேயெண்ணி—இதைப்
பார்த்திட உன் மனஞ்சந்தேகம் தோன்றி—சங்கர. (430)

அச்சங்க ளென்மனந் தோன்றி—யுன்
னடைக்கல மாகவே வந்திடயானும்
சிட்சை மனதிற் சந்தேகந்—தன்னைத்
தீர்த்திட யுன்பதம் போற்றிகள் செய்தேன்—சங்கர. (431)

சந்தேகந் தோன்றியே நீயும்—எந்தன்
சரணம் கெதியென வந்திடும் பாலா
உந்தன் சந்தேகந் தெளியயானு
முறைக்க வொருமனதாக நீகேளாய்—சங்கர. (432)

எழுவகைத் தோற்றங்களறிய—பாரில்
இன்பமாய்க் கிரகஸ்புடங்கள் செய்து
வழுவாமல தனின் கணக்கைக்—கொண்டு
வழுத்திட வேணுஞ் ஜீவன் களுதிப்பே—சங்கர. (433)

சரணஞ் சரணமென்குருவே—யிந்தத்
தமியனல் புடங்க லறியப்போகாது
பரனே விரிவைக்குருக்கி—யிந்தப்
பாலனறியப் போதிப்பாய் மெய்குருவே—சங்கர. (434)

ஆயுட்பாகந் தனிற்றனே—ஸ்புடம்
அறிய விரிவாக்கூறினேன் பாலா
தோய்ந்தமேலியு மதனைப்—பார்க்கத்
தொல்லைகளென்று நீ சொல்லிய பாலா—சங்கர. (435)

பெருமையான ஸ்புடந்தன்னை—யானும்
பேசக் குருக்கு வழியாகத் தானே
அருமையாக வெண்ணி நீயும்—வெகு
அடக்கமதாகவே வருகுவாய் பாலா—சங்கர. (436)

வேறு

நொண்டிச்சிந்து நாலவன் திசைக்கு.

தனனா தனதனன—தனனா
தனன தனன தனதன தனனா. (தனனா)

நாலவன் திசைகேளு—அவன்
நாகரீகமுள்ள விதிப்படிசெய்ய
நாலேழில் ஒர்பத்தில்—நல்ல
லக்கினமேறி கேந்திரிக்க. (437)

நலமுள்ள சுகங்கொடுப்பன்—நாணைய
சென்னல்வயல் நிதிகளும் மாடமக்களும்
போகவிருத்தி யோகவிருத்தி வாகனமும்
ஆளடிமை சேர்க்கைகளும் மெத்தஉண்டு. (438)

கெடிமெத்தை வீடுமுண்டு துலங்கிய
வியாபாரஞ் செய்வதில் லாபமுண்டு
பூட்டகமாக வைத்த—சோசியத்தை
தியாகராஜன் யுரைத்துவிட்டேன் தனனா—தனதனனா. ()

* எட்டுக்குடையவன் திசை.

அட்டமாதி திசைகேளு—அவன்
சப்தமத்தில் கோணங்கள் கேந்திரிக்க—அவன்
செய்யுங்கொடுமைகளை நானும்
அடவுடனேசொல்லத் துடங்குகிறேன். (440)

நட்டபயிர்தீச்சுடுவன் நலமுள்ள—சுகங்காட்டி
மெத்தக்கெடுத்திடுவன் ராஜமுகங்கொண்டுபோவன்



அரசருல்—சிறைக்காவல் பூண்டு மீண்டுவருவன்
மனையோடு மாடகூடம்—நல்ல. (441)

பொக்கிஷங்களெல்லாம்—கொள்ளையிடுவன்
மாருலடிபடுவன்—நல்ல
மனையாளைவேறு படுத்திடுவன்
மூலையி லுரங்கவைப்பன் முழுதும். (442)

பட்டினியே போட்டு வருத்திடுவன்
கண்டோ ரேசிடவும் கடையினில்
கையேந்திக்கொருகாசுக் காத்திருப்பன்
பந்துஜனமெல்லவரும்—யிவனுக்கு. (443)

போக்கு வழிதேடவ ரிழித்துவிட்டு
கட்டுகொட்டுவெட்டுகளும்—கனத்த
சண்டையில்தாக்கி கொன்றிடுவன்
ஒருவன் களத்திரத்தை—நல்ல. (444)

உன்னிதபோகங்கள் செய்திடுவன்
சித்திரபதுமைபெற்ற—நல்ல
சிமாட்டிவாசலிலும் காத்திருப்பன்
இந்திரலீலை சுந்திரவைபோகம்—க்ஷணத்தினில் (445)

துன்பத்தைக்காட்டியே யின்பஞ்செய்வன்
போகர்சொன்ன விதிநொண்டியை
கிளிப்பிள்ளைசொல்லுப்போ லுரைத்துவிட்டேன்
அட்டமாதிசையும் கூறு—நானும்
அணுவுக்கு அணுவாக உரைத்துவிட்டேன் தனனா தனனா.

## யோகபாகம் திருப்புகழ்.

லெக்கனாதியும் சக்கராதியும் புக்க வைந்தினிற் றனயோகம்
வெப்பமா மதிவொப்பி யன்னையோதப் பதிதனிலுறில் யோகம்
சுக்கிரன் விஷமொக்கக் கூடியே புக்க காமத்தில் தனயோகம்
சுங்கனாருட னெங்கள் கீர்த்திமான் பொங்குபுண்ணிய மதிமேவ.

மிக்கவே மதிகற் குருவுடன் நிர்வாகனந் தனயோகம்
மேருடன் புதனாருடன் ரவி மேவிடப் பதி தனயோகம்
அக்கம் பக்கமீருரு காதமும் நிற்குமேயிவன் பொருள்தானே
அல்லலாக்கினை தொல்லுலகத்தில் நில்லுமே யிவன்பேர் தானே.

## வேறு.

வித்தையிலே குரு புத்தியிலே புகர்
சத்தமஞ் சேய்மதி யவர்தன்னை
மித்துருவாகவே மேருவு நோக்கிட ராஜயோகம். (449)

மேவப்புண்ணியன் பஞ்சமனுதனும்
கோணமேயதை கூடியேநோக்கிட
லாபன் மதியுங் தனத்தில்கூடிட இராஜயோகம். (450)

உத்த அன்னைத் துணைவருங் கூடியே
பத்தில்நிற்கப் பதிகோணமேவ
வொத்தகோளதாய் நோக்கிட மேறுவை யுறும்யோகம். (451)

ஒன்பதற் குடையோன் லாபமேறிட
தென்பு லாபனும் வந்து தனத்துற
அன்பதாய்க் குரு நோக்கிடமேருவை யருள்யோகம். (452)

பாடுமிப்பலன் கீர்த்தியும் வித்தையும்
தேடுமே வெகு பூமியுந் தர்மமும்
வாடும்பேர்க் குதவும் வெகு நீதியாய் வாழ்வானே. (453)

பஞ்சமத்தோன் திரிகோணமேறிட
யிஞ்சொல் ராஜனும் மேருவுங்கூடியே
அஞ்சு சப்தம ராசியிலேறிட் இராஜயோகம். (454)

வஞ்ச மற்றதோர் புண்ணிய நாதனும்
அஞ்சிட துணைவர் பதி புக்கிட
வஞ்சகக் குரு நோக்கவதனையே பெரும்யோகம். (455)

விஞ்சு மேருவிலே வுச்ச னேறிட
கொஞ்சியே யவரைக் குஜ னேக்கிட
செஞ்சொல் சுங்ன் பதி காரி கூடிட இராஜயோகம். (456)

வஞ்சியேயிப் பலனதைக்கேளு நீ
கொஞ்சியே தனம் கோடிகள் தேடியே
வஞ்சகத்துடன் கீர்த்தியும் விந்தையாய் வாழ்வானே. (457)

பண்ணிய நாதனிருந்திடு தாரையோன்
யெண்ணி நின்றிட அதற்குமே கர்மனும்
பொங்கிய மேருவை நோக்கிட வுச்சனுப் பெரும்யோகம்.



போற்றிடுஞ் சாமியும் நின்றிடும் தாரையோன்
யேந்தியே பூமருக் கேந்திர கோணமும்
புக்கிட ஆச்சி வுச்சங்களாகிடில் பெரும்யோகம். (459)

உன்னிய ஜீவனிருந்திடு தாரையோன்
மன்னியே நின்றிடு யப்பதி உச்சமாய்
உதித்திடு மதிகேந்திர மதுவாகிடி லுறில் யோகம். (460)

ஒன்பது ரெண்டுடையோனுமே கூடிட
தென்புறு கர்மனும் பொன்னவன் சேர்ந்திட
வோங்கிய ராஜ சமானம தாகவே யுறும்யோகம். (461)

இன்னி லாபாதியு முச்சம தாகிட
தன்னுடனே ரவி தானவன் கூடிட
யேகிடுமப் பதியோன் கேந்திரித்திட விதுயோகம். (462)

இச்சையாய் மேருவும் பாக்கிய மேறிட
உச்சிதமாய் பாக்கியன் லாபாதி ஏறிட
நோக்கிட இதுயோகம். (463)

கன்யமதாகவே கீர்த்தியும் வித்தையும்
தன்னியகோடி தனங்களும் கட்டிலு
மெத்தையின் மீதிவன் யோகியே. (464)

கருத்தாக கன்னியர் மோக சுகந்தமும் வீசிட
அன்னியர்க் கன்போடு வெகுநிதி தந்திடு
கர்த்தனைநோக்கி இருந்திடு சித்தனுப் வாழ்வானே. (465)

## வேறு மெட்டு.

உதைய னுதனும் லாபனுங் கூடியே
பதிய வாக்கிற் பதியறும் புக்கிட
அதிக வுச்சங்க ளாச்சியு மேறிட தனவானே. (466)

நிதியு மன்னையு மேழி லமர்ந்திட
உதய னுதனையு மவர்நோக்கிட
பதியபஞ்ச னுதனும் கேந்திரமாகிட நிதியோனே. (467)

சதியு லாபனும் புக்கிட பத்தினில்
குதியு முரோகமு நோக்கு மறித்திடில்
விதிகள் கொள்ளுமி லட்சுமி உத்தமர் விழிநோக்க. (468)

மதியில் மந்திரி யாய்வெகு வாகனம்
புதிய யுக்திகளேசெயும் யோகமும்
நிதியில் ஸ்தானமும் நற்குணம் புத்தியும் பொருளோனே. ()

மேரு கேந்திர கோணமேகிட
மேவ வத்துடன் பஞ்ச மாதியும்
நேருமி லாபனும் நின்றுநோக்கிடில் நிதியோனே. (470)

நேத்திர நாதனும் பாக்கிய நாதனும்
நேச லாப முடனின் கேந்திரம்
போற்றுங் கோணமு மதனிற் பொன்னவன் புகழ்யோகம்.(471)

கூறு பாக்கிய நின்ற தாரையோன்
குரு வுடன்கூடி வாக்கினில் நின்றிடக்
கோரும் பஞ்சம வாக்கு பொன்பதி கொற்றயோகம். (472)

குடும்பம் அன்னையும் புண்ணியம் மேறிடக்
கொற்ற கர்மனும் வாக்கில் வந்திட
திடமதாய் உச்சனுக மேருவும் திகழ்யோகம். (473)

தேரு மிரண்டவ னுச்ச நாகியே
சேரு மப்பதி பாக்கிய மேரிடத்
திரமேருவுந் தசம தேகிட திகழ்யோகம். (474)

செப்பு மஞ்சவன் அஞ்சு லமர்ந்திட
திகழு மிலாபனும் பாக்கிய மேரிட
வொப்புமிலேயென்றே சொலப்பூமியி லுறும்யோகம். (475)

யிரு மஞ்சவன் புண்ணிய மேரிட
யிரண்டு பாக்கியன் வாக்கில் வந்திட
யேறும் வாகனம் நிதிகளுக்கேயிவன் இறையோனே. (476)

இன்னிலந் தன்னிலெவரு மெச்சவே,
இரண்டு ஆயிரம்—பொன்கள் தேடியே
தன்னுடன் பிறந் தாருக்குதவியும் தனவானே. (477)

துணைவர் லாபாதி யிருவரு மேழாக
துஞ்சும் யேழாகி யிராரு மேவிட
துங்கன் விறையாதி பொங்கமுடன் கூடி
துஞ்சிடவும் வெகு புண்ய தனவானே. (478)



உச்ச லக்கணதியாக யிச்சை பத்தோ நாலதாக
வோங்கும் நாலொன் பத்தாக உறும்யோகம். (479)

பச்ச கர்ம மேருனுத இச்சையாத கர்மமேற
பாங்கு மேறிருந்த நாதன் பதிபோக. (480)

பண்புலாபம் பொன்னிருக்க வின்பலாப மதியுமாக
பாருலகை யாளுயோக பதியோனே. (481)

மெச்சுலாப வுச்சமாகி மேவரெண்டி லதனேயே
மேவினுக்க கர்மனுதன் மிகும்யோகம். (482)

மெத்த பாக்கியனுதி சுங்கன் உத்த கர்மன் மூவர்கூடி
மேவபாக்ய பொன்விழிக்க வெகுயோகம். (483)

கச்சிதத்துட னிருந்து உச்சிதப்பொன்னுடை பூண்டு
கர்த்தனே நினைத்துருகி வாழ்வானே (484)

கற்றவர் குடைகளீய்ந்து மெத்தஉப்பரிக்கைகட்டி
கன்னியர்க்கு மோகனுக வாழ்வானே. (485)

தருமலாபனும் குடும்ப முறவே யவர்களாட்சியிற்
தானிதன்னை யாளுயோக தனவானே. (486)

சார மேரு தச மீதில்யேற கர்மன் மேறு தன்னில்சாமி
தன்னைப் பொன் விழிக்கத் தனவானே. (487)

குருவும் மதியுந் தனத்தினில் தருமநின்று நோக்கிடில்
கொற்றவர்க்கு சமதியாக வாழ்வானே. (488)

குஜனு மேரும் கூடியே கோணகேந்திர மேறிட
குடும்பகர்மன் பாக்கியமேற குணயோகம். (489)

வேறு.

என் மேரு லாபம்வுறவே லாபாதி குணமேறிலேற
குடும்போனும் ஈரஞ்சிலேற தானந்த னுதன்
வோ ரெண்டில்மேவ தனவானே. (490)

சனி மதியு மிராசன் தனமதனிலேக
தனமாதிலாபம் கனமாதியுதிக்க
ததிஜீவனுகி தனேமேலோர் நோக்க
நிதிகோடி தேடு மிராஜயோகம். (491)

பதி யோனு மாட்சி பகர் வாக்கில் புந்தி
பளிங்கோனும் விரையப் பதிமேவ

சுதிமேளதாளந் துரக முதற்சூழ
தொல்லுலகையாளு மிராஜயோகம். (492)
நிதி தனமுங்கூடி நிற்பது நான்காகில்
நேர்நின்று நோக்கப் பஞ்சமாதி
குதிகொண்டு லட்சுமிகோடிநிதிதேடி
குடும்போக்கையோடும் வாழ்வோனே. (493)

வேறுமெட்டு.

புண்ணிய கேந்திரத்தில் குருபுக்கிட
ஆச்சி யுச்சம்புகர் லாப கேந்திரம்
யேகப் பஞ்சமன் போக நோக்க புகழ்தருயோகம். (494)
எண்ணிய கர்மாதி இருந்த தாரையோன்
நட்பதாய் தசமேவ யிவ்வுல யோகனாகிப்
வெகு போகனாகிப் புகழ்தருயோகம். (495)
பத்தவன் பாக்கியமேற அந்தப் பதியோன் கர்மம்வர
அதைப்பார்க்க பொன்னவன் யேற்கையோ டிவன்
சேர்க்கை தாரமுடன் சாஸ்திரலோலன். (496)
சித்தமு மேரு மதாய்கூடிச்சேரப் பத்தில்
அந்ததீரன் பாக்கியமேறவே பரதாரனாய்
பணக்கார னென்றோதும். (497)
வித்தகன் கர்மம்வர அந்தவீரன் ரெண்டில்வர
குணமேறு லாபத்திலேறவே வெகு
பாரையாளும் பதிகெஜலோலன். (498)
புகர் பொன் னெட்டாக வேழில் புதன் மதியேக
கர்மன் பூரணமதியின் வீடதாகிட
மாடமாளிகை யோகமென்றோதும். (499)
சுகன் தர்மன் லாபன் சசிசூழ லாபமதில்
மேரு திஞ்சு நோக்கவும் மிஞ்சிடுந்தனம்
வஞ்சியர் மோகனாகியேவாழ்வன். (500)
உச்சனாய் லாபாதி யவருடன் புகர்கூடி கண்டம்
உதிக்கவே வெகுநீதிக்கிறையவன்
சதிக்கி மோசன தானந்தலோலன். (501)



கச்சிதமாய் மேறுநின்ற காவலன் தசமாய்
அதைக் கர்மன் நோக்கிட தர்மனாயிவன்
வர்மம்நீங்கியே வாழ்பரியோகம். (502)
மதியு மேழாக மன்னவன் மேருவேக
லாப மறையவன்புக பிருகும் பாக்கியம்
வுறவேசிவிகை யோகமென்றோதும். (503)
நிதி சசி மறையோன் மூவர்நிற்கவும் பாக்கியத்தில்
குரு நேரில்நோக்கிடப் பாரிலே
வெகுநாரி மோகன் வாகன சீலன். (504)
கதிர் புதன்கூடி தர்மம் கதிக்க வப்பதியோன்
தனம்கார்க்க நாலவன் நோக்கிட
வெகுபாக்கியனாகிப் பதிநரவாகனன். (505)
சுகன் தர்மன் நாலில்நிற்க சுங்கன் கண்ணோக்கிடவே
இவன் துரவாகனம் சுரதபூசிதன் பரதனாட்டிய
சீலனாகியே சுகந்த பரிமளவாசனாகுமே. (506)
பத்தவன் லாபன்கூடி வில்லிற் பதியப் பொன்
மேரும் பாக்கியமேக வப் பதிபோகநோக்கவும்
வாகனம் நாளுமங்களலோலன். (507)
உத்த லாபாதியுமே நாலே ஒங்கிநோக்கிடவே
நாலோன் ஒன்பதோனுமே இன்பவாகனம்
அன்பதாயேக ஆந்தோளியேர்வன். (508)
அன்னை மதிச் சுங்கன் அனலனுடன் கூடி
நாலே யருமையாய் சுகன் பெருமையாய்நோக்கவுற
மிவர்க்கு நல்வாகனயோகன். (509)
மன்னியச் சேய் மதியும் சுங்கன் வாகனந்தன்னிலேற
மேறு மன்னனும் நாலோன் வுன்னி மேருவில்
திண்ணமா யேறச் சேர்பரியோகம். (510)
பண்ணூங் குரு சேயும் நாலில் பதிய வப்பதியோன்
அதைப் பரிந்துநோக்கிட நிறைந்திடும் தனம்
செறிந்துமே பிதுர் செல்வனென்றோதும். (511)
புண்ணியன் கர்மாதிகூடி சுகத்திலேறிட
யிகத்தில்வாகன மேறிடும்லோலன்
வேணுதன யோகனென்றேற்குமே. (512)

பாம்பு மதி கூடி லாபம் பதிபச் சுங்கன் வக்ரன் ரவி
    பஞ்ச மேறிட கொஞ்சிமேருவும்
மிஞ்சிநோக்கிட மேனையின்யோகம். (513)

வீம்பன் பொன் மேருவும் பாம்பும் மிரண்டில்
    புக்கிடவே பாக்கியத்துடன் மதிக்கு நாலினில்உதிக்க
சுங்கனுரு கெஜயோகம். (514)

வேறு.

அரவு மதியு மரசரும் பிருகு நால்வர் நின்றிடும்
    அதிபர் கேந்திர மேறிட யேழோனும்
அன்புகோண மேறிடத் தென்பு லாபன்கூடிட
    அதிகயோகசாலியென் றறைவீரே. (515)

யெருது மேரு வாகிட கரியன் முதலை யேகிட
    யேற்க கோதைமீதில் மாலு மிதுயோகம்
இன்னிலத்தில் யோகனாக அன்னியர்க் குதவியாக
    யேரு வாகனங்களாக வாழ்வானே. (516)

புத்தியோன் சொட்சேத்திரம் அதைப்புகரும்
    நோக்கிடவே புண்யம்பொருந்த வாட்சியிலிருந்து
பொன்னவன் உரைந்து நோக்க உலகாளும்யோகம்
    உத்தமனென்றே யிவனையுறையுமே. (517)

நத்திக் குரு மேரு நாலோன் நலமதி சுக்கிரனும்
    உயிர் நாடவேகெசம் ஆடையும் பரிவாடையும்
நரவாகனமேர்வன் வெற்றிமுடி யரசருடன்
    மிகுந்த தியானி யிவன் வேசையரிடம்
பாசமாய்க்கூடி அதிகநிதிதேடுமன்பனே. (518)

மறியி லறியுமேவ வதனைக் கரியுடனேக்க
    மதியும் விரையப்பதிதானே விரையன்
தனமதற்குவுரியன்ரோகமீதேறமேவ
    விதியுனேக்க யிவர்தானே
மிகவும்வருமையாகச் சுகமுந்தனைவெறுத்தும்
    புகழுமிவருக்கில்லாப் புண்ணியன். (519)

பகருமன்னையு மிராசியோன் கூடியே
    நிகருமொன்பதா மிராசியில் நின்றிட



பார்க்கவிழியினால் குருவும்
    யோக்ய தனவாகனமும் சேர்க்கைதன்
பூஜிதமும் வாக்கினிற் சிலாக்யன்
    பஞ்சண மெத்தையி னுளு மிருப்பவன்
கொஞ்சியே பிறதாரம் சுகிப்பவன். (520)

வேறு.

மதி புகரு மிராசன் தனமதனி லேக அதி
    பாக்கியாதி விழிநோக்க முறவே அதியோகசாலி
நிதிகோடிதேடி அவனிதனில்வாழும் ராஜயோகம். (521)

அம்பரத் ததிகாரியுங்கூடியே தென்புறத் துணைவர்
    பதி புக்கிட ஆனதசம் மேவவிஷம் ஞானக்கலை க்யானிதம்
மோனசிவ பூசைகளும் வானுலவு சிலாக்யன்
    அற்புத வித்தைதபடித்திடும் யோகனும்
விற்பன தர்மஞ்செய்திடும் சீமானும் (522)

சந்திரப் பதியோன் குருசுங்கனும் பின் திரிகோண
    மேவிடவே பின்னும்சார சனிவுச்ச தசம்
பாருலகில் மெச்சதனம் தாரமிகக் கொள்வனிதம்
    வாருலவுவாசன் சனசற்பன மெத்தை
படுக்கையிராது விற்பனற் கொருகாசுயீயாது. (523)

கொண்ட அன்னைப் பதிபுண்ய மேறிட
    விண்ட பாக்கியத்தோன் வாகனத்துற
மேறுஉற வைந்துதனில் யாருலகு மெச்சவெகு
    நாறுமலர்கொண்ட புஜன் வாருலவுவாசன்
விக்ரமனாகிய உக்ரமசிலனும்
    அக்ரமமற்றிடு மதிகர்மயோகனே. (524)

உண்ணிய லாப தனம்கூடி யுச்சப் பதிமேவு
    உறுந் தாரையோன் தர்மமேற்பொன்னவன்
சார நோக்கத் தனந்தேடும்யோகம்
    இன்னில் உறமுறைக்குள்ளிவன்
யேற்கைபெற்றவனும் வெகுதீரனும் தனகாரண
    சோசியம் சாரனுபிவன் தன்னைக்கொண்டாடி
தாணி தனில் வாழும்வெகு வாச்சாலனும் (525)

மிருந்த பொன் வாக்கில் நாலில் மேதை
புகர் கூடில் யேழில் மேவச் சேய் மதி
காவலனகி பாவலர்க்குதவும் வெகுயோகன்
அகத்திலே இவர்கள் வெகு ஆடை ஆபரணம்பூண்டு
அன்பதாகவே வெகு தின் பங்களுடன்
தென்புடன் சம்பிரமதாக அரசர்நிகராக
யிவன் வாழ்வானே. (526)

தச்சகன் கர்மாதிகூடி சப்தம சோணமேவி
ரவி தாங்க உச்சத்தில் வோங்கியே
நிதி பாங்கதாய் வாழும் பாக்கியசாலி
மெச்சியே முன்னிருந்தோற்கெல்லாம்
மேதினியிற்றனவானய் மிகுவீரனும்
பரதாரவாகன காரனுமிவன் கன்னியர்
மோகன வித்தையினில் வல்லவனுவானே. (527)

ஆய்பு பொன் னட்சியாகவாகி லடை
மேரு தனம் கர்மன் அனலைநோக்கிட
தினமுசாஸ்திர பணமும் தேடிடும் பாக்யசாலி
சாம்பிரயோக மென சாற்றினர் முன்னோர்கள்
இவன் தனமும் தேடியே குணமுவாஞ்சையும்
இனமுவாகனமேறிடும் லோலன்
இதமிவனுக் கென்னுளுமேற்குமே. (528)

## அவயோகம் அறிய.

பத்தவன் விரையாதி மெத்தவே கூடியெட்டில்
பார்த்திட விதியின்னும் சசி யோடே
பாங்குடன் சனிரோகம் யேங்கியேகூட
யிவன் பாவியுமாய் வெகுஅவயோகி. (529)

சப்தமத்தோன் காரி பதி யேகிட
சாரும்சப்தமம் பாக்கிய நட்டமந்தானே
தாவ வன்னங்கிடையாமலே யிவன்
தாரந்தன்னைப் பிறருக்கு யிய்ந்துமே
தனமு மெய்தினுலிவன் வாங்கிடுஞ் சண்டாளன். (530)

பிறகு கர்மன்விரையன் வுறவேபாக்கியமீதில்
பெருகும் பதி விரைய மேகவரவே யதிற் றனமும்



பெருக்குபாக்கியம் போயி வறுமையுடனிவனும் வாழ்வானே
வஞ்சனிவனும்வெகு நெஞ்சன் ஒருவருக்கும்
அஞ்சானிவனு மவயோகனே. (531)

சொரூபங் காரியும்கூடி உறவே ஒருவர்நீசம்
சங்கமி தேறியதைநோக்க அருகுமிவன் குலமுஞ்
சருகும் பாக்கியமெலாம் அதிக விதகமிவனுகியே
அல்லல்நிதமும்பட்டு தொல்லைக்குள்ளாகியிவன்
எல்லைவிட்டேகு மவயோகனே. (532)

மறையோ னிருந்த பதி விரையோனுடன் மறுகி
பெறலாப மீதிலேக பேதை யேசவும்
வாதையாகவும் சாதமேக்க தரித்திரயோகி. (533)

பதிமே றிருபுரமும் மதியே றிருபுரமும்
சதிகோள்கள் நிற்கவதில் தகரிற் காரியும் சுகத்தில்
ரோகமும் இகத்தில் யேரவும் தரித்திரனுமே. (534)

பகலோனுடன் றனமும் சுகனேடுற விறையன்
மகமேருத விதியில் பார்த்த ரோகமும்சோற்றி
லேக்கமும் ஆத்மதுரோகி வெகுஅவயோகி. (535)

சந்திரன் ரவியோடேகியே நாலவன் பிந்திய
ரோகத்தேரிட நாலினிற் சார்ந்திடப் பாபர்கள்
தனமினவருகிலா அவயோகன். (536)

மேருடன் விதிகூடிச் சாரரோகத்தில்மீது
மேவத்தனுகிரோகம் அவயோகி
சுத்தமாய்ப் பொருளில்லா வித்தை
யிருந்தும்பலன் சுகமுமதனில்லா மிகுபாவி
சூரன் தைரியவான் வீரன் அன்னப்பிரியன்
சோம்பன் விதேசவாசன் அவயோனே. (537)

நிதியோனுட விரையம் பதியோனுறத் தருமம்
அதி பாபர்நோக்கமுற அஞ்சோன் ரோகமும்
கொஞ்சியேரிடு மிஞ்சிடுந் தரித்திரயோகன்.
நிறைவாகவேயிவர்கள் குறைவாகவேயிருந்தும்
புறைகோடிபேசும் வெகு பாக்கியத்தாலிவன்
யோக்கிய யினமும்பாக்கியம் பாராதப்பவுசோனே. (538)

முந்திய விதி மதி யேகி டதற்குமே சிந்தையதாய்
விதி மேறவி லேகிட்மோதிடும் பதி
ஆறெட்டுடன் விதியன் தியோகி
வோங்கிய வினத்தொழி லிவன்செய்து
மேதாங்களுமாய் வெகுதரித்திரனாகியே
உன்னிதமனைவி யேகிட வாழ்ந்திடுவானே. (539)

மதி தேய்ந்திருக்க வதில் நிதியோனிருக்கவது
விதியாயிருக்க வதிலேக ரோகமும் சாக
யெண்ணமும் தாகனாய்த் தரித்திரயோகி (540)

சாரவே பாபர்கள் நாலினிலே பின்னும்
மேரு விருந்தி டதற்குமே பத்தினிற்
சார்ந்திடபாக்கிய நீசமு மாகிடில் அவயோகன் (541)

விந்தையதாய் மதி தேய்ந்திட மேருவும்
சுந்திரமாக விருந்திடு மப்பதிக்கேழவன்
காரிக் கது நாலாகிடில் அவயோகி (542)

எட்டவன் கர்மத்தேறிடக் குருபகைமுட்டிய
தேய்பிறை ஆறெட்டோடு வியம்
இருந்திட யிவன் மிகுதரித்திரனாகியே , அவயோகி (543)

செந்திய சனி மதிக் கெட்டோன் கூடியே
வந்திட லாபத்தைக் குஜனுநோக்கிடத்
திகழும் லாபன்விரையம்புகுந்திடத் தியோகி (544)

உத்த கர்மன் புககுருடனே குஜன்
நத்தியேழிடத்தே யவரேகிட
ஒங்கும் சைம்பெண் சாவகாசமே
செய்திடும் அவயோகி (545)

நத்திவிதி மதியும் ஒத்துகூட விரையாதி
ரவியோடே நாலவனுடன்கூட
நன்னுங்குஜன் சாமியும் வுன்னிதமுடன் கூட
நரசுகமறியாத அவயோகி (546)

வித்தை தேய் மதிகூடி வுற்றிட விரையத்தில்
மேவ நோக்கவும் ரோகம் அவயோகம் (547)



ஒங்கு சப்தமன் அட்டமன் கூடிட
விஞ்சு கண்டத்தைப் பாபர்கள் நோக்கிட
உன்னியே குடிப்போனும் விரையத்தில் வந்திட
தானகத்திடும் பெருவாயனைக்கண்டிவன்
நத்தியே யதின்மேல்மோகமாகியே
காமமாயிவன் போகமேசெய்யும் அவயோகனே (548)

கன்னிசப்தமராசியுமாகிடமன்னி மன்னியட்டமனேயதில்வந்திட
காரியே யதை நோக்கிடவேயிவன்
காமியாகி வித்தையும் பொருளும்
இவனுக்கெய்திடும் சப்தமம் பிரர்போகமே
செய்குவன் மேவவே வதற்குள் ளிவனுகுவன்
அதனாலே விரயமாகு மிவன் பொருள் தானுமே
குறைவுவார்த்தைகளே சொல்வர்மானிடர்
வீரம்யோகமிருந்து மிவனுமே அவயோகனே. (549)

மறியி லறியுமேவ வதனை கரியும்நோக்க மதியும்
விரையபதிதானே விரையன் தனமதற்கு
வுரியன் ரோகமீதேற மேவ விதியும்நோக்க யிவர்தானே
மிகவும் வருமையாகிச் சுகமுந்தனை வெறுத்து
புகழுமிவருக்கில்லாப் புண்ணியன். (550)

குருவு மதி நிதியும் திரியிலமர்ந்திடவே
கொடுமைக்கிரகம் நோக்கதுணைவனும்வரவே [யோகன்
விரைய மீதிலேற அதிற்மேருவும் குறைவு தனமிவனுமவ
குணமும் தனமுமிலான் யின்னுமிகவெறுக்கும்
ரொணமு மிகப்படைக்கும் அவயோகன். (551)

## பாலாரிட்டம் தாது மெட்டு.

எட்டில் மூன்றிற் பாவரோக மதிகாரி
தொட் டரவுக் கேழில்வரச் சொல் ரவிக்கு* இட்டமுடன்
நாலில் சுங்கன் பொன்னும் நண்ணிடவே
பாலகனும் கோலிமடிவானெனவேகூறுவீர் எட்டவர்க்கு
ஆறிற் கரிமேவ அதற்கு நால் சேயேறக்
கோறிவிதியுங் குன்றிடவே பாரில்
மைந்தருதிக்க வவர்மாண்டிடுவ ரோருண்டிற்
சிந்தைதெளிந்தவர்க்கு செப்புவீர் பாம்புக்கு (552)

நாலிற் கரிமேவி நண்ணி காரிக்குப் பத்தில்
சால வெய்யோன் புந்தி சுங்கன் ருனேக கோலி
மதி விதியுங் கேந்திரிக்க மண்ணி லீராண்டுக்குள்
விதியதனுல மாள்வனென விள்ளுவீர் இரவிக்கு (553)

அட்டமனும் மேழில் வர ஆன காரிக் கெட்டோன்
இடடமுடன் மதி கிரியி லேகிடவே யெட்டவனும்
அட்டம னேழில் வரவே யதைச் சுபர்கள் நோக்கறவே
சட்டமுடனோராண்டிற்ருன்மடிவான் நாலில் (554)

மந்த னிரண்டிற் பாம்பு மருவ வியமே ரவியும்
புந்தி சேயும் பத்து பொன் னுலில் விந்தையதாய்
மேவிடவே யிம்மைந்தன் மிக்க நாலாண்டிற்குள்
ஒவியமாக மடிவனுண்மையே யெட்டவனும் (555)

யீனமாக வேழோனிழிவுகுலமாய் மேறு
தானுமே யஸ்தமிக்க சனி மதியும்
கேந்திரததிலேற கிட்டிச்செனித்த மைந்தன்
மாந்தமதால் ஓராண்டில் மாண்டிடுவன் மூன்றோன் (556)

யெட்டவனுங் கூடியேகத் தச மதனில்
முட்ட வேழோன் பகையாய் முழுநோக்க நட்டமதாய்
காரி மதி கூடக்காளே ஈராருக்குள்
சாரிபோவா னேமன் றன்பதிக்கே யாறவனுஞ் (557)

சந்திரற்கு மூன்ருேனென் ருன்மூவர்கூடிடவே
சுந்திரக்கோன் னேக்கறவேசொல்லக்கேள் மைந்தன்
மாண்டிடுவ னுலாண்டில் மன்னியிதை நினைவாய்
ஆண்டிதனை நோக்கி யறைகுவீர் சந்திரர்க்கு (558)

பத்து நாளி லேழில் பதியக் காரி சேயுஞ்
சித்த மேருங் கூடிச்சேர்விரையம் நத்தி
யேம னீராண்டுக்குள் ளிழுத்துப் போவா னிசமாய்த்
தாமதனை நத்தியே தான்கூறு மூன்றோன் (559)

எட்டவனு மாறே ஏக மதி நான்கிற்
பட்டுமிவன் போவனெனப் பாடுவீர் நாலோன் (560)

சந்திரனுக் சாறேன்தான்கூடத் தீவிதியும்
பந்தமுட னேக்க விப்பாலகனும் விந்தை (561)



மாளு மாளு மெய்யவே மண்ணி லிதையறிந்து
கோளின் பலன் கண்டு கூறுவீர் அட்டமனும் (562)

நாலில் மதி விதியும் நண்ணி காரிக்கேழில்
சால ரவியேக மைந்தன்ருனரிட்டம் யேழில் (563)

கரி யேக யேழோனுக் கட்டமனுங்கூட வதைத்
தரு சுபர்கள் நோக்கரவே யட்டமத்திற் றிரமுடனே
மதி பாவ ரேக மண்ணி லேந்தாண்டுக்குள்
விதி முடிந்து யேமபுரமேகுவன் கிரிவிதியும் (564)

மதிக் கெட்டோன்கர்மன் பன்னிக் கண்டதில் வர
விதமுட னிரண்டோன் வுழிநோக்க மதி சப்தங்
கரிமேவ வைந்தாண்டில் காளேயருந் தானரிட்டம்
திரமுடனே கோளறிந்து செப்புவீர் விதிகரியும் (565)

கூடி வியமேகக் குன்னியொருவர் நீசம்
வாடிச் சவரிக்கெட்டில் மாபாவி கூட (566)

மாண்டிடுவன் மெய்யாய் மண்ணி லிவ னேந்து
ஆண்டுக்குள்ளாக அறைகுவீர் ஈண்டுலகில் (567)

விதிகருமம மேற வேழோனுடன் கருமன்
மதி விதியு மூவர்மண்ணுபயம் அதிசுபர்கள்
நோக்கமற மைந்தனுண்ணிமையா வேழாண்டில்
ருக்கிக் காலன்பதில் தருகுவன் இரண்டோன் (568)

ரோக மேருங்கூடி னுண்ணும் விதியேக
தாச மதிக் கெட்டோன் சப்த மத்தில் யேக
சுபர் விழிகள் நோக்கறவே சொல்லு நவமாண்டில்
பவமருந்தி யேமபுரம் பார்ப்பானேன் ஒது (569)

சவரி ரெண்டோ னெட்டில் அட்டமனு மாறில்வரம்
பவம்போக்கு முத்தியினிற் பாய்பேற அவக்கோள்கள்
நோக்கிடவே பத்தாண்டில் நண்ணிமையா யேமபுரம்
தாக்கிடுவா னென்றிதனைச் சாற்றுவீர் இவ்விதமாய் (570)

மைந்த ருதிக்க மருவும் பாலரிட்டம் சிந்தைவைத்து
மேயிதனைச் செப்புவீர் விந்தையாய்
சொல்லாத ஜாதகர்க்கு சொல்வினயத்தா லறிந்து
யெல்லாமுரைப்பா யினி (571)

## ஆயிசுபாவம் கப்பல் பாட்டு.

அட்டமத்தில் ராகுயேக வேழோன் அட்டமனும் லாபம் வரதுட்டர் விழியால்நோக்க விதிற் ரேன்றுமந்த பாலகர்க்கு (முடுக்கு) சொல்லுவாய் ராகுதிசை சுயபுத்திதன்னில் வெல்லுமாய் வீட்டு நாதன்றிசையில் கொல்லுமே மத்திபவாயிசு தன்னில் குவலயத்தோரறியக் கூறுவாய் நீயே ஏலேலோ. (572)

சந்திரவிதி யட்டமனுங் கருமன்ருன் கூடிக் கண்டம்வரவிந்தை தனத் தானேக்க விதில்மேவுமந்த ஜாதகர்க்கு (முடுக்கு) யெண்ணியே ரெண்டவன் திசைதனிற்ருனே உன்னியேமுத்திதானத்தோன்புசிப்பில் மண்ணினில் மத்திபவாயிசு தன்னில் மகிழ்ந்துமேமாரகங்கூறுவீர் மெய்யாய் ஏலேலோ. (573)

அட்டமனு கரிபகையாய் யிருவர் அருள்விழியால் நோக்கமுறத் துட்டர்களும் விதியேக மேருஞ்சொல் வியத்தோன் சேந்திரிக்கத் (முடுக்கு) தஞ்சிடு மிராகு விரண்டினில்வாழ வஞ்சமாகவேமத்திம வயதிற்கொஞ்சியே ராகு திசை காரிபுசிப்பில் கொண்டுமேயமனும் போவேனெக்கூருய் ஏலேலோ. (574)

மூன்றில்வியத்தோன்வரவே யெட்டோன்முன்ன வாறி லவ்வீரன் தானுங்கிரி திரிமூவர்மதிதன விதிபிலேறிடவே (முடுக்கு) தருவிரை யாதிபன் திசைதனிற்ருனே உறுமட்டமாதிபவ புத்தியிலிவர்க்கே மருவிடுமாரகம் மத்திமவயதில் விண்ணினி லேகுவர் சொல்லுவீர் மெய்யாய் ஏலேலோ. (575)

சந்திர விதி யட்டமனுங் கரி தான் மூவர்வியமேக சுந்திரர்கள் நோக்கரவே வியத்தோன் தோன்றிடவே யாயமதிற் (முடுக்கு) சொல்லும் வியத்தோனதிபன்றிசையில் வெல்லுமவர்பதி யேகி னவர்புத்தியில் கொல்லுமே மத்திமவாயிசு தன்னிற் குவலயத்தோரறியக்கூறுவீர் மெய்யாய் ஏலேலோ. (576)

ஏழோனுரோ னிருவர்கூடி நாலில் யேக விதி கரிக்கி ரெண்டில் மாலோனும்நோக்கறவே இதனில் மருவி யுதித்தோர்களெல்லாம் (முடுக்கு) மன்னியே ஏழோன்றிசை தனிற்ருனே வுன்னியே ரோகன் புசிப்பினிலிவரும் குன்னியேமத்திம வாயிசுதன்னில் கொண்டுமே காலனும் போவனெக்கூருய் ஏலேலோ. (577)

எட்டோன் கண்டமீதிலேகக் கரியும் யேக அதற்கெட்டதனிற் சட்டமுடன் கரிக்கேழில் றபகன்ருனேகவிஷந்தரியேக (முடுக்கு) தங்கிடு மூன்றி லவ்வீரன் திசையில் மங்கிடும் எட்டோன் புசிப்பினி லிவனும் பங்கமாமத்திமவாயிசுதன்னிற் பரமனுடபாதமதிற் சேர்குவன்மெய்யாய் ஏலேலோ. (578)



பதிக் கெட்டோன் விதி கருமன் மூவர் மன்னிடவே ஆயமதில் லாபன் ஏகிடவே மத்திமத்தில் (முடுக்கு) யெண்ணியே லாபனுதித் தோன்றிசையில் மண்ணில் விதியோனுதித்தோன் புசிப்பில் பின்னங்களாகியே காலன்பதிக்கே யேகிடுவனென்றுமே விள்ளுவீர் மெய்யாய் ஏலேலோ. (579)

ஆறிரண்டோன் கரியு மெட்டில் ஏக வவ்விரன்ரோகமேகப் பாரோக ளறியவிஷம் பத்திற் பதியவதை தாநோக்க (முடுக்கு) பாங்கதாய் ரோகன்திசைதனிற்ருனே யேங்கியேரோகனவ் வீட்டிலிருந்தோன் ஓங்கிடும் புத்தியில் மத்திபந்தன்னில் உண்மையாம் காலன் பதிக்குமேபோவன் ஏலேலோ. (580)

சுகபாக்யாதி ரெண்டோன் இவர்கள் சொல்பகையாற்ருன் கூடியேககண்டமாறவனு மிலாப மிலாபமேக விஷமதிவிதியி (முடுக்கு) யெண்ணியே யாரேன்றிசைதனிற்ருனே யுண்ணியே சந்திரீவட்ட மண்புசிப்பில் விண்ணினில் மத்திம வாயிசுதன்னிற் விள்ளுவீர் மாரகஞ்சொல்லுவீர் மெய்யாய் ஏலேலோ. (581)

சத்துரு எட்டிலேக வெட்டோன் யேழோ ஞரேன்கூடிக் கண்டம்வர நத்திக் கரிக் கேழில் குஜன் நாட நன்மையுள்ளோர் நோக்கறவே (முடுக்கு) நாடியேயாரேன் றிசைதனிற்ருனே தேடிடுமேழோன் புசிப்பினி லிவனும் வாடியே மத்திம வாயிசு தன்னிற் வையகத்தோரறியமாளுவன் மெய்யாய் ஏலேலோ. ()

எட்டிற் கரி யேகிடவே கரிக்கு எட்டிற் குருயேகிடவே அட்டமனுக்கேழில் விஷந் தானும் அமரவதை திநோக்க (முடுக்கு) அந்தமா யக்காரிதிசைதனிற்ருனே விந்தையாயேழோன் புசிப்பினிலிவனும் சுந்திரமாகவே மத்திமவயதில் சொல்லுவீர் மெய்யாய் ஏலேலோ. (583)

தானத்திரை மெலிவாகப் பாவர்தன்விழியால் நோக்க வட்டமானத்திரைஜெயமாக சுபர் மருவவிழிநோக்கறவே (முடுக்கு) மன்னிடு மேரு மவருடன் சேர்ந்தோன் தென்னவன்றிசை தனில் லட்டமன் புசிப்பில் குன்னியேமாரக மாகுவனென்றே குவலயந்தன்னிலே கூறுவீர் மெய்யாய் ஏலேலோ. (584)

இராமனுக்கு நாலில் நல்லோர் யேழில் நாட கரியவ்விரன் பூமர்விழி நோக்குறவே விதியும்புக்கிடவே கேந்திரத்திற் (முடுக்கு) போகுவன் காரிபதிரோகன் திசையில் யேகுவன் சந்திர விதியின் புசிப்பில் சாகுவன் சாகுவன் மெய்யாகத்தானே தப்பாது கூறிடில் பொய்யாதுதானே ஏலேலோ. (585)

ஜென்மாதிக் கட்டமனும் ஆறிற்சேர்வது உபயமாக கன் மாதிரிகரியுங்கூடி அதைக் கண்டிடவே மத்தி மத்திற் (முடுக்கு) கச்சிதமாய் யட்டமங் திசைதன்னில் உச்சிதமாக கிரிபுத்தி தன் னில் பட்சமா யெமனுங் கொடுபோவானென்றே பாருளோரறி யவே கூறுவீர்மெய்யாய் ஏலேலோ. (586)

கிரியில் குசன் விதியில் மதி பேறுகேடுபெற்று தானி ழைக்க கரியவரைநோக்கமுற விதியுங்கட்டிப்பெலமாயிருக்க (முடுக்கு) கண்டிடுஞ் சனி யவ்வீட்டுடையோன்றிசையிற் தெண் டிரை யப்புலிதன் விதி புசிப்பில் முண்டகன்காலனும் மத்திபங் தன்னில் மூர்க்கமாய்கொடு பேர்வானென்றுமே கூறுய் ஏலேலோ. (587)

விதி குசனு மாறு பனிரெண்டிலேக யெட்டி வெட்டவன் சதியாக ரோக நோக்க மேருதானிழைக்க மத்திமத்தில் (முடுக்கு) தந்திர வாரவன் திசைதனிற்றனே சுந்தரமங்கள புத்தியிலிவ னும் விந்தையாய்த் தொடர்கை யாயுந்தன்னுல் வெட்டுமே பட்டிவன் மாள்வரெனக்கூறுய் ஏலேலோ. (588)

எட்டவனும் ராகும்கூடி யாறில் யேகவாறே னுட்சி யுச் சம் தொட்டிடவே மேருபகையாகசொல்லுமிவன் மத்திபத்தில் (முடுக்கு) தொட்டிடும்பாம்பு அவ்வீட்டோன்திசையில் அட்ட மன் புத்தியிற் கள்ளனுற்றனே சட்டமாய்மாரகம் தானுமே கண்டு தவறுமற்கூறிடீர் பொய்யாதுதானே ஏலேலோ. (589)

சுகன் விதி யாரெட்டீ ராறில் யேகச் சுங்கன் பகை நீச மேக தகமை யோரோன் மதி நாலோன் கூடிச்சாரக் குஜர்க் காறதனில் (முடுக்கு) சாற்றுவன் நாலவன் திசைதனிற்றனே யேற்றபமானத்திரையோன் புசிப்பில் மாற்றிடும் வாகனந்தன் னுலிவனும் மாரகம் மத்திபவயதனிற் கூறே ஏலேலோ. (590)

மதிக் கிருபாரிசமும் பாம்பும் மங்களனுங் கேது கரியித மாய் மேரு பெலனறவே யவர்க்கெட்டோன் மதிகண்டம்வர



(முடுக்கு) யேங்கிடுங் கிரியோனுக்கெட்டோன் திசைதனிற் பாங் கதாய் யம்புலி நாலோன்புசிப்பில் றங்கலாய் மத்திமவாயிசுதன் னிற் றப்பாமல்யெமன் பதிக்குமே போவான் ஏலேலோ. (591)

பாக்கியனுர் சுபத்தானமேவ விதியும் பண்பு கண்ட மிதில் வர யோக்யயினர் விதியேக மேரு உன்பிலன்ற (முடுக்கு) ரோகன் உற்ற வெட்டோனுக்கு நாலினிலேகபெற்றிடுமாறேன் திசைதனிற்றனே குற்றமா . யெட்டோன் புசிப்பினிலிவனை கொண்டுமே யெமனும் போவனெனக் கூறுய் ஏலேலோ. (592)

இரண்டு வியம்தனில் மதி சேயேக வேழில் விஷமெட்டிற் குரு திரமுடனே பாவர் விதியேகச் செழிக்குமிவன் மத்திமத் தில் (முடுக்கு) செப்பிடு மேழிலிருந்தோன் திசையில் மொப்பிடு மெட்டோன் புசிப்பினிற்றனே கோமெனக் காவலும் கொண் டுமேபோவார் கூறுவீரிவ்வுலதோரறியத்தானே ஏலேலோ. (593)

இருகுருவும் கண்டம்வர மேருயேகப் பாவருடன் கூடித் திரமாயற்போக்கி லாயமிதிற் றேயச்செப்புங் கரிக்கெட்டோ னும் (முடுக்கு) திண்ணமாய் சேய்க்கி கண்டத்திலேற உன்னித மாயச்சுங்கன் விதியோன் திசையில் விண்ணமாய் இருமாரகம் பெற்றோர் புசிப்பில் விள்ளுவீர் மாரகம் சொல்லுவீர் மெய்யாய் ஏலேலோ. (594)

சஞ்சலங்கள் தீர்த்தவெந்தன் வேதாந்த சற்குருவே மலர்ப் பதம் போற்றி பிஞ்ஞகனே இவ்விதமாய் உரைத்தால் பேதை யென்னுலறியப்போமோ (முடுக்கு) வித்தகனே அந்தரத்தினிற் சூக்குமம் யெப்போதும் சுத்தமாயான்றிய மாரகங்கள் எடுத்தோ துவீர்நீரும் சித்தஜனே உன்பதம்சிரமேற்கொண்டே செப்பிடீர் யான்மகிழ ஒப்பிடீர் நீரே ஏலேலோ ஏலேலோ தத்தெய்யா ஏலே லோ ஏலேலோ. (595)

களத்திரபாகம் கப்பல்.

கரிக்கேழில் புகர்வரவே யந்தக்காளையனு நீசமாயிருக்க (முடு க்கு) கனலோனும் அன்னையுங்கூடியே நிற்க விளமாயதற்கேழில் மாலுமேயேக மணமது மூன்றுடன் செய்துமே பின்னுல் மாண் டிடும் அந்தியகாலத்திற்றனே ஏலேலோ. (596)

பொன் மூடமாயிருக்கச் சேயும் போகமதிற் றனேக (முடு க்கு) பொங்கிடுங் காமனும் பாம்புமே கூடமங்கிய நாலினிற் கரி புகருமேவ வங்கணமாகவே களத்திர மிரண்டும் மாண்டிடும் அந் தியகாலத்திராதே. (597;

சப்தனும் கிரியுங் கூடிக் கரிக்கித் தானுவில் மேவிடவே (முடுக்கு) சந்திரசப்தமம் பொன்னவரிருக்க வந்திடப் பாவ ரிருந்திடவுநோக்க சுந்திரமாக களத்திரயேழும் சொல்வது தங் காது தங்காது மெய்யே ஏலேலோ. (598)

பாக்கியனு மிழிவாகி யேழோன் பகையேக குரு வியமாகப் (முடுக்கு) பண்புடன் சேய் புகராகுமேகூடி தென்புட னெட்டினி லேகிடத்தானே இன்பமாய் பெட்டுக்களத்திரஞ் செய்யில் இறந் திடும் அந்தியகாலத்திற்றனே ஏலேலோ. (599)

குடும்போனும் பகையேர யேழோன் குலமழியக் கரிபுகர் கூடக் (முடுக்கு) குன்னியே யேழோன் மார்த்தாண்டனும் பாம் பும் மன்னியே கூடித் தனமீதிலேக வண்ணமா யைந்து களத்தி ரஞ்செய்து மாளுமே அந்தியகாலத்திராதே ஏலேலோ. (600)

சேய்கரியு மெழில்நிற்கச்சுங்கன் தினகரனுந்தான்கூட (முடுக்கு) செப்பிடுயேழவன் வியமேறத்தானே ஒப்பியே மனை மதுசெய்யானிவனும் வெப்பியே கைம்பெண்ணுடன் கூடிவாழ் வன் விண்ணினிற் களத்திரத் தியாகனுவன் ஏலேலோ. (601)

குரு மதியு மே ழில்வர அதைக் கொடுமையுள்ளோர் தானேக்க (முடுக்கு) குன்னியே காரி குடும்பத்தை நோக்க மண் ணினிற் களத்திரமது மாளுமேயல்லாமல் உன்னியே யவ்வழி யைச்சாடுமே சாடும் உதவாது அந்தியகாலத்திற்றனே ஏலேலோ. (602)

வெள்ளி பெலவீனுகப் பொன்னும் மேருவினிற்றனேக (முடுக்கு) மேவிடக் கரி யரவம்பாக்கியம் நாலிற் தாவியே இர விக்கு யேழினிற் சேயும் ஆவிபோய் மாளுமே களத்திரமெல் லாம் அந்திய காலத்திராது மெய்யாமே ஏலேலோ. (603)

ஏழவனு மாட்சியேகத் தீயர் இருபுரமுந் தானிருக்க (முடு க்கு) இருவருங்கூடிட யேழோன் மதியும் மருவிடச் சுங்கர்க்கு மேழினிற்றனே வருமது களத்திர மூன்றுடன்றனே பாண்டி டும் அந்தியகாலத்திற்றனே ஏலேலோ. (604)

சுங்கன் பெலமாயிருக்க அதிற்றுன்னிடவே பாவர் தானே க்க (முடுக்கு) சூரிய னேழோனிருந்திடுமதற்கு உறியோன் வியத் தினிலேகிடத்தானே அறுபட்டு மனைவியும் மாண்டிடுவள் மெய் யே அந்தியகாலத்திலிருந்து முதவாளே ஏலேலோ. (605)



யேழவன் சுங்க னரவங்கூடித் திரியில் யேக விழியோர் நோக்க (முடுக்கு) யேககுடும்பனு மாறினிற்றனே மோகம் பரஸ்திரி மனத்தனுமாகி தாகங்களத்திரம் பட்டுமே பின்னால் தரியாது ஒருநாளும் நில்லாது மெய்யே ஏலேலோ. (606)

ஏழதனில் குரு வரவே யேழோன் ஏகிடவும் விதி தனிலே (முடுக்கு) யெண்ணியே பாபத்தில் யேகிடவும் நோக்க உன்னும் பரத்தையர் வீடதிற் சேர்ந்தே வின்னங் களத்திர மாகிடுந்தானே வெகுபாவி வெகுபாவி களத்திர துரோகி ஏலேலோ. (607)

ஏழோ னெட் டமாறில் மேவப் பாவர் யேழதனிற் றனி ருக்க (முடுக்கு) யேங்கக் குடும்பனும் காரியு நோக்கத் தாங்கள் களத்திர தியாகவானுகி ஒங்கும் விவாகமது காந்தருவமாக உத வாது வந்திய காலத்திற்றனே ஏலேலோ. (608)

சுங்க னேழோன் தீவீடேறச் சேயுஞ் செல் லிரண்டிற் றன் வரவே (முடுக்கு) செல்லுங் கரி ரவி சேர்ந்துமே நோக்க வெல்லுமிவன் காமியுமாகி அல்லல் புலஸ்திரி தன்னுடன் சேர்ந் தும் அந்திய காலத்திற் பெண்டீரிராதே ஏலேலோ (609)

கடலதுவே ஜோசியமாம் கப்பல் கட்டு நவக்கிரகமதாங் (முடுக்கு) கட்டிடும் பாய் மரம் சாஸ்திர வினயம் ஒட்டிடும் சுக் கரனுபோகச் செய்கை தட்டுமே ஓடுகிறது சாஸ்திரந்தன்னை தவறாமற் பானிதம் செய்கிறது தானே ஏலேலோ. (610)

நங்கூரம் சொல்வார்த்தை யிதை நாடி யிந்தவிதங் கூறில் (முடுக்கு) நழுவாது நழுவாது சோதிடம் மெய்யே வழுவாது ஒரு நாளு மூன்றிலே கூறில் நலிவந்த காலத்தில் பாராதே ஜோஸ்யம் அரங்கனைப் போற்றியே வோட்டடாகப்பல் ஏலேலோ ஏலஏலோதத்தெய்யா ஏலேலோ ஏலேலோ. (611)

களத்திர வண்ணம்.

ஏழில் ராகுவிருக்க யேழோனுமே மாலுங்கூடி கருமத்தி லேகிட சாலவே கரிதநனத்தை நோக்கிட ஆலயத்தில் புணருவ னுமிவன் அறுத்த கழுத்தியிடத்தில் வசப்படு தன்தனத்தை யழித்திடு மோகனன். (612)

மதியு மாறினிலேக வேழோனுமே மன்னிடு மலியாகவே சுங்கனுர் பதியமானுமே யதைநோக்கிட இப்பாலன் பெண்டீ

ரான்ரூப மாகுவன் பருத்தலைச்சி சிறுத்த முலைச்சி வெறுத்த காமத்திலுறக் காமத்திரேகத்தி. (613)

இராமனேழோ னதை பாவர்நோக்கிட யேழவ நீசமாகக் குடும்பனும் தாம் ராகுடன் கூடச் செய்நோக்கிட தருகுவன் பிறரையிவன் பெண்டிரும் சட்டமுகத்தை மினிக்கி மயக்கிடு மெத்த பரத்தையெனத் தெரியார்களோ. (614)

ஏழவன் சனி ராகுடன் கூடியே யேக வஞ்சி லிரண்டோனும் நோக்கிட வாழவேழிற் சுங்கனிவன் பெண்டிரும் வையகத்தில் பரத்தை யெனலாகும் பட்டியிவள் வெகுகெட்டமனத்தையும் முட்டப் பரித்திடு தட்டுவளாமிவள். (615)

எட்டவ னஞ்சேர னேழிலேகிட யேழவன் கரி தானுமே கூடிட தொட்டுத்தாலியுங் கட்டுத்தார மாகாளொரு நாளுமே முரட்டு சிரிக்கி திருட்டில் மிகுந்த உருட்டு புரட்டுகள் செய்திடு நீலியாம். (616)

பத்தவன் ராகு வேழோனும் கூடியே பதிய வாறிற் சேயுமிரண்டேற உத்தபெண்டிர் விதவையுமாகியே வுன்னியே பிறர் போகஞ் செய்குவள் உருண்ட விழிச்சி திரண்டமுகத்தி இருண்ட கருப்பி வரண்டில் மிகுத்தி. (617)

இண்டவன் புகர் சுங்கன் பதியேக அங்கத்தைக் கரி நோக்கிட சேயுமே கொண்ட சப்தமன் கூடிடப் பெண்டிரு முண்டையாகிப் பரத்தையு மாகுவள் குலுக்கி மினுக்கி யறுக்கி மயக்கி உருக்கி கருக்கி பரிக்கமனத்தவள். (618)

எட்டவ னுலினி லேழவ னுட்சியாய் யேகநட்பினி பொன்னவர் நோக்கிடத் தொட்டிடும்பெண்டிரு மவமங்கிலியாகிச் சோரறைமேவி யேகுவளா மிவள் சோரத்தில் மனத்தி பரத்தி காமத்தில் மிகுத்த மனத்தி உத்த திரேகத்தியாம் ஊருக்குப் பெண்டிரு மாகுவாளே. (619)

## களத்திர பாவம் கண்ணிகள்.

ஏழதனில் நின்றவனும் இனியதனைப் பார்த்தோனும்
யேழவனு டன்சேர்ந்தோ னிவர்வருவர் மாரகமாய். (620)
சப்தமத்துக் கெட்டிற் றுனிருந்தோ னதற்குடையோன்
சப்தமத்துக் காரிற்றுனிருந்தோன் மாரகனும். (621)
ஏழவனுர் தன்றிசையில் இரு மாரகர் புசிப்பில்
காளையுட பெண்டிர்க்கு கருதுவீர் மாரகமே. (622)



சப ்தமத்துக் காறி றுனிருந்தோ னதற்குடையோன்
புத்திர தானத்திருந்தோன் புசிப்பதனில் மாரகம்மாம். (624)
சுங்கற்கு ஆறிற் றெட்டு நின்றோன் றன்றிசையில்
சுங்கற்கு வட்டோன் புசிப்பில் தோகையரு மாரகமாம் (625)
சந்திரற்கு மேழிற் றனித்திருத்தோன் றன்திசையில்
மந்திரிக்கெட்டோன் புசிப்பில் மங்கையரும் மாரகமாம். (626)
குடும்பத்தோன் தன்திசையில் குணமேரு தன்புசிப்பில்
கடன்படித்துபண்ணிவைத்த அக்கன்னியரு மாரகமாம். (627)
எழுக் காறோன் திசையில் இராமனுக் கெட்டோன் புசிப்பில்
காலன்பதிசேரக் கன்னியரு மாரகமாம். (628)
பத்தவனுர் தன்திசையில் பழிங்குக்கெட்டோன் புசிப்பில்
சத்தமங்க ளெல்லாந்தருமே மாரகமாம். (629)
குடும்பத்துக் கெட்டோன் திசையில் குருவுக்கேழோன் புசிப்பில்
வடுபட்டு மங்கையரு வாடிநொந்து மாரகமாம். (630)
இந்தவிதமாய்க் கூறுவது யெத்திசையென் றேக்கங்கொளில்
முந்தியுரைத்த தனை யோர்ந்து மதைத்தான்கூறே. (631)
கூறும்பொழுது குறிப்பறிந்து சப்தமங்கள்
மாளுமென்ற சாதகர்க்கு மகிழ்ந்துரையு மாரகமே. (632)
வாழிமீதிருந்து வாக்குக்கொடுத்தாற்போல்
ஆழிக்குத் தான்கதைபோல் அதுவறிந்து சொல்வீரே. (633)
ஆயுட்பாகந்தனையே அன்புடனே மூன்றுவிதம்
மாயுருவேதமுரைத்த மாரகங்கள்சொல்வேனே. (634)
சொல்லும் மாயுட்பாவம் சொற்றிருகல் ரொம்பஉண்டு
வெல்லும் பெரியோரை மேவிவினுகுவீரே. (635)

அன்புடனே யானும் ஆயுட்பாக முறைக்க
தும்பிக்கையாழ்வார் துணைவரவும் போற்றிசெய்தே. (636)

## ஆயுட் பாவபலன் ஏசல்.

---

சாஸ்திரங்கள் நிறைந்தயெந்தன் தர்மகுருவே யுரைத்ததெல்லாம் அந்த சந்தேகந்தீர்ந்ததையா அந்தமானியோர் வசனங்கேளாய். (637)

உயிர்திசைக ளுடற்றிசையும் உண்மையுடன் காலச்சக்கர திசையும் ஸ்புடம் ஒங்குகல்லவர்க்கமுடன் பாங்குவட்டவர்க்கமுதற்றுனே. (638)

கோள்கொடுத்த சுத்தாயிசுகொண்டு நிரியாணஞ் சொல்ல வேணுமென்று கூறிநீரே யதைபுரைத்தால் பாரிலுள்ளோர் நகையாரோ வென்னை. (639)

நகைப்பது யென்னத்தினுல் நாடியதை நீயுசைப்பாய் பாலா நன்மனதின் படியதனை தன்மையுடனுரைப்பாயெந்தன் சீலா. (640)

உரைத்தருளு மென்குருவே யுயரும் நவக்கிரக நிலைநோக்கிக் கூற உத்தமனே நீயுரையும் வித்தகனே உன் பதங்கள் போற்றி. (641)

எட்டவன் சொட்சேஷத்திர நட்பில்யேக கரியாட்சி யுட்சமாக அதை இனிமையுள்ளோர் நோக்கமுறநூறுண்டாய் வாழ்வன். (642)

விதிக்கிருபாரிசத்தில் நல்லோர்மேவக் கரிகட்பேரவிரண்டோன் யேழோன் இவர் நட்பேகத் தவத்தினுற் பூரணுபிசுதான். (643)

திரிவிதியு மாட்சியேகச் செழுமையுள்ளோர் நோக்கமுறமேழிற் சுங்கன் தியர்விழி நோக்கறவே மாயன்பூரணுபிசுதானே

விதியிரண்டில் வாழ வேழோன்மேரில் லரதிரிபாக்கியந்தனில் சுபர் மேவநோக்கரக்குருவிதியை விழித்தவாயுள் தாமே.

ஆரெட்டோன் வியமேக அருள்கிரியில் விதியிற் குரு சுங்கன் மேவ அந்தமுடனுயுள்மிகவிங்தையுடன் பூரணமாயோதே.

மர்மதி சுங்கர்க் கேழில மன்னகுரு நாலி லேழோன் காரிதியோர்மருவ விழிநோக்கறவே பருவமுடன் பூரணுபிசுதானே.

சுபர்மேறிற் பகையற வேதுன்னும் விதிகுருவும் பாக்கியமேற வதிதுங்க விதிதனை நோக்க மங்களமாய் நூறுண்டாய் வாழ்வன். (648)

கரி விதியும் சிரி மதியும் கர்னே மதிக்கெட்டோனு மாட்சியேறக் கடலுலகில் வெகுகாலமுடனிருக்குமென விதனையுரையே

கரிக்கி விதி நாலிற் சுபர் காரிக் கிரண்டினில் மதியுமேவ விதி கட்டிநட்பி லேகிடவே யிட்டமுடனுயிசு பூரணமே. (650)

திரியில் விதி யிருபாரிசந் தென்னவன் சுக்கிரன்மேவ மதியுங்கிரி செழிக்குஞ் சுங்கர்க் கேழாய்நிற்கமாயுள் மிகவெனவேயோதும். (651)



கரிக்கு நாறில் ரவிசேயிவர் சுனத்த கோண மதி சகடமில்லாவாறேன் கட்டிவியத்தோ னிரண்டோன் வொட்விச் சுபர்திர்க்காயுள்தானே. (652)

நாலு கண்டத்தார்கள் கோணம் நண்ணிடவே சனிக்கேழில்தியர் அற நண்ணுங் குரு விதியை நோக்க நெடுநாளாக வாழ்வன். (653)

குசன் கரியை நோக்கறவே குருநோக்க மூன்றவனுமேறும் மதிகூட மூன்றேநட்பாக நசடிவெகு வாயுளென வுரையே. (654)

விதி மதி சுபரங்கிஷம்வர விதி மதி யிராசியாதிகூடிச் சுபம் மேவ விதிமதிக் கேழ்நால் பாவரறப் பூரணுபிசுதானே. (655)

சனிமதிக் கெட்டிற்சேய்புந்தி அட்டமனுர் வியந்தியோரேழோன் நாலிற்றமனியனுர் நீக்கிடவே குமரனென நூறுண்டு வாழ்வன். (656)

யெட்டவனுக்கிருபாரிசமும் யினிமையுள்ளோரிருக்க கரிக்கேழ் நால்சுங்கன் இருதுருவுமிருக்க மதி இரவிக்கு வியமாகவாயுள்மிகவே. (657)

சுபர் விதியிலேகக் கரிசொல்லு நட்பிலேகக் கரிநாதன் இரண்டோன் சுகமேவ கூடியேதான் தகமையுடன் பூரணுபிசுமாமே. ()

கரிக் கிருபக்கத்தி லாறில் கதித்த சுபரிருக்க விதியாட்சி நட்பிற்காணக் குருநாலிலேக மேன்மையுடன் பூரணுபிசுமாமே. ()

விதிக்கிப் பன்னிரண்டி லெட்டில்மேவ மதி புகர் காரிக்காறில் நட்போர் மேவக் கரிநாவன் சுபமாகவாயுள் விருத்தியெனயுரையே.

ரோகம் விதி வியத்தி னிவர்ஒருவருக்கு நாலாகமேவ இவர் உடன் சுபர்நல் நோக்கமுறத்திடமுடனே யாயுள்மிகவோதே. (661)

எட்டினுக்கெட்டோன் மதியும் இருவர்தசமேவக் குரு மூன்றில் யேற இனிவிதியு கரியுமாட்சி யேகிடவே யாயுள்மிகவாமே. ()

ஆயுள்மிக வாகுமென்று அன்புடனே சமுதாயமாகக் கூறில் அடியேனன்றுய் தெரியப்போமோ வடிவான ஸ்புடமாகக்கூறும். ()

கூறுமென்று கேட்டபிள்ளாய் குன்னுர்க ளன்பதுக்கு ளிவரும் பின்னுற் கூறுதிசை புசிப்பதனுல் பாரிலுள்ளோர் நிசங்கள் கொள்ளத்தானே. (664)

கொள்ளுமென்ற என்குருவே குவலயத்தினுதித்த மைந்த னறையிற்றுனே கொடியனமன் கொடுபோவ தடியேனுக்கு வருள் புரியுந்திருவே. (665)

ஜெனன முதலீராறு திங்களாண்டுக்குள் மடியுமதற்கு பரலா திங்கரிட்டமெனவிதற்கு பாங்குடனே மேறுமாணுக்கா. (666)

பாலரிட்டமெனவுரைத்தீர் பாலகர்க்குத்தான் றெரியவுரையு முந்தன் பாதமதை நமஸ்கரித்தேன் நாதனே நீ யெனக்கருளுங் குருவே. (667)

73-வது பக்கம் பாலாரிட்டம் பார்க்க

## மத்திம ஆயுசு பாவம் நொண்டிச்சிந்து.

---

கூறுவேன்மிகமகிழ்ந்து நீயுங் கூர்மையுட னதைத் தானறி வாய் ரோறறியதான் மறைபாடவே பூரணவாயுசுகேள். (668)

கோணகண்ட மீதினிலே சுபர் கூடிட மேரு பொன்னுலி லேக ஊனமற்றுமே விதியும் ஆட்சி யுட்சங்களே பெற காரிநிட் பில் உதிக்கப் பூரண வாயிசிற் சதிக்கக் காலனும் வந்து சென் மாதிக்கட்டமனுர் திசை செப்பு மிதிக்து மெட்டோன் புசிப்பில் இனிமையாகவே யிவனும் மாள்வனென்றுமே முன்னோர்கள் தானுரைத்தார் இதுவை யறிந்து நீரும் மிதமாய்ச்சொல்வீர் பாரில். (669)

அட்டமத்தில் மீதில் நின்றேன் அம்புவிக் கெட்டோன் புசிப்பில் மாள்வன் கட்டிரோகமதில் நின்றேன் வரில் காரிக் கெட்டோன் புசிப்பில்தீது கருகிமடிவனென்றே பருகக்கனிந் துரைப்பீர். (670)

எட்டில் நாலில் பாம்பேக அந்தவீரன் பகை நீசந்தான் யோக கொட்டும் ராகுதன்திசையில் விஷங்குன்னிய விராசி யோன் தன் புசிப்பில் குன்னக்காலனும்வந்து தன்னைக்கொண் டுமே போவன். (671)

தருமனேழிலேகிடவே யதை அட்டமன் நோக்கிட வத்திசை யில் கருமன் புசிப்பிலேதான் இந்தக் சாளையை யேமனும் தானும் வந்து கட்டிப்போவனென்று தட்டிச்சொல்வாய் பாரில். (672)

பாக்கிய னம்பு மீதிலேக அந்தப்பரமன் விதியிற் றுன்போக யோக்கிய பஞ்சமன் திசையில் மதியுத்த விதியானவர் புசிப்பில் லுன்னியெமபுரத்தில் நண்ணுவானென்றுறை. (673)

நாலோன் மதிக்கி யேழில் அவர் நாடிட வவ்வீரன் ரோக மேவ கோலிச் சுகன்திசையில் அனல் குன்னு மதற்கெட்



டோன் தன்புசிப்பில் கொப்பமாகவேயிவன் செப்பமுடன் மடிவன். (674)

திரியோன் மதி யம்பினிலேகச் செப்பமுடன் மதி யாறிற் போசபுரியு மூன்றின் றிசையி லிவர் புக்கு மதற்கு மாறேன் புசிப்பில் புகழப்பூரணவாயிசில் இகழ மடிவன் கூறுய். (675)

தனத்தோன்றிசை தனிலே ஆறில் சார்ந்தவனுருட தன் புசிப்பில் குணமாகத்தான் வாழுங் காளே கொப்பென மாளுமென் றிப் புவியில் கூருவீர் கிரகங்கண்டு பாரோரறியவிண்டு. (676)

குடும்பொ னுலிற்போக அந்தக்கொற்றவனுதற் கேழிற்போக திரமாயிரண்டில் நின்றேன். திசைசெப்பக்கரிக்கு வியத்தோன் புத்தி தீங்காகவிவனு வோங்கி மடிவன் கூறீர். (677)

பாக்கிய விரையாதி ரோக பத்தியமேவந்து கரிக்கு ரோக தாக்கிட வவன்றிசையில்மேவுந் தாரைக்கி யேழோன்புசிப்புதனில் தண்ணில் மடிவனென்றே மண்ணிலறைகுவீரே. (678)

பத்தவன் றிசைதனிலே வெண்பளிங்குக்கு மெட்டோன் புசிப்புதனில் சத்துவங்கள் தான்குலைந்து இவன் தப்பாமல் மாளுவனிப்புவியில் தப்பாவிடாதே யென்று செப்பமுடனே கூறு. (679)

இலாபாதி தன்திசையில் அந்த லாபத்துக் கெட்டோன் புசிப்பில் மாள்வன் மாபாவி வியத்தோ னுறில் அவர் மன்னிட வாறேன் திசைதனிலே மண்ணில் விரையன் புத்திதன்னில் மடிவன்கூறுய். (680)

யேழில் ரெண்டில் ராகுவர அந்த வீரன் கண்டமீதிலேகிடவே கோழும் ராகுதன்றிசையில் அக்கொற்றவனுருடதன் புசிப்பில் கொல்லுமிவனைத்தானே விள்ளுமிதையறிந்து. (681)

எட்டில் நாலில் பாம்பேக அந்த இல்லரத்தோன் பகை நீசமேக தொட்டும் பாம்புதன் றிசையில் அக்கொற்றவனுருடதன் புசிப்பில் கோலமாகவே யேமன் சாலவே கொண்டுபோவான். (682)

எழிலிருந்தோன் வரில் அதற் கேழிலிருந்தோன் புசிப்பில்தீது வாழு மெட்டிலிருந்தோன்வரில் வக்கணக் காரிக் கெட்டிலிருந் தோன் வங்கணமாய்வரில் சுந்தரனைக்கொல்வன். (683)

தனத்தி லிருந்தோன்வரில் மதிதனக்கு மேழிலிருந்தோன் தீது குணமா குணமாகத் தானிதனைக்கண்டு கூறிடப்பொய்யாது இவ்வுலகில் குற்றமதனைக்கண்டு நத்தியுரையும் நீயே. (684)

[illegible]ரிக்கி வி[illegible] யாரேன்கூடிக் கண்டத்திலேக விதிநோக்க திரமாய்ச் சுன்னுமேருன் திசை கரிசேருமதற்கு மெட்டோன் புசிப்பிற் நீங்கதாகவேகொல்வன் சாங்கமாகவே யுரைப்பீர். (685)

சொன்னேன் மத்திமவாயுசு இந்தத் தொல்லுலகத்தில் பூர்ண வாயிசுந் தன்னையுமே யுரைத்தேன் அதைச்சார்ந்து வாயுட்பாகந் தானுரைக்க தந்தன்வினையதாற் சுந்தரமாய்க்கூறும். (686)

பூரணத்தி லன்பதுக்குள் திசை யுத்தியுமே வறிற்றள்ளிவிடு காரண மத்திபத்தில் அதைக்கட்டி யன்பதுக்குள் மாரகங்கூற கருத்தாயிதையறிந்து உறத்து சோதிடங்கூறு. (687)

இந்த விதமாய்க்கூறில் மறை இன்னிலந்தன்னிலே பொய்யாது நொந்துகனிந்துருகிக் கூறநோக்குஞ் சேர்ந்தோர்களை பற்றிச் சொல்வீர் நுணக்கமறிய வெகு கணக்குமறியவேணும். (688)

விந்தையாகவே பிதுர்கள் விள்ளத் தும்பிக்கை யாழ்வார் தன் பதத்தை சிந்தைதனில் நினைந்துயெந்தன் சென்மீதிற் பதந்தன்னை வைத்து செப்பத்துணையாகவே யொப்பவருகவென்று செஞ்சொலாலென்னாலே செப்புங்கள். (689)

முற்றிற்று.

---

நவக்கிரகங்களின் நாமதேயங்கள், நவக்கிரக நாமசூட்சமம் சூசிகை விபரம் சாதகலங்கார விரிவுரையில் விபரமாக சொல்லி யிருக்கிறது.



ஸ்ரீநிலையம் பிரஸ், பெரியகடை வீதி, திருச்சினாப்பள்ளி.